நன்றானபிரதமைசஷ்டி ஏகாதசி
நல்லமயில்துதியை சப்தமிதுவாதேசிகோழி
சென்றானதிரிதிகை அஷ்டடிதிரயோதசி
ஜெபமானகாகம்என்று செப்பலாகும்
மன்றானசதுர்த்திநவமி சதுர்த்தசித்தான்
வகைஆன ஆந்தைஎன்று மதிக்கலாகும்
அன்றானபஞ்சதசம் அமாவாசை
அடவானவலியன்என்று அறிந்திடாயே. 37

98. இராசிப்பட்சி

அறிந்துபார்கர்க்கடகம் மயிலதாகும்
அன்பனேமேஷம் விருச்சிகமும்கோழி
சறிந்துபார்கன்னிசிங்கம் காகம்காகம்
தனதான தனுசுகும்பம் மிதுனம்ஆந்தை
பரிந்துபார்துலாமீனம் சேவல்நூறு
பாலகனே அமரத்தின் பதிவைச்சொன்னோம்

தெரிந்துபார் அறிவுள்ளோர் அறியவேணும்
சிற்றறிவுள்ளவர்க்கிது வாராதுபாரே. 38

99. மயிலின் சத்துரு மித்துரு

வருமென்றஅமரத்தின் பகையைச்சொல்வேன்
மக்களேமயிலுக்கு ஆந்தைகாகம்
பொருமென்றமித்துருவைச் சொல்லக்கேளு
புகழானவல்லூறும் கோழிஆகும்
பருமென்றமித்துருவில் பகையோயில்லை
பகைத்தபோனாலும் உறவுகூடும்
தருமென்றசத்துருதான் ஆகாதையா
தள்ளிவிடசத்துருவைச் சாரொண்ணுதே. 39

100. கோழியின் சத்துருமித்துரு

ஒண்ணுதகோழிக்குச் சத்துருவைக்கேளு
உத்தமனேகாகமுடன் வல்லூராகும்
எண்ணுதமித்துருவைச் சொல்வேன்மக்காள்
இனிதானமயிலுடனே ஆந்தைஆகும்
கண்ணுதமித்துருவின் உறவுநன்று
காசினியிற்சத்துருவின் உறவாகாது
உண்ணுதவெகுகொடுமை வந்துசூழும்
ஒருவரால்முடியாத பகையுமாச்சே. 40

101. ஆந்தையின் சத்துருமித்துரு

பகையான ஆந்தையின் சத்துருவைக்கேளு
பாலகனேவல்லூரு மயிலும்ஆகும்
தொகையானமித்துருவைச் சொல்லக்கேளு
துடியானகோழியுடன் காகம்ஆகும்
வகையானமித்துருவைச் சேர்ந்தகாலம்
வாழலாம்வெகுகாலம் பகையேஇல்லை
நகையான சத்துருவைச் சேர்க்கொண்ணுது
நஷ்டமுடன்பகைபாவம் பழியுமாமே. 41

102. காகத்தின் சத்துருமித்துரு

பழியானகாகத்தின் சத்துருவைக்கேளு
பாலகனேபசுமையிலும் கோழிஆகும்
வழியானமித்துருவைச் சொல்லக்கேளு
வளர்ஆந்தைவல்லூறும் உறவாய்நிற்கும்
தெழியானஎவ்வகைக்கு மித்துருவேவேண்டும்
சீவன்ஒன்றுங்கூடிரண்டாய்த் திரமாய்வாழும்

அழியாமல்இருக்க சத்துருஆகாது
அப்பனேசத்துருவின் பயன்சொல்லாதே. 42

103. வல்லூரின் சத்துருமித்துரு

பலனுனவல்லூறின் சத்துருவைக்கேளு
பார்தனிலேவாழுகின்ற கோழிஆந்தை
நலமானமித்துருவைச் சொல்வேன்மக்காள்
நல்லமயில்காகம்என நவிலலாகும்
துலையானமித்துருவால் வாழ்வார்கோடி
துர்ச்சனனும்சத்துருவால் கெட்டோர்கோடி
வலனுனமித்துருவே உறவதாச்சு
மாறுனசத்துருவாற் பகைஉண்டாச்சே. 43

104. மித்துருவின் பலாபலன்

ஆச்சப்பாமித்துருவால் உலகம்வாழும்
அப்பனே ஒருவனைத்தான் அடுத்துக்கொண்டு
பாச்சப்பாகிளைகோடி மகிழ்ச்சிபெற்று
பதிவாகயிருந்துஉற வாடிக்கொண்டு
போச்சப்பாஇனச்சேர்க்கை யாகவாழ்வார்
பொல்லாங்குஒன்றும்இல்லை மித்துருவைத்தொட்டு
வாச்சப்பாமித்துருவாய் சேர்ந்தநேரம்
மனமகிழ்ச்சியாயிருந்து வாழ்வார்பாரே. 44

105. இதுவுமது

பாரப்பாமித்துருவாய் இருந்தநேரம்
பார்தனிலேவரவுசெய்தாற் பலன்உண்டாகும்
நேரப்பாயெங்கெந்த தொழில்செய்தாலும்
நேர்மையுள்ளமித்துருவிற் செய்தாயானல்
சாரப்பாயெவ்வகையும் கைகூடும்பார்
கலந்துஉறவாடியல்லோ பொருள்கள்சேரும்
ஆரப்பாஅறிவார்கள் மித்துருவின்நேர்மை
அப்பனேஅறிந்தவர்க்குப் பகைதான்போச்சே. 45

106. இதுவுமது

போச்சுதடாபகைபோச்சு பொருள்உண்டாச்சு
பூமிதனில்எவ்வகையும் பலிதம்ஆச்சு
தாச்சுதடாதனச்சேர்க்கை மகிழ்ந்தசெல்வம்
மங்களமாய்சோபனங்கள் வாழ்வுநன்று
ஏச்சுதடாகூடிஅங்கே செய்யும்நேரம்
என்மகனேமித்துருவாய் இருக்கவேண்டும்
தாட்சிஒன்றும்இல்லாமல் எல்லாம்ஆகும்
சண்டாளர்சத்துருவை அகற்றிச்செய்யே. 46

107. சத்துருவின் பலாபலன்

அகத்திலேசத்துருவும் மித்துருவும்உண்டு
அப்பனேய்தனுல் சந்தோஷம்துக்கம்
செகத்திலேஅதுபோலே எண்ணவேண்டாம்
தீவினையும்நல்வினையும் ஜெனனக்கூறு
சுகத்திலேயிருந்தவர்க்கு இரண்டும்போச்சோ
துன்பவினை அணுகாமல் அற்றுப்போச்சோ
சுகத்திலேசுப்புகுந்த வாறுபோல
சஞ்சலமும்சுகம்இரண்டும் சரிதான்பாரே. 47

108. இதுவுமது

சரியானமித்துருவும் சத்துருவும்ஒன்று
சடலத்தில்சந்தோஷம் கோபம்ஒன்று
விரிவானஇடம்ஒன்று நலம்பெலனும்ஒன்று
மேதினியில்நன்மைதுன்மை இரண்டும்ஒன்று
குறியானபஞ்சகர்த்தர் இருந்தயிடம்ஒன்று
கூறியேகுவித்தெழுந்த வாசிநிலைஒன்று
நெறியானசீவசெந்தைப் படைத்தபொருள்ஒன்று
நிலைஇருந்தயிடத்திலல்லோ இடர்உண்டாச்சே. 48

109. இதுவுமது

இடரானசத்துருவின் பகைபொல்லாது
எண்ணியதோர்காரியங்கள் கூடுவதும்இல்லை
படரானபொருள்சேதம் உறவுபகையாகும்
பார்தனிலேசத்துருவின் பலன்தானப்பா
கடலானசோபனமும் முடியாதையா
கனிவாகுடியதுவும் வாழ்வதில்லை
வடமானபொருள்சோரம் ஆகும்பாரு
வழக்கிலேபோனுலும் வெல்லான்தானே. 49

110. இதுவுமது

தான்என்றசத்துருவை முடியாதென்று
தரணிதனில்நன்மையாய் இருப்பதில்லை
கோன்யென்றசிவன்செயல் என்றுலகம்பேசும்
கொடுமையுள்ளநேரம்யென்று அறியமாட்டார்
வானென்றநேரமது அறிந்தபெரியோர்கள்
வழியானநேரமென்று மகிழ்ந்துகொள்வார்
ஆனென்றமனமிடைஞ்சல் வாராமல்தான்
அப்பனேநேரமதை அறிந்துகொள்ளே. 50

111. இதுவுமது

அறிந்துகொண்டுசத்துருவைச் சேர்த்தாயானல்
அப்பனேயறுபத்து நான்கும்ஆடும்
தெரிந்துகொண்டுளதிரியுடப் பக்ஷிக்கப்பா
சினமானசத்துருவைச் சேர்த்துக்கொண்டு
சரிந்துகொண்டுசெய்கிறவன் பக்ஷிக்கப்பா
தன்மையுள்ளமித்துருவைச் சேர்த்தாயானல்
பரிந்துகொண்டுசெய்ததொழில் பலிக்குமப்பா
பார்தனிலேயிதைவிட்டால் பலியாதுபாரே. 51

112. இதுவுமது

பலியாதேசத்துருவைச் சேர்க்காவிட்டால்
பங்கமறுபங்கத்திற் பழுதோயில்லை
வலியாதேமித்துருவைச் சேர்த்துக்கொண்டால்
மனம்நினைத்தபடியங்கே முடியாதையா
சலியாதேசாஸ்திரத்தைப் பழுதென்றெண்ணி
தான்நினைத்தபடிசெய்தால் பலிக்குமோசொல்
சலியாதேகைபாகம் செய்பாகம்தப்பிக்
கண்டபடிசெய்ததினுற் கனிவாகாதே. 52

113. இதுவுமது

கனியாதுமனதிற்கு ருசிகொள்ளாது
கற்போலேயிருந்துவிடும் கடக்கத்தள்ளு
பணியாதுகருக்குருவும் காணவிட்டால்
பாவைபோல்இருந்துவிடு பலிதம்இல்லை
குனியாதுநிமிராது குணம்செய்யாது
குணமாகமாட்டாது சத்துருவைவிட்டால்
தணியாதுஅஷ்டகன்ம வித்தைஐயா
தானுடமாட்டாது தணிந்துப்போமே. 53

114. இதுவுமது

தணிந்துப்போம்பட்சிவித்தை பலிதம்இல்லை
தனதானமித்துரு சத்துருவைவிட்டால்
குனிந்துபோம்எத்தொழிலும் குணம்செய்யாது
கூடிவரப்போறதில்லை அறியாவிட்டால்
கனிந்துபோம்நன்மையிலே நன்மைசெய்யும்
கடிதானதீமையிலே தீமைசெய்யும்
அணிந்துபோம்நேரமங்கே முன்பின்னுக
அசதியாய்ப்போகாமல் அறிவாய்த்தானே. 54

பொதுப்படலம் - முற்றிற்று.

சிந்தனைப் படலம்

115. அசுவனியின் பலாபலன்

சொல்லுவேன் அசுவினிதான் உதயமானால்
சோர்வானஜனவரத்தும் பொருள்வரத்தாம்
வெல்வதேநினைத்தபொருள் கைவசமேசேரும்
வெல்லவரும்பகைஞருமோ உறவுவரும்பாரு
நில்லவேசோபனங்கள் கூடுவது திண்ணம்
நினைத்ததொருசிந்தனைதான் மஞ்சள்நிறமாகும்
பல்லவேபட்சிபகை இல்லாவிட்டால்
பலிக்குமடாநாள்எட்டுக் குள்ளேபாரே. 1

116. இதுவுமது

உள்ளானஊண்பகையே ஆடுங்காலம்
உத்தமனேவிலைதணிந்த பொருளுமாகும்
வெள்ளானகிழங்குவகை என்றுசொல்லு
மேதினியிற்பிறர்வருவார் செலவுகாணும்
தள்ளானபின்னுதவி சற்றும்இல்லை
சஞ்சலங்கள்மனதிற்குத் தானேதோன்றும்
கொள்ளானஇப்பலன்நாள் பதினைந்துக்குள்
குணம்ஆனநன்மைதுன்மை கூடும்காணே. 2

117. இதுவுமது

காணுமேஅரசுபகை ஆனால்மைந்தா
கைப்பொருளேசெலவாகும் வரத்தொன்றில்லை
தோணுமேகிளைஞர்களிற் சேதம்உண்டு
சொற்பெரியபிரபுபகை ஆகும்பாரு
வேணுமேபெண்டுபிள்ளை பகையும்ஆகும்
வினையில்லாப்பொருள்என்று சொல்லல்ஆகும்
கூணுமேஇரண்டுபத்து நாளைக்குள்ளே
அணுகும்அடாஇப்பலனை அறிந்துபாரும். 3

118. இதுவுமது

அறிந்துபார்ஊண் அரசு பகையேஆனால்
அப்பனேநினைத்தபொருள் ஒன்றும்இல்லை
தெரிந்துபார்அப்பொருள்கை வசப்படாது
சிக்குவதுஒன்றில்லை சேதம்ஆகும்

சரிந்துபோம்நோய்வரும்பின் பகையுமுண்டு
தள்ளிவிடுபலிதம்இல்லை என்றுசொல்லு
நெரிந்துபோம்மூன்றுபத்து நாளைக்குள்ளே
நிலைதவிரும்நன்மைஎல்லாம் தின்மைஆமே. 4

119. இதுவுமது

தின்மைஒன்றும்இல்லையப்பா பகையில்லாவிட்டால்
தினம்ஐந்துக்குள்வரத்து மெத்தஉண்டு
நன்மைஎன்றகாரியங்கள் மிகவுங்கூடும்
நடக்குமடாநினைத்ததெல்லாம் நன்றாய்த்தானே
வன்மைஎன்றதங்கம்என்று சொல்லல்ஆகும்
மனமகிழ்ச்சிசோபனங்கள் திண்ணம்ஆகும்
மென்மைஎன்றபிரபுஉற வாகும்பாரு
மேன்மைஎன்னுல்சொல்லப்போமோ உறவுநன்றே. 5

120. பரணியின் பலாபலன்

உறவானபரணிதான் உதயம்ஆனுல்
உத்தமனேகரும்சிவப்பு நிறமும்ஆகும்
திறம்ஆனநிலங்கள்வரும் உறவுசேர்க்கை
செம்மையுடன்மறுதேசம் போனுர்மீள்வர்
கறம்ஆனஅரசர்உற வாகும்பாரு
கனத்ததொருகெர்ப்பம்அது ஆணேஆகும்
சிரம்ஆனசோபனங்கள் கூடும்நல்ல
செய்திடுமேகேட்கலாகும் தினம்தான்பத்தே. 6

121. இதுவுமது

தினம்ஆகஊண்பகை ஆகாதுபாரு
சிவந்தகருப்பாம்அதுவும்விலை அதிகம்அப்பா
கனமானசோபனத்திற் குலைவுவரும்திண்ணம்
கனத்ததொருபூமியிலே வருமானம்கொஞ்சம்
இனமாகஇருந்தாலும் பகையதர்கும்
இடம்நாடிப்போனவர்கள் இடஞ்சலிலேயிற்பார்
பனமாரப்பசிவேளைப்பசிப் படைத்தல்இல்லை
வந்திடும்பார்நாள்மூன்று அஞ்சும்ஆமே. 7

122. இதுவுமது

அஞ்சாதஅரசுபகை யானல்கேளு
அப்பனேநினைத்தபொருள் விலையோயில்லை
மிஞ்சாதஉறவும்யிலை பொருள்வரத்தில்லை
வேந்தன்உறஒருநாளும் விரும்புவதில்லை

நஞ்சாகிஊர்வழியிற் போனபேர்கள்
நன்மையாம்ஒருபோதும் வருவதில்லை
பஞ்சாகிப்பொருட்சேதம் ஆகும்பாரு
பலன்வருவதிரண்டு பத்துநாள்இதாமே. 8

123. இதுவுமது

நாளானஊண் அரசு பகைஇல்லாவிட்டால்
நலம்பெறலாம்விலை அதிகம்எல்லாம்சேரும்
தாளானசோபனங்கள் கூடும்பின்பு
தரணிதனிற்பிறந்தபிள்ளை தரணிஆள்வன்
வாளானவினைவருவ தில்லைபாரு
மனமகிழ்ச்சிமெத்தவுண்டு உறவுசேர்க்கை
கோளானநாள்ஏழிற் குணமதாகும்
கூடிவரும்செல்வம் எனக்குறித்துசொல்லே. 9

124. இதுவுமது

குறித்துநின்றஊண் அரசு பகையேஆனல்
கூடிவரப்போறதில்லை பகையும்உண்டு
கறுத்துநின்றமனம்போலே வருவதில்லை
கனவுகண்டகாட்சியைப்போல் ஆகும்பாரு
தரித்துநின்றுபோனவர்கள் மீள்வதில்லை
தான்நினைத்தகாரியமும் மணம்கூடாது
மரித்திறந்துபோய்விடும்பார் பிறந்தபிள்ளை
மாளுமேநாலைந்துக் குள்ளேபாரே. 10

125. கார்த்திகையின் பலாபலன்

பாரடாகார்த்திகைதான் உதயம்ஆனல்
பண்புடனேநினைத்தபொருள் கரும்பாம்பாரு
தேரடாபெண்பெறுவள் செலவுநேரும்
தேடியதோர்பொருள் வரத்துஇல்லைஇல்லை
காரடாஉடலில்வந்த பிணிதீராது
கனியானபிரபுஉற வாகாதையா
சேரடாகட்கம்பம் போலேமக்கள்
சிதறுமேநாள்பத்தில் சிதறும்பாரே. 11

126. இதுவுமது

சிதறுமேஊண்பகையே ஆகும்காலம்
சிந்தைதனில்நினைத்த பொருள்கள்மண் ஆகும்
பதறுமேஉடல்உயிரும் கிளையும்சேதம்
பகைவரும்பார் உண்பதுவும்இல்லைஇல்லை

அதிரவேபிறந்தபிள்ளை இறந்துபோகும்
அகலவேபோனவர்கள் மீள்வதில்லை
கதறுமேமூவைந்து நாளைக்குள்ளே
கலங்காதமனங்கூடக் கலங்கும்பாரே. 12

127. இதுவுமது

கலங்குமேஅரசுபங்க ஆனால்மக்காள்
கருத்திலேநினைத்தபொருள் கரிஎரிவும்ஆகும்
இலங்குமேஊர்வழிதான் போனபேர்கள்
இனிவருவதில்லைஎன்றே இயம்பலாகும்
மலங்குமேநினைத்தபொருள் கைகூடாது
மனதிலேதுயரம்அல்லால் மகிழ்ச்சியில்லை
துலங்குமேநாள்எட்டில் பலிதம்ஆகும்
துடியானஅரசுபகை பொல்லாதென்னே. 13

128. இதுவுமது

பொல்லாதஊண் அரசு பகையேஆனால்
புத்திதனில்நினைத்தபொருள் பொற்கரும்பாம்
நில்லாதுசோபனங்கள் நேர்வதில்லை
நினைத்ததொருகாரியமும் வசப்படாது
சொல்லாதுசொல்லும்அடா உயிரைத்தானும்
கூடிவரல்ஒன்றுமில்லை செலவுமெத்த
எல்லாரும்பகையாவர் நாள்அஞ்சுக்குள்
இனிதானசொல்லும்இல்லை இவன்பிழைப்பதரிதே. 14

129. இதுவுமது

அரிதானஊண் அரசு பகைஇல்லாவிட்டால்
அப்பனேநினைந்ததுதான் விலைஉள்ளகருப்பு
நெறியாகப்போனவர்கள் வருவார்பின்பு
நேரம்இல்லைமனதிற்குத் துயரம்இல்லை
குறியானமனம்கூடும் குலவனமும்ஆகும்
கூடியிருப்பார்பின்பு பிரிந்துபோவார்
சரியானநாள்ஐந்திற் பலிதம்ஆகும்
தாம்நினைத்தபடிஅவர்க்கு முடியாதுபாரே. 15

130. உரோகணியின் பலாபலன்

முடியுமேஉரோகணிதான் உதயம்ஆனால்
முழுமனதாய்நினைத்தபொருள் வெள்ளைப்பூவாம்
கடியானமணம்செய்ய நன்மைஆகும்
கடைதேறப்போனவர்கள் வருவார்இப்போ

வடிவாகப்போனதுவும் கைவசமேஆகும்
மனத்துயரம்எள்ளளவும் வருவதில்லை
படிவாகநாள்வழில் நினைத்ததெல்லாம்
பலன்கூடும்சொல்கேட்க ஒலைவரும்பாரே. 16

131. இதுவுமது

ஒருவரும்ஊண்பகையாய் இருந்தால்ஐயா
உளம்நினைந்தபொருள்அதுதான் அழுக்குள்வேளை
சாலைவரும்மணம்கூடும் உறவுசேரும்
தனிவழக்குஉண்டாகும் சலனம்இல்லை
காலைவருதிரேகத்திற் பீடையுண்டு
கசிந்தபலன் இல்லையென்று கருதலாகும்
மாலைவரும்பெண்பெறுவள் பயமும்கொஞ்சம்
மனதிற்குசந்தோஷம் இல்லைதானே. 17

132. இதுவுமது

இல்லையடாஅரசுபகை யிருந்தால்ஐயா
இருதயத்தில்நினைத்தபொருள் கறுத்துவெள்ளை
தொல்லைஅடாகூடிவரப் போறதில்லை
துன்பவினைசூழ்ந்துகொண்டு துயரம்செய்யும்
கல்லைஅடாபொருட்சேதம் ஆகும்பாரு
கனிவானஉறவில்லை பகைஉண்டாச்சு
சள்ளை அடாஅரசுபகை பொல்லாதப்பா
தனில்ஒன்றும்வருவதில்லை சடம்நோவாமே. 18

133. இதுவுமது

நோவாகும்ஊண்அரசு பகையேஆனல்
நொய்யமனம்நினைத்தபொருள் கரியேஆகும்
மாவாகும்பலன்ஒன்றும் இல்லைஅப்பா
வந்தவினைதீராது பழியேசெய்யும்
தேவாகும்மனுஉதவி சற்றும்இல்லை
ஜெடம்அலைந்துபோவதல்லால் பலன்உண்டோசொல்
காவாகும்பகைத்தபேர் வெல்லார்இப்போ
கண்டபடிநான்உரைத்தேன கருதிக்கேளே. 19

134. இதுவுமது

கருதிக்கேள்ஊண்அரசு பகையில்லாவிட்டால்
கனிவாகநினைத்தபொருள் விலைபெற்றவெள்ளை
கருதிக்கேள்மணம்செய்ய நன்மைஆகும்
துலைதூரம்போனவரும் வந்துசேர்வார்

பருதிக்கேள்போனபொருள் வந்துசேரும்
பகைஇல்லைஉறவாகும் உட்பகையும்போச்சு
சருவிக்கேள்நாள்எழிற் பலிதம்ஆகும்
தான்நினைத்தபடிமுடியும் தப்பாதென்னே. 20

135. மிருகசீரிடத்தின் பலாபலன்

தப்பாதமிருகசீரம் உதித்ததானால்
தான்நினைத்தபொருள் இலைபின்பச்சை ஆகும்
ஒப்பாதுநினைத்தபடி முடியாதப்பா
ஊர்வழிப்போனவர்கள் சஞ்சலத்தால்மாய்வர்
அப்பாலும்மணம்இல்லை ஊண்பகையேயானால்
அதனாலும்வரும்என்ற பலன்ஒன்றில்லை
செப்பாதநாள்பத்தில் தீமைவருந்திண்ணம்
ஜெயமாகமாட்டாது எல்லாம்தீதே. 21

136. இதுவுமது

தீதென்றஅரசுபகை இருந்ததானால்
ஜெயமாகப்போறதில்லை வரத்துஇல்லை
தூதென்றஓலைவரும் பொருட்சேதமாகும்
தூரமுமேகூடிவிளை யாடும்பாரு
வாதென்றஇருவர்பகை இல்லாவிட்டால்
மனத்துயரம்வெகுகொடுமை இல்லைஇல்லை
தானென்றநாள்பத்தில் பலனைக்காட்டும்
தப்பாதுநன்மைஇல்லை திண்மைஆமே. 22

137. திருவாதிரையின் பலாபலன்

திண்மைஎன்றசொல்இல்லை ஆதிரைக்கு
சிந்தைதனில்நினைத்தபொருள் நீலவர்னம்
வன்மையென்ற பொருளதுகைவசமேஆகும்
மக்களேஊண்பகைதான் இருக்கொணாது
தன்மைஎன்றஊர்பயணம் போனபேர்கள்
சடுதியிலேவருவதில்லை அரசுபகைஆனால்
உண்மைஎன்றபொருட்சேதம் உறவுபகையாகும்
உத்தமனேஇருவர்பகை இருக்கொணாதே. 23

138. இதுவுமது

எண்ணாதஊண் அரசு மித்துருவாய்நின்றால்
உத்தமனேவருமானம் என்னசொல்வேன்
தன்னாலேகூடிவரும் உறவுசேரும்
தன்மைஉடன் பின்புஉபகாரமாகும்

சொன்னாரேபிறதேசம் போகநன்று
கொடுத்துமணம்செய்யநன்று சோபனங்கள்கூடும்
எண்ணாதேபீடையில்லை நன்மைஉண்டு
எடுத்ததொருகாரியங்கள் பலிதம்ஆமே. 24

139. புனர்பூசத்தின் பலாபலன்

பலிதமடாபுனர்பூசம் சேர்க்கஉண்டு
பண்புடனேநினைத்தபொருள் சிவப்பதாகும்
வலிதமடாஊர்வழிதான் போனபேர்கள்
வருவார்கள்பொருளுடனே மணமுங்கூடி
கலிதமடாஊண்பகையாம் இருக்கொண்ணாது
கனிவானவருமானம் கால்வரிசைகுறையும்
வலிதமடாஅரசுபகை ஆகும்போது
நாடிவரும்பொருள்உடைமை நஷ்டம்ஆமே. 25

140. இதுவுமது

நஷ்டம்இல்லைஊண் அரசு பகைஇல்லாவிட்டால்
நலமானகாரியங்கள் முடியும்பாரு
தொட்டதெல்லாம்கூடிவரும் மங்களங்கள்கூடும்
தூரத்தின் ஓலைவரும் சுகமதாக
வட்டமுலைமாது துணை உண்டுபாரு
மக்களைசிவகலையால் வந்துகூடும்
இட்டமுடன்நாள்அதுதான் இருபதுக்குள்
இசைந்துவரும்நிலம்கொள்ள இனிதாம்பாரே. 26

141. பூசத்தின் பலாபலன்

இனிதானபூசம்அது உதயம்ஆனால்
இருதயத்தில்நினைத்தபொருள் கறுத்தவெள்ளை
கனிவானசல்லியமும் சிலுகும்உண்டு
களவாகப்போனபொருள் கைவசப்படாது
தனியானஊண்பகைதான் மிகுந்தசல்லியம்
தன்மையுள்ளஅரசுபகை ஆகாதையா
துனிவானஇருவர்பகை மோசம்மோசம்
தொட்டதொன்றும்வாழ்வதில்லை துயரம்தானே. 27

142. இதுவுமது

துயரமதுஊண்அரசுபகை இல்லாவிட்டால்
சோரமாய்ப்போனபொருள் பாதிகாணும்
பயிரதுவும்மணங்கூடும் அலைச்சல்ஆகும்
பகைஉறவுநெடுநாளாய் இருக்காதையா

வயிரமுடன்பிறமனுஷர் வருவார்இப்போ
வந்ததினல்பொருட்சேதம் உறவுபகைஆகும்
மயில்அதுதான்நாள்ஐந்திற் பலனேக்காட்டும்
கலங்கும்அடாதுயரத்தால் கலகம்ஆமே. 28

143. ஆயிலியத்தின் பலாபலன்

கலகமடாஆயிலியம் கண்டபோதே
கருத்திலேநினைத்தபொருள் கரிசல்வெள்ளை
விலகும்அடாபோனவுயிர் திரும்புவதேஇல்லை
மேதினியில்நோவுகொண்டார் எழுந்திருப்பதில்லை
இலகும்ஒருசோபனங்கள் கூடுவதுபோல
இருக்கும்அடாஒருபோதும் நடப்பதில்லை
சிலகுளதாம்ஊண்பகைதான் இருந்தால்மோசம்
சிந்தித்தபடிகடப்ப தில்லைதானே. 29

144. இதுவுமது

இல்லையென்றேம்ஊண் அரசு பகைஇல்லாவிட்டால்
இருதயத்தில்நினைத்தபொருள் பலிக்கும்கொஞ்சம்
கொல்லையென்றுபயிர்செய்தால் பலன்உண்டாகும்
கோதையரைமணம்செய்யில் வாழ்வதில்லை
தொல்லைஎன்றுஒருபொழுதும் செயவொணுது
தொட்டதெல்லாம் கூடிவரமாட்டாதையா
எல்லைஎன்றநாள் இருபத்தைந்துக்குள்ளே
இப்பலனேக்கண்டவர்தான் ஏங்குவாரே. 30

145. மகத்தின் பலாபலன்

ஏங்காதேமகமதுதான் உதயம்ஆனல்
என்மகனேநினைத்தபொருள் கைவசமேஆகும்
தப்பாமல்நீசொன்ன படியேயப்பா
தப்பாமல்போனபேர் வருவார்இப்போ
பாங்கிவைத்தான்கொள்வதற்குப் பலன்உண்டாகும்
பாகமுடன்மணம்செய்ய வின்மையாகும்
தூங்காதேஊண்பகைதான் ஆகாதையா
சொல்லொண்ணுதரசுபகை கூடாதுபாரே. 31

146. இதுவுமது

கூடாதஊண் அரசுபகை இல்லாவிட்டால்
கொண்டுசொல்ல வுறவுபகையாவதில்லை
தேடாதுநினைத்தபொருள் கைவசமேஆகும்
தேசத்திற்போனவர்கள் ஜெயமாகவாழ்வார்

நாடாதுமணம்செய்ய நன்மையாகும்
நடத்துமொருபிறர்வுதவி அதிகமாகும்
வாடாதுநாள்பத்தில் பலன்கைக்கூடும்
வண்மையுள்ளமாதர் உறவாகும்பாரே. 32

147. பூரத்தின் பலாபலன்

பாரடாபூரமது உதயம்ஆனால்
பண்புடனேநினைத்தபொருள் பசியப்பிச்சை
நேரடாவூர்ப்பயணம் போனபேர்கள்
நேசமாய்வருவதில்லை மணமும்இல்லை
தேரடாபொருள்உடைமை சேர்வதில்லை
திடமானசொல்இல்லை உறவும்இல்லை
ஆரடாவூண்பகையே ஆகும்கால
அப்பனேகூடுவது அறிதுதனே. 33

148. இதுவுமது

அரிதானஅரசுபகை ஆகும்காலம்
அன்புடனேநினைத்தபொருள் கைகூடாது
நெறியானவூண் அரசுபகை இல்லாவிட்டால்
நினைவிலேநினைத்தபொருள் சிறிதுகூடும்
வரிதானஉயிர்சேதம் வருமேஅப்பா
மணம்இல்லைவுறவில்லை மகிழ்ச்சிஇல்லை
எரியானநாள் இதற்குமுப்பதுக்குள்
எண்ணியதோர்பீடையது விலகும்பாரே. 34

149. உத்திரத்தின் பலாபலன்

விலகுமேஉத்திரம்தான் உதயம்ஆனால்
வினவுபொருள்கருஞ்சிவப்பு விரைவித்தாகும்
பலகுமேபோனபொருள் அசதியிற்காணும்
பழகினபேர்வருவார்கள் பகைவுறவாகும்
இலகுமேசம்பந்தம் கூடும்பாரு
என்னசொல்வேன்வூண்பகைதான் இருக்கொண்ணு
அலகில்லாஅரசுபகை இருந்தால்ஐயா
அப்பனேசஞ்சலத்தில் அழுந்துவானே. 35

150. இதுவுமது

அழுந்துவானேவூண் அரசுபகை இல்லாவிட்டால்
அசதியால்போனபொருள் அடுத்தவரால்வருகும்
எழுந்துதான்வூர்ப்பயனம் போனபேர்கள்
எண்ணியதோர்கருமமுடன் பொருட்சேதமாகும்
கொழுந்தாநீநினைந்தபடி முடியாதையா
கோதையபராற்சல்லியமாய்க் கோபமுடன்வருவார்
நுழைந்தாகும்மூவைந்து நாளையிலேபலிதம்
நொந்துமனம்புண்ணாகி இடைஞல்வரும்பாரே. 36

151. அஸ்வத்தின் பலாபலன்

வருமானகாரியங்கள் அஸ்தமாகில்
மனதிலேநினைத்தபொருள் பலனிறமும்ஆகும்
உருவானபிறதேசம் போனபேர்கள்
உண்மையுடன்மணம்கூடி வருவார்பாரு
தருவானபொருட்சேதம் களவுபோகும்
தப்பாமல்ஊண்பகைய தாகும் ஆகில்
தருவானபோனபொருள் வருவதில்லை
சண்டாளர்அரசுபகை ஆகாதுபாரே. 37

152. இதிவுமது

ஆகாதுஊன்அரசுபகை இல்லாவிட்டால்
அப்பனேபொருள்கூடும் திண்ணம்ஆக
ஏகாதமனம் வாழ்வதில்லை
எடுத்ததொருகாரியமும் நேர்வதில்லை
போகாதேசஞ்சலமாய் இருந்தபேர்கள்
புனிதமுடன்எழுந்திருந்து வாழ்வதில்லை
நோகாதேஎழுஞ்சி நாளைக்குள்ளே
நுவலும்இந்தபலன்கள்எல்லாம் நேரும்பாரே. 38

153. சித்திரையின் பலாபலன்

நேர்ந்துதான்சித்திரைதான் உதயமானல்
நினைத்தபொருள்சிகப்புவெள்ளை மஞ்சளாகும்
கூர்ந்துபார்நினைத்தபொருள் வருவதில்லை
கொடுத்திடுமேசினுக்குசண்டை மணம்கூடாது
சார்ந்துபார்ஊண் அரசு பகையேயானல்
தப்பாதுபொருட்சேதம் உயிரும்சேதம்
கூர்ந்துபார்இருவருடப் பகைஇல்லாவிட்டால்
கூடுவதும்குறைவதுவும் இல்லைத்தானே. 39

154. இதுவுமது

இல்லையேபொருளுடைமை வருவதில்லை
எதிர்த்ததனல் ஜெயமாகப்போறதில்லை
தொல்லையே அனுசரித்து சஞ்சலங்களாகி
தொல்புவியிற்சொல்குறைச்சல் பேருண்டாகி
சள்ளையேமனுஉதவி இல்லாமல்தான்
சஞ்சலத்தால்வெகுதூரம் வந்துசேரும்
கொள்ளையேநாலுபத்து நாளைக்குள்ளே
கூடிவரப்போரதில்லை குணத்தைப்பாரே. 40

155. சுவாதியின் பலாபலன்

குணத்தைப்பார் சுவாதிதான்உதயமானல்
கூடுதன்னில்நினைத்தபொருள் தங்கம்தங்கம்

மணத்தைப்பார்ஊர்வழியிற் போனபேர்கள்
மனமகிழ்ச்சிமெத்தவுண்டு மங்களம்கூடும்
இனத்தைப்பார்ஆண்குழந்தை பிறக்கும்என்றும்
எண்ணியதோர்கருமம்எல்லாம் கைவசமேயாகும்
சணத்தைப்பார்ஊண் அரசு பகைஆகாது
தான்நினைத்தபடி அங்கேமுடியாதுபாரே. 41

156. இதுவுமது

முடியாதேஊண் அரசு பகைஇல்லாவிட்டால்
மொய்குழலாள்பூமடந்தை கிருபையாலே
படியாதேநினைத்ததெல்லாம் கைவசமேயாகும்
பசுமையுள்ளபொருள்கூடும் உறவுமாகும்
கடியானசோபனங்கள் கூடும்பாரு
கடல்கவிழ்ந்தபொருள்கூடும் கவலையில்லை
வடிவானஈரைந்து நாளைக்குள்ளே
மக்களேகூடிவரும் மகிழ்ந்துபாரே. 42

157. விசாகத்தின் பலாபலன்

மகிழ்ந்துபார்விசாகமங்கே உதயமானல்
மனதிலேநினைத்தபொருள் கசப்புள்ளவர்க்கம்
நிகழ்ந்துபார்போனபொருள் தாமிசமேயாகும்
நேரானசோபனங்கள் கூடுவதும்இல்லை
நகந்துபார்ஊண்பகையாய் இல்லாவிட்டால்
நன்மைதுன்மைஇரண்டும்உண்டு நயந்துபாரு
தகர்ந்துபார்அரசுபகை யாகநின்றால்
தப்பாதுதீமைஎன்று தான்சொல்வாயே. 43

158. இதுவுமது

சொல்லாதஊண் அரசுபகை இல்லாவிட்டால்
சொன்னபடிதப்பாது நோயில்மாய்வான்
நில்லாமல்வெகுதுயரம் பட்டுத்தேறி
நேர்மையுள்ளகாலன்வரும் என்றுசொல்லி
பொல்லாதநேரம்என்று சொல்லுவார்கள்
புதுமையுள்ளகருத்தறித்த காலம்பாரார்
எல்லாரும்பகையாகும் நாலைந்துக்குள்
இதுபலனைக்கண்டறிந்து இயம்புவாயே. 44

159. அநுடத்தின் பலாபலன்

இயம்புவாய்அநுடமங்கே உதயமானல்
யெண்ணியதோர்பொருள்வெள்ளி யென்றுசொல்லு
நம்பியேஊணதுவும் பகையேயானல்
நலமில்லைகருக்கள்வெள்ளி என்றுசொல்லு
புலம்பியேஊணரசு பகையே ஆனல்
படிகமென்றபீங்காணும் பதிவாய்ச்சொல்லு

துயம்பியேஊண ரசு பகையில்லாவிட்டால்
துய்யவெள்ளியென்றுசொல்லி துணிந்துபாரே. 45

160. இதுவுமது

துணிந்துபார்பொருளுடைமை கூடிவரும்போது
துணையானசோபனங்கள் நடக்கும்பாரு
அணிந்துபார்பிறதேசம் போனபேர்கள்
ஆள்மோசம்வராமல் வருவார்யிப்போ
துணிந்துபார்சடலத்தில் நோயோஇல்லை
தான்நினைத்தபடிமுடியும் தப்பாதப்பா
குயம்பியேமூணுபத்து நாளுக்குள்ளே
குணமாகக்கூடிவரும் அறிந்துபாரே. 46

161. கேட்டையின் பலாபலன்

அறிவதுதான்கேட்டைஅங்கே உதயம்ஆனல்
அப்பனேநினைத்தது பித்தளையும் * நாறல்
எறிவதுதான்ஊண்பகை ஆகும்ஆகல்
என்னசொல்வேன் அப்பிரகம்என்றுசொல்லி
சரியதுதான் அரசுபகையாகநின்ருல்
தப்பாதுமஞ்சள் நிறமானஓடு
முறிவதுதான்ஊண்அரசுபகை இல்லாவிட்டால்
மொழிந்தபொருள்சொன்னதுபோற் சொல்லுவாயே. 47

162. இதுவுமது

சொல்லுவாய்நினைத்தபொருள் கூடுவதுஇல்லை
சுகமானவனம்இல்லை உறவும்இல்லை
மல்லதுவாய்போனபொருள் வாராதப்பா
மறுதேசம்போனவர்கள் வந்துறவும்இல்லை
கொல்லுவதுதிண்ணம்என்று நின்றநிலைபார்த்து
குறிகுணங்கள்ஆராய்ந்து சொல்வாய்மைந்தா
அல்லதுகோள்நாலெட்டு நாளைக்குள்ளே
அப்பனேஇதுபலனும் அறிந்துபாரே. 48

163. மூலத்தின் பலாபலன்

அறிந்துபார்மூலம்அங்கே உதயம்ஆனல்
அப்பனேநினைத்தபொருள் நிலம்கறைகள்ஆகும்
நெறிந்துபார்ஊண்பகையே ஆகுமாகில்
நேரானஆடுமாடென்றுசொல்லு
தெறிந்துபார்அரசுபகை யாகநின்ருல்
திடமாகச்சொல்லுவது சொற்பலாபம்
எறிந்துபார்ஊண்அரசு பகையில்லாவிட்டால்
என்னசொல்வேன்பொருளுடைமைஎன்றுசொல்லே 49

---

* நாறல் - தாளகமாம்; கெந்தி எனினும் ஒக்கும்.

164. இதுவுமது

என்றுசொல்லுநினைத்தபொருள் கைவசமேசேரும்
இனிதானமணம்கூடும் பிரபுஉறவாகும்
அன்றுசொல்லுஆள்வரத்தால் பொருள்கைசிக்கும்
அன்பானசொல்கேட்டு சந்தோஷம்ஆகும்
நன்றுசொல்லுதன்கிளையின் ஆண்குழந்தையாகும்
நலம்பெறலாம்அதனாலே மகிழ்ச்சிஉண்டு
கண்டுசொல்லு ஐந்துநாளைக்குள்ளே
கனிவாகசொல்கேட்கக் கருதலாமே. 50

165. பூராடத்தின் பலாபலன்

கருதலாம்பூராடம் உதயமானால்
கருத்திலேநினைத்தபொருள் கல்மண் ஆகும்
நிருகமாம்ஊண்பகையே ஆகும்ஆகில்
நேரானஎருவாகும் சாம்பல்ஆகும்
இருநிலமாம்அரசுபகை யாகநின்றால்
எழும்பியதோர்பறவையுட இறகதாகும்
அருமையாம்ஊண் அரசுபகை இல்லாவிட்டால்
அப்பனேகல்இலையும் அறியச்சொல்லே. 51

166. இதுவுமது

சொல்லுவதுநினைத்தபொருள் கூடுவதொன்றில்லை
சோபனங்கள்செய்தாலும் வாழ்வதில்லை
மல்லுவதுபோனவர்கள் வருவதில்லை
மனதிலேநினைத்தபடி நடப்பதில்லை
கொல்லுவதுவிஷதிஷ்டி யாலேமக்கள்
கூடிவரப்போரதில்லை நினைத்ததெல்லாம்
அல்லுவது ஆறெட்டு நாளைக்குள்ளே
அப்பனேஇப்பலனை அறிவாய்த்தானே. 52

167. உத்திராடத்தின் பலாபலன்

அறிவாயேஉத்திராடம் உதயமானால்
அன்பாகநெஞ்சில்ஒன்றும் நினைத்ததில்லை
சரியானஊண்பகைதான் இருந்தாலென்ன
தரணிதனில்அரசுபகை ஆனால்என்ன
கிருதாகஞ்சுதனைச் சோதிக்கஎண்ணிக்
கேட்டதல்லாற்கேட்டதிலோர் பொருளும்காணேன்
இருநிலத்தில்இப்பலனை எண்ணிப்பாரு
எளிதாகத்தோணும்இதை இசைத்திடாயே. 53

168. இதுவுமது

இசைத்துபார்நினைத்ததொன்றும் இல்லைஇல்லை
இனிதாகசோதிப்போம் நாம்என்றெண்ணி

விரைத்துதான்வினவநின்ற தல்லால்மைந்தா
வேறேதும்இல்லையடா வெளிவிட்டோம்பார்
வசைத்துதான்இப்படியா கச்சோதித்து
மறுபடியும்கேட்பம்என்று வந்தாயென்றும்
உசத்திஇல்லைஅதற்கொருநாள் ஆகும்என்றும்
உரைத்தவனைஓட்டிவிடு உறுதிதானே. 54

169. திருவோணத்தின் பலாபலன்

உறுதியென்றதிருவோணம் உதயமானல்
உன்மனதில்நினைத்தபொருள் நெல்லும்புல்லும்
கருதுகின்றஊண்பகையே ஆகும்ஆகில்
கலந்துசொல்லுகண்டுமனம் தேறியே தான்
பருதியென்றஅரசுபகை யாகநின்றல்
பதருமல்அதில்தணிந்த வகையைக்காட்டு
சுருதிஎன்றஊண் அரசுபகை இல்லாவிட்டால்
சொல்லுவாய்உயர்ந்ததனைச் சொல்லுவாயே. 55

170. இதுவுமது

சொல்லுவாய்நினைத்தபொருள் மங்களங்கள்கூடும்
சோரனல்பயம்உண்டு பொருள்உடைமைபோகும்
அல்லுவாய்பொன்பொருள் கைவசமேஆகும்
அப்பனேதொலைதூரம் போனல்மீள்வர்
வெல்லுவாய்பகைஉறவாய் வந்துகூடும்
மேலானஜாதியிலே உறவுசேரும்
நல்லுவாய்எழுமூன்று நாளைக்குள்ளே
நடந்துவரும்இப்பலனை நாடிப்பாரே. 56

171. அவிட்டத்தின் பலாபலன்

சாடிப்பார்அவிட்டம்அங்கே உதயமானல்
நலமாகநினைத்ததெல்லாம் விளங்கும்சோதி
தேடிப்பார்ஊண்பகையே யாகும்ஆகில்
சென்றதொருநாணயத்தில் தணிவுசொல்லு
ஓடிப்பார்அரசுபகை யாகநின்றல்
உத்தமனேஅதில்தணிந்த நாணயமேயாகும்
சூடிப்பார்ஊண்அரசு பகையில்லாவிட்டால்
துகையுயர்ந்தநாணயமாய்ச் சொல்லுசொல்லே. 57

172. இதுவுமது

சொல்லுவாய்பொருள்உடைமை கைவசமேசேரும்
சோபனங்கள்உறவின்முறையார் சொந்தமாகும்
வெல்லுவாய்பிறதேசம் போனபேர்கள்
வேணபடிசெல்வர்களாய் வந்துசேர்வார்
மல்லுவாய்பிறமனிதர் உதவியாலே
வந்திடுமேபால்பழ வர்க்கங்கள்மைந்தா

வெல்லுவாய் ஆறைந்து நாளைக்குள்ளே
வேணபடிபொருள்வரத்து விளையும்பாரே. 58

173. சதயத்தின் பலாபலன்

பொருள்வருமேசதயம் அங்கேஉதயமானால்
புந்திதனில்நினைத்தபொருள் பயிருபச்சை
இருள்வருமேஊண்பகையே யாகுமாகில்
எண்ணியதோர்வர்க்கத்தில் தணிவுமாகும்
அருளலெனும்அரசுபகை யாகநின்றால்
அதிற்குறைந்தவர்க்கவகை அறிந்துகொள்ளு
சருவுபொருஊண் அரசு பகையில்லாவிட்டால்
தணிந்தவிலைஇல்லையடா சார்ந்துபாரே. 59

174. இதுவுமது

சார்ந்துபார்பொருள்வரத்தே அதிகம்இல்லை
சஞ்சலங்கள்ஒன்றும்இல்லை தணிவும்இல்லை
நேர்ந்துபார்போனவர்கள் துயரத்தாலே
நிருவகிக்கமாட்டாமற் பிணியால்நொந்து
கூர்ந்துபார்கைப்பொருளும் சேதம்ஆக
கூடியஉறவாய்இருந்தோர் பகையதாகி
தேர்ந்துபார்ஏழஞ்சி நாளைக்குள்ளே
திரும்பிடுவார்இப்பலனைத் தெரிந்துபாரே. 60

175. பூரட்டாதியின் பலாபலன்

தெளிவானபூரட்டாதி உதயமானால்
சிந்தைதனில்நினைத்தபொருள் ஊரும்பூச்சி
வழிவானஊண்பகையே ஆகும்ஆகில்
மன்னவனேசிறுபூச்சி வன்றுசொல்லு
கொழுவானஅரசுபகை யாகநின்றால்
கொடுமையுள்ளபூச்சென்றே கூறலாகும்
தழுதாதிஊண் அரசு பகையில்லாவிட்டால்
தண்மையுள்ளபூச்சாகச் சொல்லுவாயே. 61

176. இதுவுமது

சொல்லுவாய்செலவதிகம் வரவுகொஞ்சம்
தொடுத்ததொருவியாஜ்ஜியமும் தோல்வியாகும்
மல்லுவாய்ஊர்வழிதான் போனபேர்கள்
வழக்கிலேதோல்வியாய் இடைஞ்சல்உண்டாம்
வெல்லவேபொருளுடைமை களவுபோகும்
வேந்தனால்தண்டனைகள் வருமேபாரு
அல்லவேமூணுபத்து நாளைக்குள்ளே
அப்பனேஇப்பலனும் அறிந்துகொள்ளே. 62

177. உத்திரட்டாதியின் பலாபலன்

கொள்ளுவதுஉத்திரட்டாதி உதயமானல்
கூடுதனில்நினைத்தபொருள் குளிர்ந்தபச்சை
எள்ளுவதுஊண்பகையே யாகுமாகில்
எண்ணியதோர்அழுக்குள்ள பச்சையாகும்
துள்ளுவதுஅரசுபகை யாகநின்றல்
துடியானகளிப்புள்ள பச்சையாகும்
தள்ளுவதுஊண்அரசுபகை இல்லாவிட்டால்
சாற்றியதோர்குளிர்ந்தபச்சை ஆகும்தானே. 63

178. இதுவுமது

காணுமேசிலுகுசண்டை களவுபோகும்
கள்ளரால்பயம்உண்டு கனிந்தஉறவில்லை
வேணுமொருசம்பந்தம் பகையதாகும்
மேலானபிரபுவினல் சல்லியங்கள்உண்டு
ஆணுமேபோனஉயிர் திரும்பாதையா
அப்பனேஅதனலே பொருளுடைமைதோல்வி
தோணுமேஎண்ணஞ்சு நாளைக்குள்ளே
தொடுத்திடுங்கால்இப்பலனைச் சொல்லுவாயே. 64

179. இரேவதியின் பலாபலன்

சொல்லுவாய்ரேவதிதான் வுதயம்ஆனல்
தொடுத்தபொருள்முத்துவகை என்றுசொல்லு
வெல்லுவாய்ஊண்பகையே ஆகும்ஆகில்
விலைதணிந்தரத்னவகை ஆகவேண்டும்
மல்லுவாய் அரசு பகையாகநின்றல்
வசம்இல்லைசொட்டையென்று வகுத்துச்சொல்லு
சொல்லுவாய்ஊண்அரசு பகைஇல்லாவிட்டால்
தொகைஉயர்ந்தவர்க்கம்என்று தொகுத்திடாயே. 65

180. இதுவுமது

தொகுத்திடுவாய்பொருள்வரத்தோ மெத்தவுண்டு
சோபனங்கள்கூடும்அப்பா சொல்லக்கூடா
வகுத்திடுவாய்போனவர்கள் மணமாய்வந்து
வாழ்ந்திருப்பார்இனத்துடனே மகிட்சியாக
அகத்திடுவாய்இரண்டுபிள்ளை மிகுந்தசெல்வம்
அவன்கிளையும்பெருகிவளர்ந் தோங்கும்பாரு
நிகழ்த்திடுவாய்நினைத்ததெல்லாம் கைவசமேசேரும்
தேருனஅறுமூன்று நாள்தான்பாரே. 66

181. சிந்தனைக்கூறுதலின் யுத்தி

பாரடாநின்றநிலை பரிந்துபாரு
பதிவாகமுகம்நோக்கும் திசையும்பாரு

நேரடாமுன்சொன்ன எழுத்தோடெல்லாம்
நினைவுதடுமாறாமல் நிறுத்திக்கொண்டு
சேரடாநட்சேத்திரஞ் சொல்லக்கண்டு
திகையாமற்சொன்னபடி தெரிந்துணர்ந்து
மாறடாமவுனம்யென்ற எழுத்தைஓது
மகத்தானசோசியத்துட் பிறப்பும்சொல்லே. 67

சிந்தனைப்படலம் - முற்றிற்று.

ஜாதகப்படலம்

182. ஊண் முதல் விநாடியின்பலன்

சொல்லுகிறேன்ஊணதிலே முதல்விநாடி
துலங்குகின்றகுழந்தையது பிறந்ததானால்
அல்லல்என்றுதொன்றும்இல்லை சுகமாய்வாழும்
அப்பனேவயதிவனுக் கறுபத்தஞ்சாம்
கல்லல்யென்றபிணிஇல்லை துன்பமில்லை
கவடில்லைவஞ்சகம் எக்காலும்இல்லை
நல்லபுகழ்உடையவனாய் ஆயுள்மட்டும்
நானிலத்தில்வாழ்ந்திருப்பன் நன்மைஆமே. 1

183. ஊண் 2-ம் விநாடியின்பலன்

நன்மையென்றஇரண்டாம் விநாடிதன்னில்
நன்றுமெத்தஉற்பனத்தில் நலமேஆகும்
வன்மைஎன்றபூமியும் கைவசமாய்ச்சேரும்
வாழ்ந்திருப்பார்அறுபதுவாம் வயதுமட்டும்
செம்மையென்றவசிகரமும் திறமும்மெத்த
தேகம்உள்ளமட்டும்ஒரு பிணியேயில்லை
தன்மையென்றதாய்தந்தை பிறப்பிற்சேதம்
சற்றும்இல்லைசுகமாக வாழ்வார்பாரே. 2

184. ஊண் 3-ம் விநாடியின்பலன்

வாழுமேமூன்றும் விநாடிதன்னில்
மக்களேமதலையது உதித்ததானால்
கேளுமேவயதுதான் அன்பதானால்
கெர்ப்பம்முதல்வயது பதினைந்துமட்டும்
கேளுமேபிணிகள்உண்டாம் சுகமோகொஞ்சம்
குவலயத்தில்அதிகசுகம் இல்லைபாரு
தாளுமேகூடிவரா மாட்டாதப்பா
சஞ்சலமும்சுகமதுவும் சரிதான்பாரே. 3

185. ஊண் 4-ம் விநாடியின் பலன்

சரியானவிநாடிஅங்கே நாலதாகித்
தான்பிறந்தால்வயதுதான் நாற்பத்தொன்று
குறியானசடலமது உள்ளமட்டும்
கொண்டிடும்ஓர்மணம்இல்லை வாழ்வுகொஞ்சம்
விரிவானபொருள்இல்லை போகம்இல்லை
வேந்தன்உறவொருநாளும் விரும்புவதேஇல்லை
நரையானபசிவேளைப் பொசிப்போஇல்லை
நன்மைஇல்லைதீமைஇல்லை நாடிப்பாரே. 4

186. ஊண் 5-ம் விநாடியின் பலன்

நாடிப்பார்ஐந்தாம் விநாடிதன்னில்
நலமாகப்பிள்ளையது பிறக்கும்ஆகில்
தேடிப்பார்வயததற்கு முப்பத்தேழு
செம்மையுடன்வசிகரமாம் இருக்கும்பாரு
கூடிப்பார்சினேகிதமோ உயிரொன்றாகும்
குணமதுதான்சற்குணமாய் இருக்கும்பாரு
வாடிப்போம்பொருளுடமை இல்லாமல்தான்
மனத்துயரம்விதிவரைக்கும் வருத்தும்பாரே. 5

187. ஆதானபலன்

பாரடாவிந்ததுதான் பாயும்போது
பண்பானசூரியகலை நடக்கும்ஆகில்
ஆரடாஆணாகும் சந்திரகலையாகில்
அப்பனேபெண்ணாகும் அறிந்துபாரும்
சாரடாசுழிமுனையில் தரிப்பதில்லை
தரித்தாலும்அதுபிழைக்க மாட்டாதப்பா
கூரடாசாஸ்திரங்கள் யாவும்பார்த்து
குணங்குறிகள்தவறாமற் குறுசொன்னேனே. 6

188. நடைமுதல் விநாடியின்பலன்

சொன்னேனேநடையிலே முதல்விநாடி
தொல்புவியில்பிள்ளைகள்தான் தோன்றும்ஆகில்
அன்னதனுக்காயதனை அன்பதாகும்
அதுதரித்தநாள்முதலாய் சுகமோஇல்லை
பின்னதுகேள்வயசு முப்பதுக்குமேலே
பிரபலனும்அதிகம்இல்லை வாழ்வுகொஞ்சம்
தன்னாலேவருவதல்லால் உதவியில்லை
சடம்உள்ளவரையினும்பொய் கோள்சொல்வானே. 7

189. நடை 2-ம் விநாடியின்பலன்

சொல்லவேநடைரெண்டாம் விநாடிதன்னில்
தோன்றினோன்அவன்வயது ஒன்பதைந்து

சொல்லுவான்சிவசெந்தை அதிகமாக
கொடுமையுள்ளபொய்களவு வஞ்சம்மெத்த
தள்ளுவான்இனச்சேர்க்கை சற்றும்இல்லை
சண்டாளனென்கிறபேர் லபிக்கும்ஐயா
துள்ளுவான்எனக்கெதிர்தான் இல்லைஎன்று
சொல்லுவான்பிறர் அவன்சொல்தள்ளுவாரே. 8

190. நடை 3-ம் விநாடியின்பலன்

தள்ளவேநடைதனிலே மூன்றும்விநாடி
தான்பிறந்தால்வயததுதான் முப்பத்தேழு
கொள்ளவேவயதுதான் உள்ளமட்டும்
கொலைகளவுபொய்சூது கொடுமைமெத்த
மல்லவேபிரமலபி உள்ளமட்டும்
வருத்தும்வெகுநோயாலே வருந்துவான்பார்
பல்லவேநல்லருசி யுள்ளதெல்லாம்
பண்புடனே அவன்வாயில் படாதுபாரே. 9

191. நடை 4-ம் விநாடியின்பலன்

படாதுநடைநான்காம் விநாடிதன்னில்
பதிவாகஉற்பத்தி ஆகும்ஆகில்
கடவாதுவயசதுதான் இருபத்தொன்று
கல்வியுமோமெத்தஉண்டு களவும்உண்டு
சலியாதுபெரியோரைத் தூஷணிப்பான்
சண்டாளப்பிறவிஇவன் ஒருவர்க்கஞ்சான்
தொடர்வான அன்னவஸ்திரம் அதுவும்இல்லை
துர்ச்சனன்காண் இவன்நல்ல வழிஇல்லானே. 10

192. நடை 5-ம் விநாடியின்பலன்

வழியதனில்ஐந்தாம் விநாடிதன்னில்
மைந்தனுய்உற்பவித்து வந்தானுகில்
நெளிவுள்ளவயததுதான் பதினெட்டாகும்
நினைவுதப்பிப்பித்தவெறி கொண்டுபேசும்
பழியுடையன்பிறர்க்குதவி சற்றும்இல்லை
பண்பில்லான்சனத்துடனே வாசம்செய்யான்
களிவுள்ளஇனந்தனிலே இருந்துவாழான்
கசடனப்பாநற்குணங்கள் இல்லைத்தானே. 11

193. அரசு முதல் விநாடியின்பலன்

தானென்றஅரசிலே முதல்விநாடி
தான்பிறந்தான் தன்வயது நூற்றுஎழு
பானென்றபவுஷ்வுண்டு பாக்கியம்உண்டு
பால்உண்டுகிளைஉண்டு பணியும்உண்டு
தேனென்றசொல்உண்டு ஜெகமெல்லாம்தான்
சென்றுவரநடையில்லை ஜெகத்திலுள்ள

மானென்றவிழிமடவார் மயங்குவார்பார்
மக்களேஅவன்வாழ்வை மதிக்கொண்ணாதே. 12

194. அரசு 2-ம் விநாடியின்பலன்

ஒண்ணாதஅரசிரண்டாம் விநாடிதன்னில்
உற்பவித்தால்வயததுதான் தொண்ணூற்றைந்து
எண்ணாதசுகபோகம் சொல்லொணாது
இன்பம்உள்ளவாழ்க்கையென்னால் மதிக்கொண்ணாது
தன்னாலேஞானநிலை நிலைக்கும்அப்பா
தன்மைஉள்ளபுருஷர்என்பர் தரணியோர்கள்
சொன்னதொருஅவனுடைய கீர்த்தியென்னால்
சொல்லுதற்குநாவில்லை சொன்னோம்பாரே. 13

195. அரசு 3-ம் விநாடியின்பலன்

சொல்லுமொருஅரசுமூன்றும் விநாடிதன்னில்
தோன்றுவனேல்அவன்வயது எண்பத்தாறு
வெல்லும்அவன்வாழ்வையென்னால் மதிக்கொண்ணாது
வெகுபோகம்வெகுசுகங்கள் உண்டுபாரு
அல்லவேசரீரத்தில் பீடையில்லை
அவன்பவுஷோஅளவிடக் கூடாதுமைந்தா
சொல்லவேஅஷ்டசித்தி அவர்க்கேசித்தி
சொல்லவுமேகூடாது சுகத்தைத்தானே. 14

196. அரசு 4-ம் விநாடியின்பலன்

தானென்றஅரசுநான்காம் விநாடிதன்னில்
தான்உதித்தால்வயததுதான் எழுபத்தெட்டு
தேனென்றமொழியுடையோன் சேகரங்கள்உள்ளோன்
தீமையென்றசொல்ஒருக் காலும்சொல்லான்
வானென்றகுணம்உள்ளான் அரமதுள்ளான்
மகத்தானபெரியோரை வணங்கிநிற்பான்
கோனென்றசிவகலையும் உள்ளோன்ஐயா
கொடுமைஉள்ளவஞ்சகரைச் சேரொண்ணாதே. 15

197. அரசு 5-ம் விநாடியின்பலன்

ஒண்ணாதஅரசைந்தாம் விநாடிதன்னில்
உதித்தவனுக்கேபிரமன் விதித்ததந்நாள்
எண்ணாதஅறுபத்தேழ் ஆகும்மைந்தா
என்னசொல்வேன்இவன்பெருமை இயம்பொண்ணாது
துன்னாதஅன்னைசுற்றம் கிளைஉண்டாகும்
தொடுத்திடுமேபூமிதனிற் செல்வம்உண்டாம்
வன்மையுடன்வாழும்இவன் குடித்தான்அப்பா
மனமகிழ்ச்சிமெத்தவுண்டு மதிக்கொண்ணாதே. 16

198. நித்திரை முதல் விநாடியின்பலன்

ஒண்ணுதஉறக்கத்தில் முதல்விநாடி
உத்தமனேஉதித்ததெனில் வயதேழஞ்சாம்
விண்ணுனபாக்கியமோ இல்லைஇல்லை
வீணுனதுயரமது மெத்தவுண்டு
கண்ணுனநோயதுவும் உண்டுபாரு
கலங்கும்அடாஅவன்மீது சுகமோகொஞ்சம்
தன்னுலேவிதிஅமைப்பு உள்ளமட்டும்
தலைமீதுசுமைசுமைப்பன் திண்ணம்தானே. 17

199. நித்திரை 2-ம் விநாடியின்பலன்

திண்ண்மாமதுவில்இரண்டாம் விநாடிதன்னில்
செனித்திட்டோன்தன்வயது இருபத்தேழு
கன்னம்இடும்களவுகளும் கொலையும்செய்வான்
கண்டவரால்துஷ்டன்எனத் திரிவன்கண்டாய்
வண்ணமுறுமனைவியுமே சேர்வதில்லை
மகத்தானபாவிஎன்று உலகம்அஞ்சும்
எண்ணமுறும்துயரம் உயிருள்ளமட்டும்
இருக்கும்இதுசிவன் செயலாம்என்றுபாரே. 18

200. நித்திரை 3-ம் விநாடியின்பலன்

பாரேநீஉறக்கம்மூன்றும் விநாடிதன்னில்
பாரில்உதித்தான்வயது எழுமூன்ருகும்
தேரேநீதேரையைப்போல் திரைஞ்சுபோகும்
செடம்அதுதான்உள்ளமட்டும் துன்பம்நீங்கா
காரேநீ தாய்தந்தை உறவும்இல்லை
கண்டவர்கள்இவனுடனே கலந்துபேசார்
வாரேநீதேசம்விட்டு தேசம்போக
மனம்துணிந்து அவிடம்போய்மாளுவானே. 19

201. நித்திரை 4-ம் விநாடியின்பலன்

மாளுவான்உறக்கம் நான்காம்விநாடி
வந்துதித்தோன்தன்வயது பதின்மூன்ருகும்
மாளுவான்அக்குடியிற் பிறந்தாவதென்ன
வருந்துவார்இவன்உயிர்தான் மாளுமட்டும்
தேளானபிணியாளன் துயரம்மெத்த
தெளிஉள்ளவாக்குருசி கொள்ளொட்டாது
நாளானநாளுக்கு நான்தான்அப்பா
நலங்குவான்சுகம் என்பதில்லைபாரே. 20

202. நித்திரை 5-ம் விநாடியின்பலன்

இல்லைஎன்றஇதற்கிளப்பம் உறக்கம்தன்னில்
இயம்பும்ஐந்தாம்விநாடிதனில் வந்துதித்தோன்

தொல்லையென்றவயதுகொஞ்சம் ஒன்பதேதான்
சுகமதுதான் ஒன்றும்இல்லை பிணியோமிச்சம்
கல்லல்என்றசடலமது பறக்கும்பாரு
கண்டவர்கள்விதிப்பயனோ என்றுசொல்வார்
சுள்ளியிலேசுழல்விட்ட பாண்டம்போல
சுழலுவான் மாளும்மட்டும் சுகம்இல்லானே. 21

203. இதுவுமது

சுகம்என்பதொருபோதும் இல்லைஇல்லை
சுழித்ததொருகாற்றினிலே துரும்புபோலே
அகமதிலேஒருபோதும் வாழ்வதில்லை
அவன்வாழ்வுநன்மையாய் இருப்பதில்லை
செகமதிலேபிணியாளன் மேலேமக்காள்
செடல்அழிவல்லாமல் உறவுஇல்லை
பகைவருவதல்லாது உறவுஇல்லை
பாழானஉறக்கம்ஐந்தின் பலன்தான்பாரே. 22

204. மரணம் முதல் விநாடியின்பலன்

பாரப்பாமரணத்தின் முதல்விநாடி
பண்பானநேரத்தில் பிறந்தான் ஆகில்
மாரப்பாவயதுகொஞ்சம் பனிரண்டாகும்
மக்களே தாய்தந்தை சேதம்ஆகும்
காரப்பாஅவன்உடல்தான் நோவுகொள்ளும்
கடைத்தேறல்ஒருநாளும் இல்லைஇல்லை
சாரப்பாஅவன்சடலம் மடியும்போதில்
தனியனாய்இவன்இருந்து இறப்பான்தானே. 23

205. மரணம் 2-ம் விநாடியின்பலன்

இறந்துபோம்மரணம்ரெண்டாம் விநாடிதன்னில்
இனிதானஉற்பத்தி ஆகும்ஆகில்
மறந்துபோம்அவன்வயது ஒன்பதுக்கும்
மரணமதுபோல்துடித்து மாய்வான்நோயில்
குறைந்திடாநாளுக்கு நாள்தான் அப்பா
குணம்ஆகமாட்டாது கொடுமைமெத்த
சிதைந்துபோம்செடலமது செத்தால்நன்று
செகந்தனிலேஎன்றுலகம சொல்லும்பாரே. 24

206. மரணம் 3-ம் விநாடியின்பலன்

சொல்லுவதுமரணம் மூன்றும்விநாடி
தோன்றிட்டால்அவன்வயது ஏழதாகும்
மல்லுவதுநோயதுதான் மெத்தவுண்டு
மரணமபோல்வந்துபின்பு தெளிவுண்டாகும்
தொல்லுலகில்இன்னொருக்கால் இதுபோல்வந்து
சூழுமடாசெப்பும்இந்த தத்தும்தேறி

அல்லுவதுமேல்உரைத்த வயதில்மைந்தா
அந்தகனும்உயிர்ச்சேதம் ஆகும்பாரே. 25

207. மரணம் 4-ம் விநாடியின் பலன்

ஆகுமேமரணம் நான்காம்விநாடி
அவனியில்வந்துதித்தவர்க்கு வருஷம்ஒன்றும்
சாகும்அந்தநாளளவும் இவன் தான் அப்பா
தனிவெயிலிற்புழுவதுதான் தவிப்பதேபோல்
வேகும்வெகுவியாதிகளால் மடிந்துநொந்து
வீணாகஅறிவதல்லால் சுகமதுண்டோ
சாகும்மரணத்துதித்த தோவென்னில்
தான்முன்புதரித்ததுதான் சுழினை ஆமே. 26

208. மரணம் 5-ம் விநாடியின் பலன்

ஆமென்றஐந்தாம் விநாடிதன்னில்
அப்பனேகுழந்தை அவதரிக்கும்ஆகில்
போமென்றஇக்குழந்தை தனக்குவேந்தன்
பொறிந்திட்டலிபிகொஞ்சம் புகலக்கேளு
தாமென்றதாய்அலற தந்தைநோக
சகோதரங்கள்பொருமிஅழத் தலையேசாய்த்து
ஏமென்றஆறுதிங்கள் தனிலேமாயும்
இவன்தரித்தவ்வேளை சுழினை ஆமே. 27

209. மரணப்பேற்றின் சத்துரு மித்துருபலன்

சுழினைதனில்மித்ரு வதிதாகநின்றால்
சொன்னபடிசரியாகும் சத்ருவாகில்
அழிவுள்ளமரம்போலே மாளும்மட்டும்
அலைத்துவிடும்வெகுகொடுமை சடலம்நோகும்
எழில்அற்றஉயிரதுதான் தவிப்பான்ஐயா
என்னசொல்வேன்சத்துருதான் விதியழிப்பேன்
சுழன்றலையும்பாய்மரத்தில் பட்சிபோலே
தொல்பிணிகள்வந்துதுன்பம் செய்யும்பாரே. 28

210. இதுவுமது

செய்யவேபொருள்வரத்து இல்லைஇல்லை
ஜெயமானமணம்இல்லை சேர்க்கைஇல்லை
வையுமேஉலகம்எல்லாம் வம்பன்என்று
மனைவிமக்கள்உறன்முறையார் மருவல்இல்லை
நொய்யதொருநோயாலே வருத்தம்மெத்த
நுவலும்அந்தநோயதனால் மெலியும்சீவன்
கொய்யுமொருசத்துருவின் பகைபொல்லாது
கொடுமையுள்ளமரணத்திற் பிறக்கொண்ணாதே. 29

211. இதுவுமது

பிறக்குமிதிற்சத்துருதான் அரசன் ஆகில்
பிண்டத்தில்மாண்டுவிழும் ஊணதாகில்
சிறக்கவேபதினைந்து நாளைக்குள்ளே
செத்துவிடும்தப்பில்லை ஜெகத்தில்மைந்தா
உறக்கவேமாசமது மூன்றுக்குள்ளே
ஒழிந்துபோம்ஊணதுதான் மித்துருஆகில்
பறக்கவேமாசம்ஒரு ஐந்துக்குள்ளே
பதிக்கரசன்உயிர்ச்சேதம் செய்வான்பாரே. 30

212. நித்திரைப்பேற்றின் சத்துரு மித்துருபலன்

செய்திடுவான்உறக்கத்தில் மித்ருஅரசாகில்
செனனத்தில்பிரம்மலபி உறத்ததுமுன்சரியே
எய்திடுவான்சத்ருஅர சாகிநின்றால்
என்னசொல்வேன்வெகுநோயால் துன்பம்ஆவன்
வைதிடுவான்வருமானம் என்றும்இல்லை
மணம்இல்லைபிரபுதயையும் மசிழ்ச்சியில்லை
கொய்திடுவான்பிறந்தாறு திங்களுக்குள்
குவலையத்தில்வாழ்வதில்லை திண்ணம்ஆமே. 31

213. அரசுப்பேற்றின் சத்துரு மித்துருபலன்

திண்ணம்என்றஅரசனுக்கு சத்ருஇல்லை
செயலாகும்ஜெகந்தனிலே கொடுத்ததெல்லாம்
வண்ணம்என்றமகிழ்ச்சி வரத்துமெத்த
மனைவிமக்கள்வரன்முறையார் உதவிமெத்த
எண்ணம்என்றதுயரம் எள்ளளவேயில்லை
ஏழைஎன்றசொல்இல்லை ஈவதிவன்தொழிலாம்
அன்னம்என்றகளஞ்சியம் என்றியாவரும்பூசிப்பார்
அப்பனேஇதர்க்கிணைதான் சொல்லக்கூடாதே. 32

214. நடைப்பேற்றின் சத்துரு மித்துருபலன்

கூடாதேநடையினில் மித்துருஊண் ஆகில்
கூறியதோர்லிபிதனக்குக் கால்அதிகம்ஆகும்
நாடாதுமித்துருவே அரசன் ஆகில்
நாட்டியதோர்பிரம்மலிபிக்கரை அதிகம்ஆகும்
தேடாதசத்துருஊண் ஆகநின்றால்
செப்பம்அதில்கால்வரிசை செல்லாய்ப்போகும்
வாடாதசத்துருதான் அரசன்ஆகில்
வழுத்தியதோர்லிபியில் அரைகுறையும்பாரே. 33

215. இதுவுமது

குறையானவயதேழுக் குள்ளேமைந்தா
குறைத்திடுவான் கைகாலிற் குற்றம்வரும்படியாய்
திரையானஇவன்பிறந்து பதினைந்துக்குள்
சிரசுமுதல்கண்காது மூக்குதட்டில்
குறைஆகும்மூன்றுபத்து வயதுக்குள்ளே
கூர்மையுள்ளவேகத்தில் குறைவுசெய்வான்
கரைஆகும்பிரம்மலபி உள்ளமட்டும்
கணக்கில்லாநோயில் அழுந்துவன் கண்டாயே. 34

216. இதுவுமது

அழுந்துவதுசத்துருவின் பகைஆகாது
அப்பனேவிந்துஅது தரித்தநேரம்
கொழுந்துவிட்டுயெழுந்தஅனல் போலேமக்காள்
குடிகெடுத்தசத்துருவும் நின்றதாலே
தழைத்தசொருசுழிமுனை அங்கிருந்ததாலே
சண்டாளசத்துருபகை ஆனதாலே
நெளிந்துவிடும்சந்திரன் சூரியனைவிட்டு
நேராமற்போனதினாற் பகைஆம்பாரே. 35

217. ஊண்பேற்றின் சத்துரு மித்துருபலன்

பகைஆனஊண் அதிலே மித்துருவலிதாகில்
பாடினதுபொய்யாது பலிக்கும்பாரு
தொகைஆனசத்துருஅங்கே அரசாய்நின்றால்
துலங்கவுமேருஞ்சஒட்டான் குறையஒட்டான்
தகையாகவருங்காரியம் தவிர்த்துவைப்பான்
சண்டாளசத்துருதான் தாழ்ந்துபோகான்
வகையானதேகத்தில் பீடைகொஞ்சம்
வருத்தம்வரும்வந்தாலும் வலுச்செய்யாதே. 36

218. இதுவுமது

வலுவான அரசு மித்துருவே ஆனால்
மக்களேபிரமலபி அரைஅதிகம்ஆகும்
நலிவானதேகத்தில் நலியேயில்லை
நன்மையென்றமணம்போகம் வாழ்வுமிச்சம்
கொலுவாகப்பூமியினம் பலிக்கும்பாரு
கொண்டுவிற்கும்வியாபாரம் குணமதாகும்
வலுவானமன்னர் உறவாகும்மேலும்
மக்களேஅதிகபலன் வருகும்பாரே. 37

219. இதுவுமது

பாரடாபட்சிவலு அறியவேண்டும்
பகையானயெழுத்தைவிட்டு மாறவேண்டும்

கோருவதுஎவ்வேளை அவ்வேளைக்குக்
குடிகெடுத்தசத்துருவை விலக்கிப்போடு
நேரும்ஒருபட்சிபகை ஆனபேரை
நினைவில்வைத்துஅவருடனே பேசவேண்டும்
சேருவதுபட்சிஉற வானபேரை
சேர்ந்ததினால்நன்மைஉண்டு திண்ணம்தானே. 38

220. ஆயுட் பிரமாணம்

தான்என்றபிறப்புக்கு வயதுசொல்வேன்
தண்மைஉள்ளஊணுக்கு எழுபதாகும்
மான்என்றநடைதனக்கு வயதோமைந்தா
மறையவன்தான்லபித்தபடி அன்பதாகும்
தேன்யென்றஅரசுக்கு வயதுமெத்த
செப்பவென்றால்நூற்றுபத்து யிருந்துவாழ்வான்
கோன்யென்றஉறக்கத்தில் வயதுகொஞ்சம்
குறைவானயேழைந்து வயதாம்பாரே. 39

221. இதுவுமது

வயசுகொஞ்சம் மரணத்தின்வயசுகேளு
மக்களேபதினைந்து வருஷம்ஆகும்
பயன்உடையஅரசுபகை ஆகாதப்பா
பண்பானஇதற்கதிகம் இல்லைஇல்லை
அயன்என்னும்தந்தைஅன்று சேர்ந்தநேரம்
அந்தியமாய்ச்சுழிமுனைதான் முடிந்தநேரம்
வயசதுவேஅற்றுவிடும்சனி இவன்தான்மைந்தா
மருவிமணம்செயுநேரம் நோய்வரும்ஊண்கேளே. 40

ஜாதகப்படலம் முற்றிற்று.

பிணிப்படலம்

பொதுவிதி

222. பிணிகொண்ட ஊணின் காலபலன்

ஊண்யென்றபிருதிவியில் வியாதிகண்டால்
உத்தமனேமூவைந்து நாளையிலேதீரும்
தேன்என்றவிநாயகர்க்கு அபிஷேகித்துத்
தீபதூபம்கொடுத்து தியானம்செய்து
வான்என்றமருந்திதல் செய்வீர்ஆகில்
மக்களேபிராமணர்க்கு அன்னதானம்

கோன்என் றஒருமன தாய்ச் செய்யும்போது
கொடுமைஉளபீடையும்தான் விலகும்பாரே. 1

223. பிணிகொண்ட நடையின் காலபலன்

விலகுமேநடை தனிலே வியாதிகண்டால்
விசனம்அதுமிகுதிஉண்டாம் மாதம்ஒன்றில்
நலமாகவேலவர்க்கு அபிஷேகம்செய்து
நங்கையராம்கன்னியர்க்குக் களபம்பூசி
பலரும்உண்டஅன்னமது அன்பாய்செய்து
பண்டிதற்குஉபசாரம் பலவும்செய்து
இலகவேமருந்தீதல் செய்வார்ஆனல்
எழும்பியதோர்அப்பில்வந்த பிணிதான்போச்சே. 2

224. பிணிகொண்ட அரசின் காலபலன்

போச்சென்றஅரசுதனில் வியாதிகண்டால்
புண்ணியனேநாள்எட்டில் தீரும்தீரும்
ஆச்சென்றசிவனுக்கு அபிஷேகம்செய்து
அப்பனேஅரசுபிர தட்சணமேசெய்து
வாச்சென்றநோவினர்க்கு மருந்துதானே
வளமாகக்கொடுத்திடவே விளங்கும்பீடை
காச்சென்றஅக்கினியால் வந்தபீடை
கலேவதற்குஓமங்கள் செய்திடாயே. 3

225. பிணிகொண்ட சித்திரையின் காலபலன்

செய்துதான்உறக்கத்தில் வந்தபீடை
தீருவதுமாதம்ஒரு மூன்றுக்குள்ளே
கொய்துதான்சடலத்தை நோகப்பண்ணும்
குலவியதோர்காளிக்கு அபிஷேகம்செய்து
வைதுதான்வாயுவினல் வந்ததாலே
மாருதிக்குவடைமாலே மகிழ்ந்துசாற்றி
நொய்துதான்வயித்தியன்கை மருந்தூசுந்தால்
நொந்துமிகவருத்தம்ஆய்த் தீரும்பாரே. 4

226. பிணிகொண்ட மரணத்தின் காலபலன்

தீருமோமரணத்தின் வியாதிகண்டால்
தீருவதுவெகுவருத்தம் திங்கள்ஆறில்
தேறுமோதேருதோ என்பார்கோடி
செய்விணேயோதீவிணேயே என்பார்கோடி
ஆறுமாமுகன்செயலே நடக்கும்ஆகில்
அரசுபகைஆவதுதான் இவனுக்கில்லே
தீரும்ஒருபரிகாரம் என்னஎன்னில்
செம்பிரம்ஆம்சனிக் கபிஷேகங்கள்செய்யே. 5

227. இதுவுமது

செய்துபார் ஆகாச வெளிஇதாகும்
திடமானஊண் அரசு பகையாகாது
நெய்துபார்சத்துருவின் கொடுமைமெத்த
நெறியானமித்துருவே இருக்கவேண்டும்
கொய்துபார்கூந்தன்என்ற தினமரணநாளும்
கூடியேஇல்லாமல் இருக்கவேண்டும்
வைதுபார்இதுகளிடப் பகையாகாது
வந்ததென்றால்உயிர்ச்சேதம் வருகும்பாரே. 6

228. பிணிப்படலத்தின் பொதுவிதி சிறப்புவிதி 2-க்கும் வரலாறு

ஆகுமேசாமம்அதைக் குறுக்கினன்றாய்
அப்பனேநாழிகையாய்ப் பிரித்துச்சொன்னோம்
போகுமேவிநாடிஅங்கே வாய்த்ததானால்
புண்ணியனே ஒருநாளும் பொய்த்திடாது
ஏகுமேவிநாடி அது பிசகிப்போனால்
எடுத்ததொருகாரியங்கள் பிசகும்பாரு
சாகுமேநேரம்அது பிசகிற்றானால்
சண்டாளர்எத்தொழிலும் பிசகும்பாரே. 7

229. இதுவுமது

பிசகாமல்விநாடிஅங்கே அறியவேண்டும்
பிணக்கறுக்கசாஸ்திரத்தில் வினயம்வேண்டும்
அசையாமல்ஒருமனதாய் நிறுத்தவேண்டும்
அறிவானபுத்தியினால் அறியவேண்டும்
திசையானகுருவினிடம் கேள்விவேண்டும்
செய்தொழிலும்கைபாகம் தெரியவேண்டும்
வசமானபெரியோர்க்கு வணக்கம்செய்தால்
வழியானதொழில்செய்யும் வகைசொல்வாரே. 8

சிறப்புவிதி

230. பிணிகொண்ட ஊண்கால முதல் விநாடியின் பலன்

சொல்லவேஊண்முதலாம் விநாடிதன்னில்
தொடர்பிணிதான்நாலைந்து நாளில்தீரும்
வெல்லவேநோய்அதுதான் பெலனோஇல்லை
வெற்றியாம்அரசுபகை இருக்கவொண்ணாது
அல்லவேஇவன்பகையிற் பிணிதான்மெத்த
ஐங்கரனூர்க்கபிஷேகம் செய்தால்மைந்தா
சல்லியங்கள்தொடுத்துநின்ற பிணிகளாலே
சஞ்சலங்கள்என்றுமில்லை சவுக்கியம் ஆமே. 9

231. பிணிகொண்ட ஊண்கால 2-ம் விநாடியின் பலன்

சவுக்கியம்ஆம்ஊண் இரண்டாம்விநாடி தன்னில்
சரீரத்திற்பிணி அதுதான் சாரும்ஆகில்
அவத்தம்இல்லைநாள்ஏழிற் குணமதாகும்
ஐங்கரனார்க்கருச்சனை செய்தடிபணிந்தால்
சிவக்கும்அரசுபகை இராதுமைந்தா
திடம்செய்யமாட்டாது வலுவேஇல்லை
குவித்திருக்கும்ஒருபிருதிவியின் கூறாய்நின்ற
கொள்கையினால்வந்திந்தக் குணம்தான்பாரே. 10

232. பிணிகொண்ட ஊண்கால 3-ம் விநாடியின் பலன்

குணமானஊண்மூன்றாம் விநாடிதன்னில்
குறித்தவுடல்வந்தபிணி நாள்ஒன்பானில்
மணமாகத்தீருவதே திண்ணம்திண்ணம்
வழிக்காகைவிநாயகர்க்குப் பூசைசெய்தால்
கனம்ஆகாதரசுபகை இருந்தாலுந்தான்
கண்டிப்புமெத்தஇல்லை அரசிற்பாதி
இனமானஅரசபகை ஊணில்வலுவுயில்லை
என்னசெய்வான்கோபம் அதுசெய்யொண்ணாதே. 11

233. பிணிகொண்ட ஊண்கால 4-ம் விநாடியின் பலன்

ஒண்ணுதஊண்நான்காம் விநாடிதன்னில்
உடலில்வரும்பிணி அதுதான் பதின்மூன்றுக்குள்
திண்ணமாய்த்தீர்ந்துவிடும் செப்பினேன்பார்
சித்திவிநாயகர்க்கவலும் கடலைதேங்காய்
வண்ணமாம்பால்பழங்கள் படைத்துமைந்தா
வணக்கமாம்பிராமணோப சாரம்செய்தால்
அண்ணல்பகைஇருந்தாலும் வலுச்செய்யாது
அப்பனேபிருதிவியின் கூறிதாமே. 12

234. பிணிகொண்ட ஊண்கால 5-ம் விநாடியின் பலன்

கூற்றானஊண் அஞ்சாம் விநாடிதன்னில்
கொண்டபிணிபதினைஞ்சு நாளில்தீரும்
வேறானஅரசுபகை வேதைசெய்யும்
விநாயகர்க்குஅபிஷேகம் செய்துமேலும்
சாற்றறியவேதியற்கு அன்னதானம்
தண்மையுடன்செய்திடவே தணிந்துபோகும்
பாற்றானஊண் அதிலே வந்தரோகம்
பரிவானபிருதிவியைச் சார்ந்ததாமே. 13

235. பிணிகொண்ட நடைக்கால முதல்விநாடியின் பலன்

சாந்தம்ஆம்நடைதனிலே முதல்விநாடி
சரீரத்திற்பிணி அதுதான் சாரும்ஆகில்

நேர்ந்தபடிசடலத்தை வருத்தம்செய்து
நீங்குமடாநாள்பத்தில் நிலைநில்லாது
வேந்தன் அவன் பகைத்ததனால் வினையேஇல்லை
மேதினியில்இருவருக்கும் தோழன் ஆகும்
வார்ந்தமயில்வாகனத்தில் ஏறி ஆடும்
வடிவேலரைத்தொழுது வணக்கம்கொண்டே. 14

236. பிணிகொண்ட நடைக்கால 2-ம் விநாடியின் பலன்

கொள்ளவேநடையிரண்டாம் விநாடிதன்னில்
குறித்தபிணிபதினைந்து நாளில்மைந்தா
தள்ளவேசாந்தம்அதாம் மைந்தாகேளு
தண்ணீரிற்பகைத்தவொரு பீடைதானும்
கொள்ளவேகொள்வதில்லை செந்தூர்வாழும்
குமாரகுருசெயல் இருக்கிற்குறைஒன்றில்லை
விள்ளவே திண்ணம்இது முனிவர்சொன்னார்
வேந்தனிடப்பகைபெரிதாம் சொல்லினேனே. 15

237. பிணிகொண்ட நடைக்கால 3-ம் விநாடியின் பலன்

சொல்லவேநடைமூன்றும் விநாடிதன்னில்
தோன்றினதோர்பிணிஅதுநாள் இருபதுக்குள்
சல்லியம்ஆம்பிணியாலே வருத்தம்மெத்த
சண்முகனார்கருணையினால் சாந்தம் ஆகும்
கல்லல்இடும்சத்துருஊண் அரசாகாது
கலங்காதமனத்தையும்தான் கலங்கச்செய்வான்
தொல்லைஇது அப்புவினால் வந்தபீடை
தொலைந்துபோம்தாமிசத்தில் துடிசெய்யாதே. 16

238. பிணிகொண்ட நடைக்கால் 4-ம் விநாடிபின் பலன்

துடியானநடைநான்காம் விநாடிதன்னில்
தொடுத்தபிணிநாள் இருபத்தைந்தில்மைந்தா
துடிவானசண்முகத்தின் கிருபையாலே
வயித்தியத்தாற்சாந்தியதால் தீர்ந்துயோகும்
முடிவானவிந்துஅங்கே தரித்தநேரம்
மொழியநின்றநவக்கிரக தோஷத்தாலே
கடுகியேவந்தபிணி நீரின்கூறும்
கலக்கம்இடும்சத்துருவின் பகையாகாதே. 17

239. பிணிகொண்ட நடைக்கால 5-ம் விநாடியின் பலன்

ஆகாதநடைஐந்தாம் விநாடிதன்னில்
அப்பனேதேகத்தில் பிணிதான் வந்தால்
போகாதுஅரசுபகை புகவொண்ணாது
போசனத்தின்பகை அரையிற்பொல்லாதப்பா

நோகாதுநோகும்அடா தேகம்மைந்தா
நண்ணிதம்ஆம்பாசம்அது ஒன்றுக்குள்ளே
வேகாதுவெந்தல்லோ நீரதாகும்
வேலவற்குஅபிஷேகம் செய்யச்சொல்லே. 18

240. இதுவுமது

செய்யவேமுருகனிடக் கிருபையாலே
தீராதவியாதிஸ்தன் தோஷம்தீரும்
கொய்யவேஅரசுபகை இருந்தால்அப்பா
கொடுமைஉள்ளசனியனுக்கு அபிஷேகந்தான்
நொய்யதாகும்நோய்அதுதான் வலுச்செய்யாது
நுவலாதுஎன்னசொல்வேன் ஜலத்தின்கூறும்
எய்யவந்தலல்லாமல் வேறொன்றில்லை
இவன்பிழைத்தயன்எழுத்தின் பலன்என்பாரே. 19

241. பிணிகொண்ட அரசுகால முதல் விநாடியின் பலன்

பெலமாகஅரசுமுதல் விநாடிதன்னில்
பெரிதாகஉடலில்வந்த பிணிதான்ஐயா
தலமானஅக்கினியாற் சூடுகொண்டு
ஜடலம்எல்லாம்வெந்துருகி மெழுகும்ஆகி
நலம்ஆனநாள்மூன்றில் குணமதாகும்
நற்சடையோன்சிவன்தனக்கு அபிஷேகந்தான்
வலம்வந்துசெய்திடவே நோய்கள்எல்லாம்
மக்களேதீர்ந்திடுதல் திண்ணமஆமே. 20

242. பிணிகொண்ட அரசுகால 2-ம் விநாடியின் பலன்

திண்ணம்அடாஅரசிரண்டாம் விநாடிதன்னில்
ஜெடலத்தில்வந்தபிணி திறம்செய்யாது
வண்ணமடாநாள்ஐந்தில் தீர்ந்துபோகும்
வண்மையுள்ளசிவகிருபை ஆனதாலே
சொன்னோம்அடாஅக்கினியும் பகைத்தான்எது
துடியானசனியனிடத் தோஷத்தாலே
எண்ணன்அடாபீடையது விலகும்பாரு
எள்ளளவும்நோய்பெலனே இல்லைதானே. 21

243. பிணிகொண்ட அரசுகால 3-ம் விநாடியின் பலன்

இல்லையடாஅரசுமூன்றும் விநாடிதன்னில்
எழும்பியதோர் தேகத்தில்வந்தநோவு
தொல்லைஅடாஎன்றுசொல்லி நினைத்திடாதே
துடியானசிவனுக்கு அபிஷேகம்செய்தால்
சள்ளைஅடாஒன்றும்இல்லை நாள்எட்டுள்ளே
ஜடலத்தில்வந்தபிணி தள்ளிப்போகும்

பிள்ளைகளே அக்கினியால் வந்ததோஷம்
பெலம்செய்யமாட்டாது தீரும்பாரே. 22

244. பிணிகொண்ட அரசுகால 4-ம் விநாடியின் பலன்

தீரமாம்அரசு நான்காம்விநாடி
ஜெடலத்திலேவந்தபிணி தினம்தான் பத்தின்
மாறிவிடும்சனியினிட தோஷம்தானும்
மக்களேசிவந்தனக்குக் குளிரவைநீ
நீரிவிடும்நோயதுதான் நிலைநில்லாது
நிலைத்தரசுஒருவரிடம் பகையும்இல்லை
காரிமையாள்பூமடந்தை கிருபையாலே
கண்டபலன்நான்உரைத்தேன் கருத்தில்வையே. 23

245. பிணிகொண்ட அரசுகால 5-ம் விநாடியின் பலன்

கருத்தானஅரசுஐந்தாம் விநாடிதன்னில்
கண்டபிணிபனிரண்டு நாளில்தீரும்
வருத்தம்அதுசெய்யாது வலிதுகொஞ்சம்
மனமகிழ்ச்சியில்லாது வியாதிபோலும்
பொருத்தம்அது அக்கினியாற்கண்டகூடு
பொறுமைஉள்ளசிவன்உமையாள் கிருபையாலே
தரிப்பதுவேஇல்லைஇல்லை நோய்கள்தானும்
தண்மையாய்த்தேகம்இது சவுக்கியம்ஆமே. 24

246. பிணிகொண்ட நித்திரைக்கால முதல் விநாடியின் பலன்

ஆமப்பாஉறக்கத்தில் முதல்விநாடி
அப்பனேதேகத்தில் பிணிதான்வந்தால்
காமப்பாவாயுவினற் கண்டதோஷம்
கடினம்அடா திரும்புவது நாள்எட்டுக்குள்
சோமப்பாஅரசுபகை ஆகாதுபாரு
சொன்னேம்அடாகாளிக்கு அபிஷேகம்செய்தால்
நாமப்மாஅனுமனுக்கு வணக்கம்செய்தால்
நன்மையதாம்அப்பிணிதான் தீரும்பரே. 25

247. பிணிகொண்ட நித்திரைக்கால 2-ம் விநாடியின் பலன்

தீரும்அப்பாஉறக்கம் இரண்டாம்விநாடிதன்னில்
ஜெடலத்தில்வந்தபிணி தீர்வதரிதேஆகும்
மாறும்அப்பாலகுவாகித் திரும்பும்பின்னும்
மனத்துயரம்ரம்பவும்ஆம் அடைஞ்சல்மெத்த
ஆறும்அப்பாகண்டவர்கள் வீதிப்பமனேவென்று
அலறுவார்உலறுவார் அகிலம்தன்னில்
தேரும்அப்பாநாள்அதுதான் பதினைந்துக்குள்
திடம்ஆனகாளிக்கு அபிஷேகம்செய்யே. 26

248. பிணிகொண்ட நித்திரைக்கால 3-ம் விநாடியின் பலன்

செய்யவேஉறக்கம் மூன்றும்விநாடி
தேகத்தில்பிணிவந்தால் சேதம்போல
நொய்யவேஜடலத்தை நோகச்செய்து
நொறுக்கிவிடும்வாயுவினுல் வந்ததோஷம்
வையம்அதில்காளிக்கும் பலியும்பொங்கல்
வயிரவர்க்குவடமாலை மகிழ்ந்துசாத்தி
எய்யவேபண்டிதன்கை மருந்தைஈந்தால்
இதுதீரஇருபதுநாள் செல்லும்பாரே. 27

249. பிணிகொண்ட நித்திரைக்கால 4-ம் விநாடியின் பலன்

செல்லும்ஒருஉறக்கம் நான்காம்விநாடி
தீவினைஆம்பிணிகொண்டால் தேகம்தன்னில்
கொல்லவேவெகுகொடுமை கொள்ளும்கொள்ளும்
கூற்றுவனும்அரசுபகை ஆகநின்றுல்
அல்லவேமரசும்ஒரு மூன்றுக்குள்ளே
அல்லாட்டால்தீருவது மாசம்மூன்றில்
வெல்லவேகாளிக்கு அபிஷேகம்செய்தால்
வெல்லுவது திண்ணம்என்று சொல்லொண்ணுதே. 28

250. பிணிகொண்ட நித்திரைக்கால 5-ம் விநாடியின் பலன்

ஒண்ணுதஉறக்கம்ஐந்தாம் விநாடிதன்னில்
உத்தமனேதேகத்தில் பிணிதான்ஆனுல்
எண்ணுதசாவதுதான் எய்தும்மாய்தும்
இசையாதஅரசுபகை இருந்ததானுல்
சண்ணுதசண்ணும்அடா க்ஷணத்துக்குள்ளே
தன்மைஉள்ளஅரசுமித்துரு ஆகநின்றுல்
கண்ணுதுதீருமென்று சொல்ஒண்ணுது
கடினம்அடாஅஞ்சுபத்து நாள்தான்காணே. 29

251. பிணிகொண்ட மரணகால முதல் விநாடியின்பலன்

நாளானமரணத்தின் முதல்விநாடி
நலமானதேகத்தில் பிணிதான்வந்தால்
கேளாதேகூற்றுவன் ஆம் அரசுபகையானுல்
கெணிதமதுமாசம்தான் இரண்டுக்குள்ளே
பாழாகப்போகுமடா ஜடலம்தானும்
பழிகாரன்கோவானுல் ஒடுங்கிவைப்பான்
தாளாதஆகாச வெளியின்தோஷம்
தண்மையாய்வரும்ஆனுல் மாசம்ஆறே. 30

252. பிணிகொண்ட மரணகால 2-ம் விநாடியின் பலன்

மாறுதமரணம்ரெண்டாம் விநாடிதன்னில்
அப்பனேதேகத்தில் பிணிதான்கொண்டால்

தீராதஅரசுபகை பொல்லாதப்பா
க்ஷணத்திலேதேகம்விட்டு உயிரைநீக்கும்
தேராமல்சூனியத்தில் சேர்ந்ததோஷம்
திடமானகூத்தன் அவன் பிடரிநின்று
பாராமல்இவ்வுடலை அழிப்பான் அன்றோ
பழியாகும்வருஷம்ஒன்றிற் பாருபாரே. 31

253. பிணிகொண்ட மரணகால 3-ம் விநாடியின் பலன்

ஒன்றான மரணம் மூன்றாம்விநாடி
உத்தமனேஉடலதனிற் பிணிதான்வந்தால்
நன்றான ஆகாச வெளியின்தோஷம்
நலமானஊண் அரசு பகைஆகாது
சென்றான சூனியத்திற் சேர்ந்தநேரம்
திடமானகங்கையிட சாபம்போல
கன்றானஉடல்விட்டு உயிர்போம்அப்பா
கனிவாகத்திரும்புவது அரிதாம்காணே. 32

254. பிணிகொண்ட மரணகால 4-ம் விநாடியின் பலன்

அரிதாகும்மரணம் நான்காம்விநாடி
அப்பனேஜடம்அழிக்க வந்தநோயாம்
பெரிதாகும்சத்துருநாள் மரணவேளை
பேணியேஅரசுபகை ஆகவேண்டும்
சரியான தினமரணம் ஆகவேண்டும்
சண்டாளசூனியமும் சேரவேண்டும்
குறியாதஅவன்ஜடலம் அழுந்துபோகும்
குணமாகமாட்டாது வருத்தம்ஆமே. 33

255. பிணிகொண்ட மரணகால 5-ம் விநாடியின் பலன்

வருத்தமடாமரணம்ஐந்தாம் விநாடிதன்னில்
மக்களேஉடல்அழிக்க வந்தநோய்தான்
கருத்தனடாபிதா ஆன பிரமன்சேர்ந்த
கணக்கென்ன தொகைசரிதான் இனிவேறில்லை
விருத்தன்என்றகாலன் அவன் தானேவந்தால்
வேணபடிபட்டதினால் வருவதேது
மறுத்தொருசொல்சொல்லாது உயிர்போம்போது
வாழ்க்கைஎன்ன ஆசையென்ன வருமோபாரே. 34

256. பிணிகால அளவு

வரும்என்றபிணிகால அளவுசொல்வேன்
வழியானஊண் தனக்கு மாசம்ஒன்று
குறுகியதோர்நடை தனக்கு காலம்அப்பா
குலாவியதோர்மாசங்கள் ஆறதாகும்

தருமம்மிகும்அரசாட்சி தனக்கோளன்னி
தண்மைஉள்ளபட்சம்ஒன்றாய்ச் சார்ந்துநிற்கும்
மருமம்இல்லைதூக்கத்தின் காலம்மைந்தா
வருஷம்ஒன்றும் இதில்மிகுந்துவாழலாமே. 35

257. இதுவுமது

வாழாதமரணத்தின் காலம்கேளு
மகிழ்ச்சிஇல்லைவருஷம்அது மூன்றதாகும்
கேளானபிணிக்கான காலம்ஈதாம்
கெடுதியதாய்ச்சூனியம் உற்றிருந்ததாலே
மாளாத அரசுபகை ஆனதோஷம்
மக்களைஒன்றுபத்தாய் வளரும்பாரு
ஆளாகஅருள்செய்யும் மாமுனிவன்வாக்கால்
அறிந்தபடிஅறிவித்தேன் திண்ணம்ஆமே. 36

258. இதுவுமது

திண்ணமாம்ரோமரிஷி முனிவன்வாக்கு
திண்ணம்என்றுமன துறுதி யாகக்கொண்டார்
எண்ணமாம்காலமுழு தரியலாகும்
எடுத்தவொருகாரியமும் ஜெயமேஆகும்
வண்ணமாம்ஞானவிதி கைவசமேஆகும்
மகத்தானகன்மம்எட்டும் பலிக்கும்பாரு
கண்ணதாம்வேளைகண்டு முடிக்கவேண்டும்
கண்மணியேசாந்திசொல்வேன் கருதிப்பாரே. 37

259. சாந்திப்பொது

பாரடாபாரில்உள்ள மாந்தர்க்கையா
படரும்ஒருபிணிதான் விலகுதற்கு
நேரடாசாந்திசெய்தால் திரும்பாரு
நேர்மைஉள்ளபீடையது தீராவிட்டால்
சாரடாபாரைதனில் பாசிபற்றி
தள்ளுவதுபோல்சறுக்கி சரீரம்நோகும்
ஏரடாதொடுத்ததிது கன்மபீடை
என்மகனே அறிவாகும் ஊணைக்கேளே. 38

260. ஊண்காலபிணிக்குச் சாந்தி

ஊண்என்றபட்சியினால் வரும்நோய்தீர்க்க
உத்தமனேகணபதியை நிறுத்திமைந்தா
வேணமட்டும்வெள்ளைமலர் சாத்திஎன்று
மேன்மேலும்உபசாரத் துடன்வணங்கி
ஆணென்றஓம்ஸ்ரீம்ஹ்ரீம் ரீங்சங்உங்ஙன்
ஐயும்கலீம்கணபதி சர்வசாப

வானென் றமசிநசி எனவேமைந்தா
மனதொருமித்தாயிரத்தெட் டுருத்தான்ஓதே. 39

261. இதுவுமது

உருவானஅதன்பிறகு கும்பம்வைத்து
ஒருபடிநெல்பரப்பி அறுகோணம்இட்டு
திருவானகாரண பஞ்சாட்சரங்கீறி
ஜெயம்ஆனகாரிய பஞ்சாட்சரமும்சேர்த்து
ஒருவானசக்கரத்தில் சூலம்விட்டு
ஓம்அம்உம்சிவசிவா என்றுநாட்டு
தருவானகும்பத்தில் ஜலம்நிரைத்து
தண்மையுள்ளமாவிலையை அதன்மேல்வையே. 40

262. இதுவுமது

வைத்தபின்புஅதன்மேலே தேங்காய்வைத்து
வாகானநூல்சுற்றி ஆடைசாற்றி
வைத்ததொருகும்பத்தின் முன்னேஐய்யா
வஸ்துவுடன்சுத்தியும்தான் வைத்துமைந்தா
செய்த்ததொருவர்க்கவகை மிகப்படைத்து
நேரிருந்துஓம்ஐயும் கிலியும்சௌவும்
தைத்ததொருபாணம்அடா அங்உங்என்று
சர்வபீடைகளு மசிநசியென்றோதே. 41

263. இதுவுமது

ஓடாதஆயிரத்தெட் டுருவுஆனல்
உத்தமனேஓமகுண்டம் இரண்டுபோடு
வாடாதசமித்துவகை சொல்லக்கேளு
வன்னிமுன்அரசுருகி தர்ப்பைநெல்லை
ஏதடாஆவின்நெய் ஆகுதிகள்செய்து
என்மகனேகுண்டத்திற் குபசாரம்செய்து
கோதிலாஅட்சரத்தைச் சொல்லக்கேளு
குணமாகமுதல்உரைத்த தெடுத்துஓதே. 42

264. இதுவுமது

ஓதியதோர்உருஐயா யிரமதானல்
உத்தமனேபெலியுடனே பொங்கலிட்டு
கோதில்லாசாம்பல்யெல்லாம் குடத்தில்போட்டு
குடத்துநீர்அவன்சிரசில் விடுக்கும்போது
ஆதிதனைச்சிவசிவா யெனநினைத்து
அப்பனேஅபிஷேகம் செய்துபாரு
நீதியாம்நாள்அதுதான் பதினொன்றானல்
நிலையாதுபீடையெல்லாம் விலகும்பாரே. 43

265. இதுவுமது

விலகுமேவெள்ளியினல் தகடுசெய்து
வியாதிஉச்சாடனம்விதித் தெழுத்தைமாற்றி
கலகம்இல்லாதேவியென்ற வாலைபூசை
கைபாகம்தப்பாமல் கனிந்துசெய்து
நிலையானமுன் தகட்டை முன்புவைத்து
நிகழ்ந்துஉச்சாடனம்உரு ஆயிரத்தெட்டேஆனல்
விலகாமல்இருந்திட்ட பீடைபோச்சு
மேன்மேலும்கன்னிக்கு உபசாரஞ்செய்யே. 44

266. நடைக்காலபிணிக்குச் சாந்தி

செய்துபார்நடைஅதனிற் பீடைவரும்ஆகில்
தீர்ப்பதற்குவிநாயகரை வைத்துக்கொண்டு
கொய்துபார்குண்டம்ரெண்டு கும்பம்பத்து
கூறுனசமித்துவகை சொல்வேன்மைந்தா
நைவானஅரசுவன்னி உருவிதற்பை
நல்லவிளாம்அரசுபலா கருங்காலிச்சுப்பல்
நெய்வானநெய்பொறியும் கடலைமொச்சை
நேராகக்கலந்துகொண்டு குண்டம்போடே. 45

267. இதுவுமது

போடவேஆவின்நெய் இலுப்பைநெய்யும்
புண்ணியனேஇரண்டும்ஒன்றாய்க் கலந்துக்கொண்டு
நாடவேயெக்கியத்தில் ஆதிகள்செய்ய
நல்லதொருஅட்சரத்தைச் சொல்லக்கேளு
ஆடவேஓம்ஸ்ரீம்ரீம் அங்உங்என்
ஐயும்கிலியும்கணபதி சர்வபீடை
தேடவேமசிநசிஎன்று பதிைனயிரந்தான்
செலுத்துவாய்பொங்கல்பெலி உபசாரஞ்செய்யே. 46

268. இதுவுமது

செய்துகொண்டுகுண்டத்தின் சாம்பல்எல்லாம்
திரணமும்தான்போகாமல் கும்பத்தில்போட்டு
பெய்துநீர்குளிப்பாட்டி சிவாஎன்றேதான்
பிரியமுடன்சிவன்பாதம் பெரிதும்போற்றி
செய்துகொண்டுரவித்தகடு அதனில்மைந்தா
திரமானதம்பனத்தை எழுதிக்கட்டு
வைத்துகொண்டுபோகும்அடா நடையின்பீடை
மக்களேபதினொருநாள் செய்துபாரே. 47

269. அரசுகாலப் பிணிக்குச்சாந்தி

செய்யவேஅரசுதனில் பீடைவந்தால்
திடமானகணபதியை வைத்துப்போற்றி

நெய்யானகும்பத்தை முன்னேவைத்து
நேர்முகமாய்வாலேதனைப் பூஜைசெய்து
கொய்பவேகுண்டம்அது இரண்டுசெய்து
கொளுத்துகிறசமித்துவகை சொல்வேன்மைந்தா
நைவானஅரசுசெஞ் சந்தனமேஆகும்
நன்மையுள்ளநெற்பொரி காராவின்நெய்யே. 48

270. இதுவுமது

நெய்ஆன ஆகுதிகள் செய்துக்கொண்டு
நேர்இருந்துஉரு ஐயாயிரம்நீபோடு
துய்யாதபலிஉடனே தூபம்காட்டி
தோணவேசாம்பல் எல்லாம்கும்பத்திட்டு
கையாலேபிணியாளன் தலைமேல்விட்டு
கருணைஉள்ளசிவன்பதத்தைக் கருத்தில்வைத்தால்
மெய்யாலேவருகின்ற பிணிகளோடும்
மேலானசுவர்னத்தால் தகடுசெய்யே. 49

271. இதுவுமது

தகடதிலேமசியெழுத்தை வரைந்துகொண்டு
தப்பாமல்நாள்எழு பூசைசெய்து
விகடம்இதில்இல்லாமல் போடும்போது
மேலானபீடையெல்லாம் விலகிப்போகும்
கபடம்இதில்சிவன்கிருபை மெத்தவுண்டு
தரணிதனில்அறிந்தவர்கள் வணங்கிப்போற்றி
அகடில்லாதுலகதனில் வாழ்வார்பாரு
ஆதலினால்பீடைஇதில் விலகும்பாரே. 50

272. நித்திரைக்காலப் பிணிக்குச்சாந்தி

பாரடாஉறக்கத்தில்வரும் பீடைதானே
பதிவிடுத்துவிலகுதற்குப் பக்குவம்கேளீர்
நேரடாகணபதியை வைத்துக்கொண்டு
நேர்முகமாய்வாலையின்முன் கும்பம்வைத்து
ஓரடாஓமகுண்டம் நாள்தான்போக
உத்தமனேசமித்துவகை உரைப்பேன்ஐயா
கோரடாபால்அரசு அத்திஇத்தி
குலவியதேவன்னிமுன்னே உருவிஎள்ளே. 51

273. இதுவுமது

எள்ளுடனேநவதான்யம் நெற்பொறியும்சேர்த்து
என்மகனேயாவின்நெய் இலுப்பைநெய்யும்
தெள்ளுடனேதேங்காய்நெய் கலந்துக்கொண்டு
தெர்ப்பையினாற்கோறிவிடும் உருஎருமட்டும்

அள்ளுடனே ஓம்ரீம்கிலியம் ஐயும்சௌவும்என்று
அப்பனே ஸ்ரீரீம்ஹரீம் அங்உங்சிவாஎன்று
கிள்ளுடனே சர்வபீடை நசிநசிஎன்று
கெடியாகஎழுபதினாயிரம் தான்போடே. 52

274. இதுவுமது

போடடாகுண்டம்ஒன்றில் தம்பனம்தான்
புகழானமற்றொன்றில் பேதனம்தான்
கேளடாவித்வேஷணம் தான்மூன்றில்
கெடியானநான்கில் இடுபேதனம்தான்
நாடடர்பெலியுடனே தூபங்காட்டி
நலமானகுண்டத்தில் சாம்பல்வாறி
கோடடாகும்பத்தில் விடுத்துமைந்தா
குளிப்பாடச்சிவன்தனக்கு அபிஷேகம்செய்யே. 53

275. இதுவுமது

செய்யவேரவிமதியும் சேர்த்துக்கொண்டு
திரமாகத்தகட்டினில் உச்சாடனம்தான்கீறி
உய்யவேபிணியாளன் தனக்குக்கட்ட
ஓடிவிடும்பீடைஎன்ற தோஷம்எல்லாம்
துய்யவளாம்கன்னிக்கு உபசாரஞ்செய்ய
சொற்பெரியவேதியர்க்கும் உபசாரம்செய்ய
வையகத்தில்இவைகளெல்லாம் நன்றுநன்றும்
மக்களேமண்டலம்தான் அரையாம்செய்யே. 54

276. மரணகாலப்பிணிக்குச்சாந்தி

செய்யுமடாமரணத்தின் பீடைவரும்ஆகில்
திரும்புவதுவருத்தம்அடா சிவன்செயலேவேண்டும்
துய்யவனும்கணபதியை வைத்துப்போற்றித்
தொடுத்திடுவாய்வாலையிடம் கும்பம்வைத்து
மெய்யானஓமகுண்டம் எட்டுபோக
விளம்புகின்றசமித்துவகை சொல்வேன்மைந்தா
தைஅரசுஅத்திஇத்தி உருவிவன்னி
தனதானகருங்காலி வாவின்கொம்பே. 55

277. இதுவுமது

கொம்புடனேபுரசுசுப்பல் நெல்விசுப்பல்
கோர்வையாய்நவதான்யம் பொறியுங்கூட்டி
அன்புடனேமேதைநெய்யும் செம்மறியின்நெய்யும்
அப்பனே இலுப்பைநெய்யும் தேங்காய்நெய்யும்
தென்புடனேபுன்னைநெய்யும் புங்கன்நெய்யும்
தெளிவானவேம்பின்நெய் பன்றிநெய்யும்

இன்புடனேகேசரியின் நெய்யுங்கூட்டி
எடுத்திடுவாய்எக்கியத்ரல் இனிதாம்பாரே. 56

278. இதுவுமது

பாரேநீகுண்டம்எட்டில் கன்மம்எட்டும்
பாங்காகஜபம்பதினுயிரமே ஆனல்
வாரேநீநினையாத பொங்கல்பெலிதூபம்
வேணதும்செய்தெரிந்தவனைக் கும்பத்திரண்டு
நீரேநீநின்றுசதா சிவத்தைப்போற்றி
நீர்கொண்டுஅவன்சிரசில் அபிஷேகித்தால்
சேராமல்மண்டலம்ஒன் றிவ்வணம்தான்
தொடர்ந்துநின்றதோஷம் எல்லாம்விலகும்பாரே. 57

279. இதுவுமது

விலகுமேஇவ்விதத்தால் வந்ததோஷம்
வேறெனினும்இவ்வண்ணம் சாந்திதானே
சலனம்இல்லைசெய்துகொண்டால் நீங்கும்நீங்கும்
தரணிதனில்சவுக்கியமாய் வாழலாகும்
இலகுவதாம்என்னசெய்யப் போகுதென்று
எளிதாகநினைத்துவிட்டால் இழுத்துக்கொல்லும்
அலையவேபிரமலபி உள்ளமட்டும்
அலக்கழிக்கும்பீடைஇன்னும் தோணும்பாரே. 58

280. இதுவுமது

தோணுமோஉலகில்உள்ள பசாசர்க்கெல்லாம்
தோணுதுபஞ்சபட்சி சூட்சம்அப்பா
காணுதுமோகக்கிடையும் கருமானம்தான்
கருணைவைத்துஆசானே காட்டவேண்டும்
பேணவேமனதுறுதி ஆகவேண்டும்
பிசகினுல்பஞ்சபட்சி பிசகிப்போகும்
ஆணவேஅட்சரங்கள் அறியவேண்டும்
அறிவதென்றால்அரிதாகும் உரைப்பேன்ஊணே. 59

பிணிப்படலம் முற்றிற்று.

யாத்திரைப் படலம்

பொதுவிதி

281. யாத்திரைக்கு ஊண் காலபலன்

ஊண் அதிலேவழிப்பயணம் புறப்பட்டால்தான்
உத்தமனேஉடலில்ஒரு பிணியும்இல்லை

தோணவேபோஜனங்கள் வர்க்கவகைஉண்டு
சொல்லரியதோஷமுடன் பிறப்புஉறவாகும்
தாணுவாய்தன்னிடத்திற் பொருளுடைமைசேரும்
சஞ்சலங்கள்மனத்திற்குச் சற்றும்இல்லை
மாண்புடையஅரசன்தான் சத்துருவேஆனால்
வழிநடையில்துயரம்மெத்த வழுத்தலாமே. 1

282. இதுவுமது

வழுத்தவேஉடல்தனக்கு வருத்தம்உண்டாம்
வகையானபோஜனங்கள் வாய்த்திடாது
கொளுத்துமோர்சிலுகுசண்டை களவும்ஆகும்
கொடுமையாய்உறவினரை அகற்றிவைப்பான்
தழைத்ததோர்மனதிற்கு எவ்வளவேனும்
சந்தோஷம்சலனம்அல்லாற் சற்றும்இல்லை
சுழித்ததோர்சத்துருவின் வலிதாகாது
துணையானமித்துருவின் வலிதுநன்றே. 2

283. யாத்திரை நடைகாலபலன்

நன்றல்லநடையிலே போகொண்ணாது
நடந்தலைவதல்லாது மற்றொன்றில்லை
பண்டுறவாய்இருந்தவரும் பகைவர்ஆவர்
பசிநோம்பொசிக்கும்அந்தப் பலனும்இல்லை
வண்டயாம்கூந்தல்நல்லார் சேர்வும்இல்லை
வழக்குகளிற்சென்றாலும் வெல்வதில்லை
கொண்டமனையாட்டியுடன் கொடுமைமெத்த
கூற்றன்என்றசத்துருஊண் அரசாகாதே. 3

284. இதுவுமது

அரசனும்மித்துருதான் இருந்தால்நன்று
அலைந்தாலும்பொசிப்புக்கு இனம்உண்டாகும்
சிரகரியவந்தவொரு பீடைதன்னை
சிலுகுதன்னைநீக்கிவைப்பான் க்ஷணத்திலேதான்
சரசம்இல்லைஉறவதனிற் சொற்பலாபம்
சரீரத்திற்பிணிவந்து தானேநீங்கும்
பரிசம்என்றமணம்அதுதான் செய்யொண்ணாது
பகைவந்துஒருபோதும் வாழார்பாரே. 4

285. யாத்திரைக்கு அரசின்காலபலன்

வாழ்வானஅரசுதனிற் பயணம்ஆனால்
மனதிற்குஎவ்வளவேனும் பீடைஇல்லை
கேளீராம்உறவினர்கள் அனந்தகோடி
கெடியானபோகபோக்கியங்கள் உண்டாம்

மாளாதசத்துருக்களின் வழக்குவெல்லும்
மணம்செய்யநன்ருகப் பெருகிவாள்வர்
ஏழ்மையில்லாப்பொருளுடன் வஸ்திரங்கள்உண்டு
இன்பம்உண்டரசனிட இணங்கப்பாரே. 5

286. இதுவுமது

பாரடாசொன்னதில் ஓர்பழுதும்இல்லை
பகைஇல்லைபகைத்தபேர் ஜெயிப்பதில்லை
சோரடாபிரபுஉற வாகும்பாரு
சேர்க்கையுமேமெத்தஉண்டு மனமகிழ்ச்சிஉண்டு
ஆரடாஅரசனைத்தான் வெல்லப்போருர்
ஆராலும்கூடாது சுகம்அதிகமாகும்
நேரடாசத்துருவால் இல்லாவிட்டாலே
நேர்ந்தபடிவெல்லும்இது திண்ணம்தானே. 6

287. யாத்திரைக்கு நித்திரைக்காலபலன்

திண்ணம்அதாம்நித்திரையிற் சொல்லொண்ணுது
தீராநோய்வரும்உன்னல் திண்ணம்இல்லை
வண்ணம்அதாம்முன்உறவும் பகையதாகும்
வழக்குகளிற்சென்ருலும் சேதம்ஆகும்
கண்ணனுமாய்இருந்தாலும் வராதுகண்டாய்
கடினமடாபோனவர்கள் மீளார்மீளார்
முன்னமேபட்சிஅது உறங்கிற்றையோ
மூடர்களேசத்துருஊண் அரசாகாதே. 7

288. இதுவுமது

அரசாகில்சத்துருதான் கொடுமைமெத்த
அலக்கழிப்பான்மனம்புண்ணய் நோகச்செய்வான்
சுரமானசூடுகொண்டு உடலும்காந்தி
சுழல்வண்டுசுழல்வதுபோல் துன்பம்மெத்த
பரமானஆபத்துக் காளும்ஆகிப்
பகைத்தவர்கள்நகைத்திடவே பழிகள்செய்வான்
சரமானபிரசண்ட வாய்வுக்குள்ளே
சருகதும்பாம்பின்வாய் தவளைஆமே. 8

289. யாத்திரைக்கு மரணகாலபலன்

தவளைஅடாமரணத்திற் பயணம்ஆனல்
சத்துருதான்ஊண்அரச தாகிநின்ருல்
கவலைஎன்ன இனிமேலும் சாவுதிண்ணம்
கைப்பொருள்போம் மற்ருெருவர்உதவியில்லை
சவளையைப்போல்மனம்கொதித்து நோகும்புண்ணய்
சண்டாளசத்துருவின் பகைஆகாது

சிவன்சொல்லமுனிவர் சொன்ன திதுதப்பாது
சென்றவர்கள் திரும்பிவரமாட்டாரே. 9

290. இதுவுமது

மாட்டாதமரணத்தில் மித்துருவலிதானல்
மனம்நினைத்தும் போனதுபோல்வருவதில்லை
தேட்டமாம்பொருளதுகைச் சிக்கிடாது
சிந்தைநொந்துபுண்ணுகிச் செடலம்நோயாம்
பாட்டிலேமனம்துயரப் பட்டுநொந்து
பதறுவதும்அல்லாமற் பழிவந்தெய்தும்
நீட்டியதோர்மரணத்தில் யாதொருகாரியமும்
நினைத்தாலும்நீணிணத்தில் ஆகாதுபாரே. 10

291. பொதுவிதி சிறப்புவிதி 2-ற்கும் வரலாறு.

ஆகாதேஎதும்குறுக்கித் தெளிவாய்ச்சொன்னேன்
அப்பனேபகல்ஒன்று ஜாமம்அஞ்சு
நோகாதுஅதைகுறுக்கி நாழிகையாச்சொன்னேன்
நுணுக்கும்ஆய் விநாடியிலேநுவலக்கேளு
வாகாகவகைவிபரம் ஆகத்தானே
வளமாகப்பார்த்தறிந்து வரிசைஆக
வேகாதபொருள்போல ஞானமார்க்கம்
விள்ளாமல்விள்ளும்அடா ஊனைக்கேளே. 11

சிறப்புவிதி.

292. யாத்திரைக்கு ஊண்கால முதல் விநாடியின் பலன்

ஊண்காலஅதனில் முதல்விநாடிதன்னில்
ஊர்ப்பயணம்யாவரெனும் போவாராகில்
சேணரிவபட்சணமும் பாற்சோறுண்டு
திரவியங்கள்உண்டுபரி ஜெனங்கள்உண்டு
மாணரியுமன்னர் உறவாகும்பாரு
மழைஉண்டுமங்கள சோபனங்கள்உண்டு
வேணபடிநினைத்த காரியங்கள்கூடும்
மீளளவும்பிணிதருவ தில்லைபாரே. 12

293. யாத்திரைக்கு ஊண்கால 2-ம் விநாடியின் பலன்

பிணிஇல்லைஊண்இரண்டாம் விநாடிதன்னில்
பிரயாணம்செயில் நினைத்ததெல்லாம்ஆகும்
கனிவர்க்கம்போஜன வர்க்கங்கள்உண்டு
கலந்துறவாம்சோபனங்கள் கடுகிக்கூடும்
வணிகம்எனும்வாணிப ஆம்மகிழவும்மெத்த
வழிநடையில்அணிஉண்டு ஆடைஉண்டு

தனிஆன அரசுமித்துரு ஆகநின்றால்
தான்நடத்தும்காரியம்தான் சொல்லொண்ணாதே. 13

294. யாத்திரைக்கு ஊண்கால 3-ம் விநாடியின் பலன்

சொல்லொண்ணாதுஊண்மூன்றும் விநாடிதன்னில்
துலைதூரம்பிரயாணம் போவார்ஆகில்
கல்லனையமனத்துயரம் சற்றும்இல்லை
கண்டவர்கள்வெகுஉறவாய்க் கலந்துகொள்வார்
தொல்லைஇல்லைபோஜனத்திற் குறைஒன்றில்லை
ஸ்தூலம்அதிற்பிணிஇல்லை பகைகள்இல்லை
அல்லல்தரும்அரசுசத்துரு ஆகநின்றால்
அடுத்தவர்கள்பகைஉண்டு சேதம்ஆமே. 14

295. யாத்திரைக்கு ஊண்கால 4-ம் விநாடியின் பலன்

சோரம்இல்லைஊண் அதில் நான்காம்விநாடி
துணிந்தேகில்துணைவுண்டு தோகைஉண்டு
சாரம்என்றபொருளுண்டு சம்பத்துண்டு
சகலஜனகூட்டுறவும் மணமும்உண்டு
காரம்என்றபந்துக்களின் சேர்க்கைஉண்டு
கலங்காதேஒருபோதும் கலக்கம்இல்லை
வீரன்என்றவேந்தனிட பகைஆகாது
வேந்தனிடப்பகைமிகவும் துயரம்ஆமே. 15

296. யாத்திரைக்கு ஊண்கால 5-ம் விநாடியின் பலன்

துயரம்ஊண்ஐந்தாம் விநாடிதன்னில்
துலைதூரம்பிரயாணம் தொடர்ந்துபோகில்
சயமானவழிஅதனிற் பகைகள்உண்டு
தடைஉண்டுமனத்தடங்கா இடர்கள்உண்டு
சுயமானஒருத்தர் உறவாகும்பாரு
கலந்ததினால்வரும்பீடை கழன்றுபோகும்
பயிரானஅரசுபகை இருந்தால்மோசம்
பணியார்கள்பிறர்ஒருத்தர் பாசத்தோரே. 16

297. இதுவுமது

பாசம்என்றஅரசுபகை இருந்தால்மோசம்
பழிவருமேவழிநடையிற் களவுபோகும்
வீசிநின்றபிணிஉண்டு அரசுபகைஉண்டு
மேலானமனுஉதவி இல்லைஇல்லை
தாசியறிற்பிறர்ஜனங்கள் சல்லியமேசெய்வார்
தனதாகஇருந்தவரும் பேசார்பேசார்
மோசம்என்று திசைநோக்கி வருவான்மூங்கை
மொய்குழலாள்பூமடந்தை உதவியில்லைபாரே. 17

298. யாத்திரைக்கு நடைக்கால முதல் விநாடியின் பலன்

உதவிஇல்லாநடை முதலாம் விநாடிதன்னில்
உத்தமனேஊர்ப்பயணம் போவாராகில்
சதியாகவீண்நடையாய் நடத்திக்கொல்லும்
தண்மையுள்ளமனுஉதவி இல்லைஇல்லை
கருவியதோர்சுகயோகம் தானும்இல்லை
களவுபோம்பெண்பகைபாற் கலகம்ஆகும்
பதம்ஆவதொருபோதும் வருவதில்லை
பழிகாரஊண் அரசின் பகையாகாதே. 18

299. யாத்திரைக்கு நடைக்கால 2-ம் விநாடியின் பலன்

பகையானநடைஇரண்டாம் விநாடிதன்னில்
பார்தனிலேஊர்ப்பயணம் நடக்கொண்ணுது
தொகையானபோஜனத்தால் துயரமாகும்
துணைஒருவர்உதவியில்லை நாவில்நோயாம்
வகையானபொருள்கூடும் களவுபோகும்
மன்னவரால்தண்டிக்க வருமேஅப்பா
தகையானபோஜனத்தில் மித்துருவே ஆனுல்
ஜனஉதவிகொஞ்சம்உண்டாம் தண்மைபாரே. 19

300. யாத்திரைக்கு நடைக்கால 3-ம் விநாடியின் பலன்

தண்மைஎன்றநடைமூன்ரும் விநாடிதன்னில்
தனச்சேதம்உயிர்க்குதயி தானேஇலை
உண்மைஎன்றமித்துருவும் சத்துருவாய்எதிர்ப்பன்
உலகத்தில்துணைஇவனுக் கொருவர்இல்லை
வண்மைஎன்றதந்தைமணம வெறுத்துப்போகும்
வழிநடையில்வெகுதுயரம் வருமேபாரு
திண்ணம்என்றசத்துருஊண் அரசன்ஆனுல்
தீவினைகள்மெத்தஉண்டு சீரழிப்பான்தானே. 20

301. யாத்திரைக்கு நடைக்கால 4-ம் விநாடியின் பலன்

சீரழிவாம்நடைநான்காம் விநாடிதன்னில்
திரமாகஊர்ப்பயணம் செல்வார்ஆகில்
கோரணிக்குஉள்ளாகி விதிவசத்தைநொந்து
கொடும்துயரால்புண்ணுகிக் குமுறுவான்பார்
தாரணியிற்சத்துருஊண் அரசாகாது
சண்டாளர்கொடுமைமெத்த தயங்கச்செய்வான்
தேரும்இந்தஇருவர்களும் மித்துருவாய்நின்ருல்
ஜெயம்உண்டுபிறர்உதவி செய்வான்பாரே. 21

302. யாத்திரைக்கு நடைக்கால 5-ம் விநாடியின் பலன்

செய்ததொருநடைஐந்தாம் விநாடிதன்னில்
சேர்ந்திருவர்தங்களிலே மித்துருஆனுல்

நொந்துமனம்புண்ணுகித் தெளிவும்ஆகும்
நொடிக்குள்ளேமனமகிழ்ச்சி நுவலல்ஆகும்
எய்திவரில்அரசுஉற வானுல்அப்பா
என்மக்காள்வெகுசுகங்கள் எய்தும்பாரு
தையலர்கள்உறவாகும் சந்தோஷம்உண்டு
தயவானஅரசுஉற வாகும்காலே. 22

303. யாத்திரைக்கு அரசுகால முதல் விநாடியின் பலன்

உறவாகும்அரசதிலே முதல்விநாடி
உத்தமனேபிறதேசம் போகநன்று
நிறைவானசொல்உண்டு மாத்தும்உண்டு
நினைத்தபடிசுகம்உண்டு உதவிஉண்டு
குறைவானகாரியங்கள் வருவதில்லை
கூடிவரும்பரிசங்கள் அரசர்உறவாகும்
பரவும்ஒருமணம்உண்டு பகையேஇல்லை
பகையானபேர்களும் வந்துறவாவாரே. 23

304. யாத்திரைக்கு அரசுகால 2-ம் விநாடியின் பலன்

ஆரானஅரசிரண்டாம் விநாடிதன்னில்
பரிவாகப்பிறதேசம் பயணம்ஆகில்
நேரானதடையில்லை துயரம்இல்லை
நினைத்தபடிமுடிப்பதற்குப் பிறகுஉறவாவன்
காரானமனமகிழ்ச்சி அதிகம்உண்டாம்
கண்கொள்ளாக்காட்சிகளிற் களிக்கல்ஆகும்
தேரானபூமிதனம் கைவசமேசேரும்
செல்வம்அதுசெப்பஎன்னுல் அடங்கிடாதே. 24

305. யாத்திரைக்கு அரசுகால 3-ம் விநாடியின் பலன்

அடங்காதஅரசு மூன்றும்விநாடி
அப்பனேபயணம்தான் ஆவார்ஆகில்
தடங்காணும்உதவியினுல் சுகங்கள்உண்டு
சண்டாளசத்துருக்கள் இல்லைஇல்லை
மடங்காதவாழ்வென்னுல் மதிக்கப்போமோ
மன்னர்உறவாகும்மன மகிழ்ச்சிஉண்டாம்
ஒடுங்காதபூபாது துணைதான்உண்டு
உரைக்கவொண்ணுதிவன்வாழ்வு இசைக்கஎன்னுல்அரிதே

306. யாத்திரைக்கு அரசுகால 4-ம் விநாடியின் பலன்

அரிதானஅரசு நான்காம்விஞடி
அப்பனேகங்குகரை இல்லைசெல்வம்
பெரிதானஇடங்களிலே மணம்சேர்க்கைஉண்டு
பின்தொடரும்ஆண்குழந்தை பிரபலமேஆகும்

சரியானபொருள்வரத்து உண்டாம்மேலும்
சவுக்கியம்என்றசுகபோகம் சுத்தம்உண்டு
குறியானஇவன்தன்னால் குலம்ஈடேறும்
குவலயத்தில்உண்டாம் வெகுஉதவிபாரே. 26

307. யாத்திரைக்கு அரசுகால 5-ம் விநாடியின் பலன்

உதவிஎன்றஅரசுஐந்தாம் விநாடிதன்னில்
உத்தமனேஎத்தொழிலும் செய்யநன்று
பதவிஎன்றகாயசித்தி யோகசித்தி
பண்பானஞானசித்தி மந்திரசித்தி
சதமாகநினைத்தது கைவசமேஆகும்
சண்டாளநேரம்அங்கே தரிப்பதரிதாகும்
அதமம்என்றசொல்போச்சு உத்தமம்தான்ஆச்சு
அப்பனேஇவ்வேளை வாய்ப்பதரிதாமே. 27

308. யாத்திரைக்கு நித்திரைக்கால முதல் விநாடியின் பலன்

அரிதென்றஉறக்கத்தின் முதல்விநாடி
அப்பனேபிறதேசம் போகும்காலம்
சரிஎன்றதன்உயிர்தான் தவிக்கும்பாரு
தயங்காதமனம்கூடத் தவித்துப்போகும்
விரிகின்றஐம்புலனும் துயரப்பட்டு
மெலிவதல்லால்சுகம்ஒன்று இல்லைஇல்லை
விரிகின்றபரிஜெனங்கள் இல்லைஇல்லை
அப்பனேசண்டாள நேரம்தானே. 28

309. யாத்திரைக்கு நித்திரைக்கால 2-ம் விநாடியின் பலன்

நேரானஉறக்கம் இரண்டாம்விநாடி
நினைத்திட்டகாரியங்கள் வசப்படாது
கூரானசரீரத்திற் பிணிதான்வந்து
கூற்றுவன்போல்உடல்உயிரைக் கொடுமைசெய்யும்
பாரானசண்டாளர் பகைதான்மெத்த
பகைத்ததினால்வெகுகொடுமை பழிகள்சூழும்
ஆரணியும்சிவன்கிருபை அகலநிற்கும்
அவன்சடலம்துயரத்தால் அழுந்தும்பாரே. 29

310. யாத்திரைக்கு நித்திரைக்கால 3-ம் விநாடியின் பலன்

அழுந்துகின்றஉறக்கம் மூன்றும்விநாடி
அப்பனேபிரயாணம் ஆவார்ஆகில்
கொழுந்துபோம்மனுஉதவி இல்லாமல்தான்
கொள்ளையும்ஆம்வெள்ளத்தில் அவதியாகும்
கழிந்துபோம்ஜடலம் உருவாவதில்லை
கண்டவர்கள்இவனுடனே கலந்துறவேஇல்லை

அழிந்துபோம்உயிர்ச்சேதம் ஆகும்மைந்த
அப்பனேஇவன் துயரம் தீர்வதரிதாமே. 30

311. யாத்திரைக்கு நித்திரைக்கால 4-ம் விநாடியின் பலன்

அரிதானஉறக்கம் நான்காம்விநாடி
அப்பனேவழிப்பயணம் போகொண்ணாது
விரிவானவழியிடையில் சஞ்சலத்தால்ஐயா
வெகுதுயரம்வந்திடும்பார் விஷதிருஷ்டிஉண்டாம்
குறைவானகாலம்என்று பிறஜனங்கள்பேசும்
கூடினபேர்புறப்பட்ட நேரம்என்பார்
சரியானவேளைஅல்ல சண்டாளவேளை
தண்மைஉள்ளமித்துரு அரசாகில்நன்றே. 31

312. யாத்திரைக்கு நித்திரைக்கால 5-ம் விாடியின் பலன்.

நன்றிஇல்லாஉறக்கம்ஐந்தாம் விநாடிதன்னில்
நாட்டிலேபயணம்வைத்து போவார்ஆகில்
குன்றென்றமுனைமுகத்திற் போனார்போல
கொடுமையாம்உயிர்சேதம் வருமேதிண்ணம்
மன்றென்றவிஷதிருஷ்டி யாலேசாவான்
மக்களேசேரானால் சாவும்உண்டு
கன்றென்றபெண்ணுறவால் உயிர்தான்சேதம்
கடினம்அவன் திரும்புவதிங் கில்லைபாரே. 32

313. யாத்திரைக்கு மரணகால முதல் விநாடியின் பலன்

இல்லையென்றமரணமுதல் விநாடிதன்னில்
என்மகனேஊர்பயணம் போகொண்ணாது
தொல்லைஅடாபோனவர்கள் திரும்பார்மைந்தா
தோணாமல்உயிர்தவிப்பார் துணையில்லாமல்
சல்லியமாம்சோரர்தன்னால் உயிரும்சேதம்
சண்டாளஉயிர்க்கெவர்தான் துணைஆவார்கள்
கொல்லும்அடாஅண்டினபேர் தலைமையுங்கூட
கொடுமைஉள்ளநாட்பயணம் ஆகாதாமே. 33

314. யாத்திரைக்கு மரணகால 2-ம் விநாடியின் பலன்

ஆகாதமரணம்இரண்டாம் விநாடிதன்னில்
அப்பனேபுறப்பட்டால் உயிர்ச்சேதம்ஆகும்
வேகாதும்வெந்துமனம் புண்ணாய்நோகும்
வேறுபட்டஅன்றிலைப்போல் துன்பம்எய்தும்
சாகாதபிணம்போல உயிர்தவித்து
தனக்கொருத்தர்துணைஇன்றி வாடாநிற்பன்
நோகாமல்போவதில்லை பழையபகைகள்வருமே
நோவதுதான்மெத்தவுண்டு நொந்துவிடும்மனமே. 34

315. யாத்திரைக்கு மரணகால 3-ம் விநாடியின்பலன்

மனம்என்றமரணம் மூன்ரும்விநாடி
வழிப்பயணம்தான்போகில் மரணம்ஆவார்
இனம்என்றசனச்சேதம் தனமும்சேதம்
என்மக்காள்உடலில்வந்த பிணிதீராது
சனம்என்றஅவர்இருந்தும் உதவியில்லை
சண்டாளர்அவர்களும்தான் சத்துருஆவார்
கனம்என்றமித்துரு அரசாகிநின்ருல்
கருதவேபலர்உதவி செய்வார்பாரே. 35

316. யாத்திரைக்கு மரணகால 4-ம் விநாடியின்பலன்

பாரானமரணம் நான்காம்விநாடி
பயணம்அதாய்ப்புறப்பட்டால் மரணம்எய்தும்
வேருருவர்துணையில்லை விஷத்தால்மாய்வன்
விழில்கொண்டகானகத்தில் மிருகவதைஆகும்
சோரம்என்றசோரர்களாய் களவுவுண்டு
தொலையாதஇடைஞ்சல்வந்து தோணும்பாரே
கூருனகூற்றுவனே துணையாகநின்று
கொல்வன்என்றுகும்பமுனி சொன்னுர்அன்றே. 36

317. யாத்திரைக்கு மரணகால 5-ம் விநாடியின்பலன்

சொன்னதொருமரணம்ஐந்தாம் விநாடிதன்னில்
துலைதூரம்பிரயாணம் செய்வார்ஆகில்
தன்னுலேஉயிர்தனக்கும் மனம்புண்ணுகும்
சண்டாளநேரம்அது தலைஎடுக்கொட்டாது
கொன்றுடும்கூற்றுவந்தான் பிடறிஏறிக்
கொன்றிடவேநின்றிடுவேன் கொக்கரித்து
சன்னுசிஆக்கிவிடும் இதுபொய்யல்ல
தத்தளித்துநெஞ்சம்அது தவிக்கும்பாரே. 37

318. இதுவுமது

தவிக்கவேவேண்டாம்நீ பட்சிபகைநீக்கி
தனதானமித்துருவிற் செய்தாயானுல்
குவிக்கவேஎத்தொழிலும் கூடும்பாரு
குணம்குறிகள்நிலைஅறிந்து கூறல்ஆகும்
தவிக்காமல்சகலகலை வல்லபம்உண்டாகும்
தான்அறிந்தால்அவன்யோகி அவனேசித்தன்
துவக்கம்உறும்யாத்திரையைச் சொன்னேம்இன்னம்
தொல்புவிமேல்மணக்கோலம் சொல்லுவோமே. 38

யாத்திரைப்படலம் முற்றிற்று.

மனைப்படலம்.

319. மனைகோலுதற்கு ஊண்கால முதலாம்விநாடி 2-ம் விநாடிகளின்பலன்

சொல்லுகிறேன்ஊண்முதலாம் விநாடிதன்னில்
துடியாகமனைமுகூர்த்தம் செய்வார்ஆகில்
வெல்லுகிறேன்முன்னூறு வருஷம்தானும்
மேல்மேலுமசுகம்ஆக வாழ்ந்திருப்பார்
தொல்லைஒன்றும்இல்லையடா விநாடிரெண்டில்
சுகமாகஇருநூற்று அன்பதாண்டு
சல்லியம்ஒன்றில்லாமல் வாழ்ந்திருப்பார்
தனபதிக்கும்அதிகம்அதாம் வாழ்வுண்டாமே. 1

320. மனைகோலுதற்கு ஊண்கால 3-ம் விநாடி 4-ம் விநாடிகளின்பலன்

வாழலாம்ஊண்மூன்றும் விநாடிதன்னில்
மக்களேஇருநூறு வருஷம்தானும்
கோள்ஆனதொன்றுஇல்லை செல்வம்மிச்சம்
கோத்திரங்கள்குறைவின்றி வாழல்ஆகும்
வேளானநான்காம் விநாடிதன்னில்
வீடுசெயில்வருஷம் ஒருபதினெட்டுபத்து
கோள்ஆனகுடிதழைத்து வாழும்பாரு
கூர்மையுடன்வாழ்ந்திருப்பார் நன்மைதானே. 2

321. மனைகோலுதற்கு ஊண்கால 5-ம் விநாடியின் பலன்

நன்மைஎன்றஊண்ஐந்தாம் விநாடிதன்னில்
நலமாகவாழ்ந்திருப்பார் பதினைந்துபத்து
செம்மையுடன்அவ்விடத்தின் சோபனங்கள்கூடும்
தினந்தோறும்போஜனத்தின் சிறுமைஇல்லை
தூன்மைஇன்றுபால்பசுக்கள் கட்டிவாழும்
துய்யவஸ்திரபூஷணங்கள் அதிகம்ஆகும்
தின்மைஎன்றஎச்செயலும் வருவதில்லை
ஜெயமாகவாழ்ந்திருப்பார் திண்ணம்தானே. 3

322. மனைக்கோலுதற்கு நடைகால முதல்விநாடி 2-ம் விநாடியின் பலன்

திண்ணம்அடா நடைதனிலேமுதல்விநாடி
செய்தாக்கால்மனைமுகூர்த்தம் வருஷம்நூறு

எண்ணம்அடாவாழ்வுசுகம் அதிகம்இல்லை
என்மகனேவாழ்ந்திருப்பார் சுகமதாக
கன்னம்இடும்களவிதிலே போகும்பாரு
கலங்குமேமனதுபின்பு தெளிவுஆகும்
சொன்னமடாஇரண்டாம் விநாடிதன்னில்
தொடுத்தமனைதொண்ணூறு வருஷம்தானே. 4

323. மனைக்கோலுதற்கு நடைக்கால 3-ம் விநாடியின் பலன்

தொண்ணூறுவருஷம்இதில் சுகமும்துக்கம்
தொடுத்திடுமேவாழ்வுமனம் சுருக்கம்ஆக
எண்ணரியநடைமூன்றும் விநாடிதன்னில்
எடுத்தமனைவருஷம்அதிற் சொன்னதாகும்
கண்ணூறுமெத்தஉண்டு களவுபோகும்
கட்டியதோர்வருஷம்ஒரு முப்பதுக்குள்
பெண்ணூருகண்டம்உண்டு தீக்கோள்உண்டு
பொல்லாதமனிதன்என்று சொல்லுவாரே. 5

324. மனைக்கோலுதற்கு நடைக்கால 4-ம் விநாடியின் பலன்

சொல்வோம்நடைநான்காம் விநாடிதன்னில்
தொடுத்தமனைஎழுபது வருஷம்தானும்
சல்லியம்தான்ஒழித்ததில்லை துன்பம்மெத்த
சண்டையுடன்வெகுகொடுமை சகிக்கொண்ணாது
தொல்லையாம்அரசனிடப் பகையும்சூழும்
துன்பமுடன்தெண்டனையும் அதிகம்உண்டாம்
அல்லவாய்அந்தமனம் கொஞ்சநாளில்
அடைபடுமேதீபமும்தான் அரிதாம்பாரே. 6

325. மனைக்கோலுதற்கு நடைக்கால 5-ம் விநாடியின் பலன்

அரிதாகும்நடைஐந்தாம் விநாடிதன்னில்
அகம்எடுத்தவருஷம்அது அறுபதாகும்
குறியானஅந்தமனை வாழ்வுகொஞ்சம்
கொண்டபெண்டிற்சேதமும்ஆம் சொல்லுவார்இல்லை
எறிபாகும்நன்மைஎன்ற காரியங்கள்
எடுக்கமனம்ஒட்டாது உடைஞ்சல்ஆகும்
சரியானசடலத்தில் நோயுண்டாகும்
சண்டாளசத்துருவின் பகைஆகாதே. 7

326. மனைக்கோலுதற்கு அரசுகாலமுதல் விநாடியின் பலன்

ஆகுமேஅரசுமுதல் விநாடிதன்னில்
அப்பனேமனைமுகூர்த்தம் செய்வாராகில்
ஏகுமேவருஷம்அது ஆயிரந்தான்
என்னசொல்வேன்வாழ்வதென்றால் சொல்லொண்ணாது

சேகரமாம்மனைக்குதிரை கட்டல்ஆகும்
சிவிகைதனில்ஏறுதற்கு யோகம்ஆகும்
வாகானவாழ்வுமணம் செய்யல்ஆகும்
மங்களமாய்தானிருந்து வாழுந்தானே. 8

327. மனைக்கோலுதற்கு அரசுகால 2-ம் விநாடியின் பலன்

வாழுமேஅரசிரண்டாம் விநாடிதன்னில்
வருஷம்அதுஎண்ணூறு மகிழ்ந்தசெல்வம்
ஆறுமேசுகபோகம் அதிகம்ஆக
அப்பனேமங்களமாம் இருந்துவாழும்
கேளுநீஅரசர் உறவாகும்பாரு
கெதிபெறவேமனுக்கூட்டம் ஜனச்சேர்க்கைமிச்சம்
நாளானஅந்தமனை அப்போதுந்தான்
நலமானலட்சுமியாள் வாசம்ஆமே. 9

328. மனைக்கோலுதற்கு அரசுகால 3-ம் விநாடியின் பலன்

வாசம்அடாஅரசுமூன்றும் விநாடிதன்னில்
வருஷம்அதுஅறுநூறு மகிழ்ச்சிஆகும்
நேசம்அடாஅரசரும் வந்திருப்பார்பாரு
நேர்மையுள்ளபிரபுவினிட நேசம்ஆகும்
தேசம்அடாவெகுதூரம் பேருண்டாகும்
திருவென்றபொருளுடைமை கைவசமேஆகும்
பாசம்அடாஅரசுநிகர் மனைக்குவாசல்
பரிவாகத்தானிருந்து வாழும்பாரே. 10

329. மனைக்கோலுதற்கு அரசுகால 4-ம் விநாடியின் பலன்

பாரில்உயர்அரசு நான்காம்விநாடி
பதிளடுக்கில்வருஷம்தான் நூற்றைம்பதாகும்
நேருகின்றவாழ்வதிகம் செல்வம்என்றால்
நிருபதிக்கும்அதிகம் அதாம்மதிக்கொணாது
கோருகின்றகுலம்கிளைகள் செல்வம்ஆகும்
கொண்டாடும்வெகுஜனங்கள் கூட்டம்ஆகும்
ஏறுகின்றபரிஏறி நடப்பன்அல்லால்
என்மகனேகால்நடையாய்த் திரியான்தானே. 11

330. மனைக்கோலுதற்கு அரசுகால 5-ம் விநாடியின் பலன்

தானென்றஅரசுஐந்தாம் விநாடிதன்னில்
தனதானமனைமுகூர்த்தம் செய்வார்ஆகில்
தேனென்றவருஷம்அது நானூறாகும்
செல்வம்என்றநாவினால் சொல்லொணாது
மானென்றவிழிமடவார் சேர்க்கைமிச்சம்
வந்திடுமேபொருளுடைமை கைவசம்அதாக

ஏனென்றசத்துருவே இல்லைஇல்லை
என்மகனே தீமைஒன்றும் இல்லைத்தானே. 12

331. மனைகோலுதற்கு நித்திரைக்கால முதல் விநாடியின் பலன்

இல்லைஎன்றஉறக்கம் முதல்விநாடிதன்னில்
என்மகனேமனைமுகூர்த்தம் செய்வாராகில்
கொள்ளையேபோகும்அப்பா அக்கினியால்வாதை
கூடிவரமாட்டாது ஒருசுகமும்இல்லை
சள்ளைஎன்றபிள்ளையில்லை மனுஉதவியில்லை
க்ஷணநேரம்ஆகிலும் சந்தோஷம்இல்லை
தொல்லைஅடாவருஷம்ஒரு அன்பதுக்குள்
துன்பம்மெத்தஉண்டாகும் சொல்லொண்ணாதே. 13

332. மனைகோலுதற்கு நித்திரைக்கால 2-ம் விநாடியின் பலன்

ஒண்ணாதஉறக்கம்ரெண்டாம் விநாடிதன்னில்
உத்தமனேமனைமுகூர்த்தம் செய்வாயானால்
தன்னாலேஅழிந்துவிடும் நாற்பதற்குள்
தணல்என்றதணல்அதனால் வாதைஆகும்
என்னாலேமனுஉதவி இல்லைஇல்லை
இல்லறத்தில்சுகமில்லை நோய்உண்டாகும்
கண்ணாகநெஞ்சதுவும் கண்ணும்பாரு
கலங்கிடுமேமூதேவி வாசந்தானே. 14

333. மனைகோலுதற்கு நித்திரைக்கால 3-ம் விநாடியின் பலன்

வாசமாம்உறக்க மூன்றும்விநாடி
மக்களேமனைமுகூர்த்தம் செய்வாராகில்
பாசமாம்வருஷம்அது முப்பத்தைந்து
பாழடையும்அல்லாது சுகமேஇல்லை
நேசமாம்உறவில்லை பிள்ளையில்லை
நினைத்ததொருகாரியங்கள் நேர்வதில்லை
நாதமாம்உறக்கம்என்ற வேளைதானும்
நன்மைஒருநாளும்இல்லை நாசந்தானே. 15

334. மனைகோலுதற்கு நித்திரைக்கால 4-ம் விநாடியின் பலன்

நாசமடாஉறக்கம் நான்காம்விநாடி
நல்லதொருமனைஎடுக்கில் முப்பதாண்டும்
தோஷமடாமனையதுதான் பாழதாகும்
சொல்லொண்ணாதுயரமது தோணும்தோணும்
பாசமுள்ளஉறவில்லைபொருள் சேர்க்கையிலே
பண்பானசுகமில்லை புத்திரர்கள்இல்லை
நேசமாம்வாழ்வில்லை பசாசர்களே ஆகும்
நிலையாதபீடையெல்லாம் நிலைக்கும்பாரே. 16

335. மனைகோலுதற்கு நித்திரைக்கால 5-ம் விநாடியின் பலன்

நிலைக்குமடாஉறக்கம்ஐந்தாம் விநாடிதன்னில்
நேர்மையுள்ளமனைமுகூர்த்தம் செய்வாராகில்
பலிப்பதுகேள்வருஷம்ஒரு இருபதுக்குள்
பாழடையும்அல்லாது தீபம்இல்லை
துலைக்குமடாபிறஜனங்கள் உதவியில்லை
துன்பம்தான் தினையளவும் தொலைந்திடாது
அலைக்குமடாமூதேவி வாசம்தானும்
அப்பனேசத்துருவின் பகைஆகாதே. 17

336. மனைகோலுதற்கு மரணகால முதல்விநாடியின் பலன்

பகையானமரணத்தின் முதல்விநாடி
பாழாகும்வருஷமொரு இருபதுக்குள்
தொகையானமித்துருதான் அரசன் ஆகில்
சொல்லியதோர்தொகைபடிக்குத் துயரம்தோணும்
வகையானசத்துருதான் அரசன் ஆகில்
மக்களேஒருபோதும் வாழ்வதில்லை
தகையானவருஷம்ஒரு ஐந்துக்குள்ளே
தன்னாலேயழிந்துமனைப் பாழாம்பாரே. 18

337. மனைகோலுதற்கு மரணகால 2-ம் விநாடியின் பலன்

பாழானமரணம் இரண்டாம்விநாடி
பாலகனேமனையதுதான் பரிந்தெடுக்கில்
கேளானவருஷம்ஒரு பத்துக்குள்ளே
குலைந்துபோம்பனியதனிற் குடியேயில்லை
தேளானவிஷமதனால் மரணம்ஆகும்
தெண்டனையோபொருட்சேதம் துயரம்மெத்த
சூழானஅக்கினியால் வாதையாகும்
தொலைக்குதற்குமனுஉதவி இல்லைத்தானே. 19

338. மனைகோலுதற்கு மரணகால 3-ம் விநாடியின் பலன்

இல்லையென்றமரணம் மூன்றும்விநாடிதன்னில்
என்மகனேமனைமுகூர்த்தம் இடுவாராகில்
கொள்ளை அடாவருஷமது ஐந்துக்குள்ளே
குடிநேல்ஒருநாளும் இல்லைஇல்லை
சள்ளையடாகோவினவன் மரணமாவான்
சண்டாளநேரமது கரையேறாது
தொல்லைஅடாஅம்மனையில் மூதேவித்தான்
சூழுமென்றுதொல்புவியே சொல்லும்பாரே. 20

339. மனைகோலுதற்கு மரணகால 4-ம் விநாடியின் பலன்

சொல்லுகின்றமரணம் நான்காம்விநாடி
சொல்லியதோர்மனைதனிலே முகூர்த்தம்செய்தால்

கொல்லுமேவருஷமொரு மூன்றுக்குள்ளே
குடியேறல்ஒருநாளும் இல்லைஇல்லை
வெல்லவேயிவனருகில் கூற்றன்நின்று
வேணபடிமனம்போல முடித்துக்கொள்வான்
வல்லதாம்மணமுகூர்த்தம் செய்தபோதே
வந்திடுமேமனத்துயரம் சொல்லொண்ணாதே. 21

340. மனைகோலுதற்கு மரணகால 5-ம் விநாடியின் பலன்

ஒண்ணாதஅஞ்சாம் விநாடிதன்னில்
உத்தமனேமனைமுகூர்த்தம் செய்வாராகில்
எண்ணாதவருஷமது ஒன்றுக்குள்ளே
இறைவனும்அவன்சடலம் அழிந்துபோகும்
தன்னாலேஉயிர்ச்சேதம் ஆகும்பாரு
சண்டாளர்பக்ஷியுடப் பகையிருந்தால்
விண்ணானவருஷமது குறைந்துபோகும்
மேன்மையுள்ளசீரழிவு மெத்தஆமே. 22

341. மனைக்குப் பலாபலன் கூட்டும் வகை

சீரழிவுசெய்திடுமே ஊண தாகில்
சீராகச்சொன்னவற்றுட் கால்வரிசைகுறையும்
மாரிழிவுகொண்டிடுவன் கூறியபீடைகளில்
மக்களேகால்வரிசைதான் அதிகம்ஆகும்
கூரழிவுசெய்திடுவான் கொடுமைமெத்த
கூடிவரமாட்டாது பொருட்சேதமாகும்
பாரழிவுசெய்திடுவான் போஜனத்தில்உள்ள
பகையெல்லாம்வருமானப் பகையதாமே. 23

342. இதுவுமது

பணியாதஅரசனிடப் பகையேயானால்
பண்பாகமுன்சொன்ன பலனிற்பாதி
தொகையாகும்கூறினதோர் பீடைதானும்
தொடுத்துவிடும்மூவிரண்டி லதிகமாகும்
வகையாகக்கூடிவர மாட்டாதையா
மக்களேமுன்உள்ள பொருளும்சேதம்
நகைசெய்வார்உலகத்தில் உள்ளபேர்கள்
நல்லதென்றுபார்மகளும் சிரிப்பாள்பாரே. 24

343. இதுவுமது

சிரிப்பானஊண்அரசு சத்துருவாய்நின்றால்
சேதமோஉயிர்ச்சேதம் பொருட்சேதம்ஆகும்
குறிப்பானமனம்நொந்து புண்ணதாகும்
குடிகெடுத்தசத்துருவின் பகையாகாது

மரிப்பாகும்அந்தமனை முற்றும்பாழாம்
வருமானம்எவளவேணும் வகைசெய்யாது
தெரிப்பாரேஉலகிலுள்ள பிறஜனங்களெல்லாம்
செய்வினையோஎன்றுமனம் தவிகொள்வாரே. 25

344. மனைக்கு ஆயுசு கூட்டும் வகை

தவியாதபூமிதனில் மனைகள்தோறும்
தன்வயதுசொல்லக்கேள் தண்மையாக
சுவையாகும்ஊண் அதிலே கோலும்காலம்
தொகையாகமுந்நூறு வயசேசொல்வார்
செமையானநடைதனக்கு வயதுமைந்தா
திரமாகவொருநூறு செப்பலாகும்
குவியாதுஅரசுக்கு வயதுகேட்கில்
கூசாதேஆயிரந்தான் கூர்ந்துபாரே. 26

345. இதுவுமது

கூர்ந்துபார்உறக்கத்தில் வயதுகொஞ்சம்
கொஞ்சமெனில்அன்பதுதான் ஆகும்பாரு
நேர்ந்துபார்மரணத்தின் வயசுநுட்பம்
நிகழ்த்தயென்றால் இருபதெனும்வருஷமைந்தா
சார்ந்துபார்சத்துருஊண் அரசில்லாவிட்டால்
தண்மையுடன்சொன்னசொல்லும் பழுதேயில்லை
சேர்ந்துபார்மித்துருவின் வலுவுண்டாகில்
செம்மைஉடன் ஒன்றுபத்தாகும்பாரே. 27

மனைப்படலம் முற்றிற்று.

இருதுப்படலம்

346 பாரானபாவையர்தம் வாழ்வும்கேடும்
பண்புளதும்உள்ளதும்போம் பகர்வீர்என்ன
நேரானமானிடர்தான் நின்றுகேட்கில்
நீணிலத்தில்அவன்பிறந்த நாளைக்கேளு
ஆரானப்பிறந்திடுநாள் சொல்வார்ஆகில்
அப்பனேஅதுகொண்டு சொல்லவேணும்
ஓரானருதுவாகும் காலம்கண்டு
உண்மையாம்அதுபோகம் ஊணுஊணே. 1

347. ஊண்கால இருதுவின் பலாபலன்

ஊண்என்றபட்சியிலே ருதுதான் ஆகில்
உண்பதிலும்உடுப்பதிலும் குறைஒன்றில்லை

சேண்என்றபொருள்உண்டு செல்வம்உண்டு
செப்பொணுச்செயல்உண்டு பாலும்உண்டு
மான்என்றவாழ்வுண்டு வாஞ்சைஉண்டு
வழியானபிள்ளைகள் மற்றெல்லாம்உண்டு
கோண்என்றசிவகலைதான் அதிகம்ஆகும்
கூட்டுறவாம்மித்ருதான் அரசுநன்றே. 2

348. இதுவுமது

நன்றானமித்ருதான் அரசன்ஆகில்
நடக்குமடாஇவனால் அதிகலாபம்
குன்றாதுஒருபோது வாழ்வுதானும்
கூட்டிவைக்கும்சுகபோகம் குலமேசெல்வம்
மன்றாடும்பூங்குழலாள் ஆயுள்மட்டும்
வாழ்வுசொல்லஎவராலும் மதிக்கொண்ணாது
சென்றாடும்சத்துருவின் பகைஆகாது
சீரழிவுசெய்திடுவான் திண்ணந்தானே. 3

349. இதுவுமது

தானவனாய்இருந்தவரைப் பிரித்துவைப்பான்
தனம்பொருளைப்பவிசுகளைத் தவறுசெய்வான்
கோனவனென்றறியாமல் உலகத்தோர்கள்
குதித்திடுவார்ஒருதொழிலைக் குறித்துக்கொண்டு
மானனையமின்னார்கள் பூர்க்குங்காலம்
மதிவேணும்நேரமங்கே வாய்க்கவேண்டும்
தேனனையாள்கலியுகத்தில் கோடிக்கொன்று
திடமாகத்தானிருந்து வாழ்வார்தானே. 4

350. நடைகால இருதுவின் பலாபலன்

வாழாதநடைதனிலே ருதுவேயானால்
வாழ்வில்லைசுகமில்லை மனுக்கட்டில்லை
மாளாதசத்துருஊண் அரசாய்நின்றால்
மற்றதொருதீவினையும் சொல்லொண்ணாது
ஆளானமித்துருஊண் அரசனாகில்
அதனுடையகொடுமையும் அகற்றிவைப்பான்
கோளானவாழ்உண்டு சுகமும்உண்டு
கெடியானஊண்அரசு சத்துருஆகாதே. 5

351. இதுவுமது

சத்துருவாய்நின்றாக்கால் வருஷம்ஒன்றில்
தான்வாழ்வுபோய்விடும் தாய்தந்தைசேதம்

செற்றுவிடும்பிறவிகள்தான் பொருளும்சேதம்
தீவினையாம்அகலாத வேசியாவாள்
நைத்துவிடும்உடலில்நின்று பிணிகள்தானே
நசித்துப்போம்அக்குடிதான் நாசம்ஆக
மத்யமேஆகுமென்று முதல்நூல்தன்னில்
வசனித்தார்குருமுனியும் வசனித்தாரே. 6

352. அரசுகால இருதுவின் பலாபலன்

வசனித்தஅரசிலே ருதுதான் ஆகில்
வாக்கினால்அவன்வாழ்க்கை வழுத்தொண்ணாது
அசனித்தேபாக்கியம்என்ன பவிசும்என்ற
அனைவர்களும்கைகட்டி நிற்பதென்ன
நிசமித்தவாழ்வதுதான் ஆயுள்மட்டும்
நிலைக்கும்பார்மேன்மேலும் பெருகிமைந்தா
விஷமித்தசத்துருவே இல்லைஇல்லை
விளம்பும்ஒருபோஜனத்தின் சத்துருஆகாதே. 7

353. இதுவுமது

ஆகாதபோஜனத்தில் சத்துருதான் ஆனால்
அகற்றிவைப்பான் வாய்க்குரிசைஆனதெல்லாம்
கோகாதமித்துருதான் அரசன்ஆனல்
கொடிக்குள்மனம்புண்ணாகித் தெளிவுண்டாகும்
சோகமாய்க்காணக் காட்சியான
சொர்ப்பனத்தில்கதைபோலத் தொலைந்துபோகும்
வேகமாம்போஜனத்திற் சத்துருதான்என்ன
வேணபடிநடப்பதற்கு நடுங்கும்பாரே. 8

354. நித்திரைக்கால இருதுவின் பலாபலன்

பாரப்பாஉறக்கத்தில் ருதுதான் ஆகில்
பார்ப்பதென்னஅவள்உயிரே பங்கும்ஆகும்
சேரடாவாழ்வில்லை மணமும்இல்லை
ஜெகத்திலேபின்உதவி தானும்இல்லை
ஆரடாஉதவிசெய்ய நினைத்தாலுந்தான்
அடிமாண்டுஇவளுயிரும் அழிந்துபோகும்
கோரடாநினைத்ததெல்லாம் கைவசப்படாது
குறியாகஅவள்முகமும் இறங்கும்பாரே. 9

355. இதுவுமது

இறங்குவதுபேதாலே தூக்கத்தாலே
எண்ணமென்றபிரசண்ட வாயுவினாலே

இறங்குவதுமனம்புண்ணாய்ப் போவதாலே
எடுத்ததொருகாரியங்கள் பலியாததாலே
உறங்குவதுபட்சியுடப் பகையாகாது
உற்றதுணையாருமில்லை உலகத்துள்ளே
மயங்குவதுபிரமலபி உள்ளமட்டும்
மனுஉதவியில்லாமற் போகும்பாரே. 10

356. இதுவுமது

போகாதபொருள்போகும் வாழ்வுபோகும்
புனிதமென்றசொல்போகும் தனமும்போகும்
சாகாதஉயிர்போலத் தவிக்கும்பாரு
சண்டாளசத்துருவன் அரசனானல்
வேகாதுவெந்துவிடும் பொசிப்போயில்லை
மேதினியில்மித்துருவன் அரசன் ஆகில்
நோகாதுகனவுகண்ட காட்சியேபோல்
நோகாதுநொந்துமனம் கலங்கும்பாரே. 11

357. இதுவுமது

கலங்குவாள்ஐம்புலனும் ஒடுங்குமட்டும்
கண்டவர்கள்அவளுடனே கலந்துபேசார்
கலங்குவாள்தாமரையின் இலைத்தண்ணீர்போல்
வருந்துவதுமெத்தவுண்டு உயிர்தான்அப்பா
நலங்குவாள்உயிர்இருந்தும் செத்தபிணம்போல
நானிலத்தில்இவட்குதவி எவரும்இல்லை
விலங்குவாள்இவளை அறியாமல்ஐயோ
வீழ்ந்தோமேஎன்றுபர தவிப்பாள்தானே. 12

358. இதுவுமது

தவிப்பதுதானே தாலே வேளையாலே
சண்டாளசத்துரு பகையானதாலே
குவிப்பதுபோல் பொருளாசைமெத்தவுண்டு
கூடிவரமாட்டாது குமுறும்நெஞ்சம்
சவிப்பதுபோல்சொல்வார்கள் தரணியோர்கள்
சவிப்பார்கள்பிறர் இவனுக்குதவிசெய்வார்
அவிப்பதுபோல்உயிர் அதுதான்உள்ளமட்டும்
அலைந்தலைந்துமணம்ஜடலம் அழியும்பாரே. 13

359. மாணகால இருதுவின் பலாபலன்

அலைவானமரணத்தில் திரண்டாளாகில்
அழிந்திடுமேவருஷமொன்றில் ஜடலந்தானும்

குலையுமே அவள்பொருள்தான் மித்துருவலிதானுல்
குடிகெடுத்தசத்துரு வலிதாகுமாகில்
கலையுமேமாசமொரு மூன்றுக்குள்ளே
கடினமடாகுடிவாழ்க்கை கடைதேருது
இலைபோலேகாளுக்கு நாள்தான்தேய்ந்து
இவளுயிர்தான் இவ்வுலகில் இருக்காதுபாரே. 14

இருதுப்படலம் முற்றிற்று.

முகூர்த்தப் படலம்

360. இருக்கும்ருதுபார்க்கும் இந்தவகையேபோல
என்னென்னகாரியங்கட் காமோவென்னில்
சருக்காதுவருஷம்தான் பிறக்குங்காலம்
தனித்தவொருமாசமது பிறக்குங்காலம்
வருக்கமுதல்நினைப்பார்கள் வரவுபாரு
மக்களதுவிதைவிதைத்து எடுத்தல்பாரு
குறற்காகக்குருகும்அந்த கொள்கைபாரு
கோடிவஸ்திரம்வாங்கின தின் குணமும்பாரே. 1

361. இதுவுமது

குணமானவிலைகிரையம் குடியாபாரம்
கொண்டுவைத்துஆளுகின்ற உறவுசேர்க்கை
மணமானவரன்முறையாம் சம்பந்தங்கள்
வல்பிணிகள்தீர்வதற்காய் மருந்தூதல்
கனமானபெரியோர்களைக் காணும்நேரம்
கனிவானதற்கால துற்காலங்கள்
மணமானகுருமுனிநூல் முழுதுமாய்ந்து
வசனித்தேன்உரோமரிஷி வகையாய்த்தானே. 2

முகூர்த்தப்படலம் முற்றிற்று.

நலந்தீங்குப் படலம்

362. பாரில்ஊண் அரசுமடம் செய்யநன்று
புதியெடுத்தநிலங்கொள்ள உயிர்கள்செய்யு

ஏருடன்மாடாடுகொள்ள பணிகள்செய்ய
எதிர்த்தவரைச்செயங்கொள்ள வியாபாரம்பண்ண
தாரணியிற்சுபம்பாட அடிமைசேர்க்க
தக்கதுவாம்வாழ்வுடனே சம்பத்துண்டாம்
மாறுனநடையுறக்கம் சாவிற்செய்தால்
மனுச்சேதம்பொருட்பேதம் வகையாய்ப்பாரே. 3

363. இதுவுமது

வகையாகப்பார்த்துமனம் தெளியவேணும்
வல்லவர்கள்பெரியோரை வணங்கவேணும்
தொகையாகச்சாஸ்திரத்தில் வினயம்வைத்து
தொடுகுறிபோல்கேள்வியினல் அறியவேண்டும்
பகையாகஇருந்ததினல் வருவதென்ன
பஞ்சபட்சிசாஸ்திரத்தை உலகமீதில்
நகையாதேவெறும்பிலுக்கர் உடனேகூடி
நளினம்போல்மித்துருவின் நிலையைப்பாரே. 4

நலந்தீங்குப்படலம் முற்றிற்று.

வெற்றிதோல்விப் படலம்

364. மித்துருவின்நிலையிலே வைத்துக்கொண்டு
வினவிநீகேட்கும்வகை சொல்லச்சொல்லும்
பற்றுகின்றமனமாஞல் நடையில்வைத்து
பவிசுகள்அரசிலே இருந்துக்கொண்டு
வெற்றியாம்அட்சரத்தை ஓதுஓது
வெல்லுவது திண்ணமென்று உறுதிகொள்ளு
சத்தியமாய்முனியுரைத்த மொழிதப்பாது
தனிவழக்குவெல்லுதற்கு வகையைக்கேளே. 1

365. இதுவுமது

வகையென்னஎதிரியைத்தான் தூக்கம்சாவில்
வைத்துநீஊணரசில் இருந்துக்கொண்டு
நகையென்னகேட்பவனை நடையில்வைத்து
நவிலவேதிரியுமே நழுவிப்போவான்
தொகையென்னசத்துருவின் பகையாகாது
தொடராமல்கடப்பதற்கு அட்சரத்தைமாறு
பகையென்றசொல்போச்சு உறவுண்டாச்சு
பார்த்தவர்கள்சமர்த்தன்என ஆகும்பாரே. 2

366. இதுவுமது

ஆகுமேபட்சியினதன் தொழிலைத்தானும்
    அப்பனேவகைவிபர மாகச்சொன்னேன்
ஏகமாய்ப்பதினெண்பேர் சொல்லார்சொல்லார்
    என்மகனே நான்வெளியாச் சொல்லிவைத்தேன்
போகுமடாஎதிரியுடப் பகையும்போச்சு
    பூதலத்தில்நடக்கும்வகை தெரியலாச்சு
சேகரமாங்காலபெலன் அறிந்துகொண்டால்
    செல்வமொன்றுகோடியாய்ச் செழிப்பதாமே. 3

367. இதுவுமது

பத்தானஇந்தநூற் கிணையேஇல்லை
    பண்பானதனங்கோடி ஈந்தாலுந்தான்
முத்தானசாஸ்திரத்தை வெளிவிடாதே
    முன்னோர்கள்மனதடக்கம் செய்துவைப்பார்
வித்தானபொருள்களெல்லாம் இதிலேதோன்றும்
    வேதாந்தசுழிமுனையு மிதுவேயாகும்
கொத்தானஅடிதொடுத்து முடிவரைக்கும்
    கூறினேன்வாழ்வதற்காய்க் கூறினேனே. 4

வெற்றிதோல்விப்படலம் முற்றிற்று.

அஷ்டகன்மப் படலம்

368. ஆதிவாரம் திதி நக்ஷத்திர இராசி பலாபலன்

கூறினேன்ஞாயிறதில் அசுபதியும்சஷ்டி
    குணமாகமிதுனமும் மோகனமேயாகும்
தேறினேன்பரணியும் ஏகாதசி
    திரமானகடகமுமே ஸ்தம்பனமேயாகும்
வாறினதோர்கார்த்திகையும் துதிகைதானும்
    வளமானசிங்கமது வேஷணமுமாகும்
நூறினேனுரோகணியும் சத்தமியுங்கூட்டி
    சுகமானகன்னியது பேதனமும்பாரே. 1

369. இதுவுமது

பாரடாசீரட்டமும் துவாதசியோடு
    பண்மையுள்ளதுலாகோலும் உச்சாடனமேசெய்யும்

கூறடாஆதிரையும் திரிதிகையும்சேர்ந்தால்
குறியானவிருச்சிகமும் மாரணமேசெய்யும்
தீரடாபுனர்பூசம் அஷ்டமியுங்கூடில்
செகப்புகழும்தனுசதுவும் வசியமாகும்
சாரடாபூசத்தொடு திரையோதேசிமகரம்
சண்டாளாஆகிருஷ்ணம் ஆகுந்தானே. 2

370. இதுவுமது

தானென்றஆயிலியம் திரிதிகையுங்கும்பம்
தரணிதனில்மோகனவே செய்யும்பாரு
வானென்றமகத்துடனே நவமிசேர்ந்தால்
வகையானமீனமது ஸ்தம்பனமுமாகும்
தேனென்றபூரமுடன் அம்மாவாசைமேடம்
திகைப்புள்ள வித்வேஷணமுமாகும்
கோனென்றஉத்திரமும் பஞ்சமியுஞ்சேர்ந்தால்
கூறியதோரிடபமது பேதனமுந்தாமே. 3

371. இதுவுமது

தாமேதானஸ்தமுடன் தசமியதுகூடில்
தண்மையுள்ளமிதுனமுமே உச்சாடனமதாகும்
தாமேதான்சித்திரையும் அமாவாசை
தரித்ததொருகற்கடகம் மாரணமதாகும்
தாமேதான்சுவாதியுடன் சஷ்டியுமேசேரில்
தயவானசிங்கமது வசியமதுவாகும்
தாமேதான்இவ்வகையாய்க் கண்டபேர்க்கு
தரணிதனிலெதிரியில்லை சாற்றுவதுமாமே. 4

372. இதுவுமது

மாமோகவிசாகமுடன் பிரதமைகற்கடகம்
மகத்தானமாரணமும் ஆகும்பாரு
பாமோகஅனுடமுடன் சஷ்டியோடு
பகையானசிங்கமுமே வசியஞ்செய்யும்
காமோககேட்டையுடன் ஏகாதேசி
கன்னியுமேஆகிருஷ்ணம் கனிவாயாடும்
கோமாகமூலமுடன் துதிக்கைதானும்
குலாவியதுலாத்துடனே மோகனமுமாமே. 5

373. இதுவுமது

மோகனமுள்ளபூராடம் சத்தமியுங்கூட்டி
முரிமையுடன்விருச்சிகமும் ஸ்தம்பனமுமாகும்

பாகமுள்ளஉத்திராடம் துவாதசிதானும்
பணியுமடாவேஷணமும் பணிந்துஅதுஆகும்
தாகமுள்ளதிருவோணம் திரிதிகையுமகரம்
தப்பாமல்பேதனமே செய்யும்பாரு
தேகமுள்ளஅவிட்டமுடன் அஷ்டமியுங்கும்பம்
தெளிந்துபார்உட்சாடனமே செய்யும்பாரே. 6

374. இதுவுமது

செய்யுமேஉத்திராடத் திரயோதசி
செயமானமீனமுடன் மாரணமுமாகும்
வையுமேசதயமுடன் சதுர்த்தியோடு
வளமானமேஷமுமே செய்யும்வசியம்
குய்யுமேபூரட்டாதி நவமிகற்கடகம்
கொண்டுவருஆகிருஷ்ணம் குணமாய்ப்பாரு
நையுமேரேவதியும் சதுர்த்தசியும்மிதுனம்
நயமானமோகனனே செய்யும்பாரே. 7

375. சோமவாரம் திதிநட்சத்திரம் இராசிபலன்

பாரப்பாதிங்களுடன் அசுபதியுந்தானும்
பஞ்சமியும்கற்கடகம் ஸ்தம்பனமுமாகும்
நேரப்பாபரணியுடன் தசமிசிங்கம்
நேர்மையுள்ளவித்வேஷணம் செய்யும்பாரே
ஆரப்பாகார்த்திகையும் அமாவாசை
அப்பனேகன்னியுமே பேதனமுமாகும்
சாரப்பாரோகணியும் பிரதமையும்துலாமும்
சார்வானஉட்சாடனமே ஆகும்பாரே. 8

376. இதுவுமது

ஆகுமேமிருகசீரிடமும் சஷ்டி
அதிவிருட்சிகமாரணமுமே செய்யும்பாரு
ஏகுமேதிருவாதிரையும் ஏகாதசி
இனிதானதனுசுடனே வசியமாகும்
போகுமேபுனர்பூசம் துதிகைதானும்
புனிதமுடன்மகரமும் ஆகிருஷ்ணம்ஆகும்
சாகுமேபூசமுடன் சத்தமியும்கும்பம்
தனியாகும்மோகனமே செய்யும்பாரே. 9

377. இதுவுமது

பாரேநீஆயிலியம் துவாதசிமீனம்
பத்தியுமேஸ்தம்பனமும் பதிவாய்க்காணும்

நேரேநீமகமுடனே திரிதிகையும்மேஷம்
　　நினைவானவித்வேஷணமே செய்யும்பாரு
தேரேநீபூரமுடன் அஷ்டமியும்இடபம்
　　தெளிவானபேதனமே ஆகும்பாரு
காரேநீஉத்திரமும் திரையோதசி
　　கனிவானமிதுனமுமே உச்சாடணமும்ஆமே. 10

378. இதுவுமது

ஆமப்பாஅஸ்தமுடன் சதுர்த்தியோடும்
　　அப்பனேகற்கடகமும் மாரமும்ஆகும்
போமப்பாநவமியுடன் சோதிசிங்கம்
　　புகழ்பெரியவசியமுடன் செய்யும்பாரு
நாமப்பாசித்திரையும் சதுர்த்தசிகன்னி
　　நயமானஆகிருஷ்ணம் ஆகும்பாரு
காமப்பாவிசாகமுடன் பஞ்சமியும்துலாமும்
　　கனிவானமோகனமே செய்யும்பாரே. 11

379. இதுவுமது

செய்துபார்தசமியுடன் அனுஷம்மீனம்
　　திரண்டதொருவிருச்சிகமும் ஸ்தம்பனமுமாகும்
கொய்துபார்கேட்டையுடன் அமாவாசை
　　குணமானதனுசதுவும் வித்வேஷணமும்செய்யும்
பைதுபார்மூலமுடன் பிரதமையும்மகரம்
　　பணிவானபேதனமே செய்யும்பாரு
நைதுபார்பூராடம் சஷ்டியோடும்
　　நயமானகும்பமுமே உச்சாடனமுமாமே. 12

380. இதுவுமது

உச்சாடணம்திருவோணம் யேகாதசி
　　உறவானமீனமது மாரணமும்ஆகும்
திடசாட்டியதிருவோணம் துதிகைதானும்
　　திருந்தியதோர்மேஷமுமே வசியமுமாகும்
நச்சாட்டிஅவிட்டமுடன் சத்தமியும்இடபம்
　　நன்மைஎன்றஆகிருஷ்ணம் செய்யும்பாரு
மைசாட்டியஉத்திரட்டாதி துவாதசி
　　மறவாமல்மோகனமே செய்துபாரே. 13

381. மங்களவாரம் திதிநட்சத்திரம் இராசிபலாபலன்

செய்துபார்ரேவதி திரிதிகையுடன் நன்மே
　　திரமானஸ்கம்பனமே செய்துபாரு

செய்துபார்பூரட்டாதி அட்டமியும்சிங்கம்
தண்மையுடன் வித்வேஷணமும் ஆகும்
நைதுபார்ரேவதியும் திரபோதசி
நலமானகன்னியுமே பேதனமும்ஆகும்
வைதுபார்செவ்வாயும் அசுபதியும்சதுர்த்தி
வளமானதுலாம்அதுவும் உட்சாடணமும்ஆமே. 14

382. இதுவுமது

ஆமப்பாபரணியுடன் நவமியுங்கூட்டி
அப்பனேவிருச்சிகமும் மாரணமேசெய்யும்
நாமப்பாகார்த்திகையும் சதுர்த்தசிதானும்
நலமானவசியென்ற தொழிலுமாகும்
போமப்பாரோகணியும் பஞ்சமியும்மகரம்
பொருள்வரத்துஆகி ஆகிருஷ்ணம்செய்யும்
தாமப்பாமிருகசீரிடம் தசமியோடு
தனதானகும்பமுமே மோகனமுமாமே. 15

383. இதுவுமது

மோகனமேதிருவாதிரை அமாவாசை
முனையுள்ளமீனமுமே ஸ்தம்பனமுமாகும்
கோனமேபுனர்பூசம் பிரதமையாம்மேஷம்
குடிகெடுத்தவித்வேஷணமுமாகும்
வாகனமேபூசமுடன் சஷ்டியோடும்
வழியானஇடபமுமே பேதமும்செய்யும்
சாகமேஆயிலியம் யேகாதசி
தனிவாழும்மிதுனம் உட்சாடனமும்ஆமே. 16

384. இதுவுமது

ஆமென்றமகமுடனே துதிகைகூட்டி
அப்பனேகற்கடகம் மாரணமுமாகும்
வேமென்றபூரமடா சத்தமியுங்கூட்டி
மேன்மையுள்ளசிங்கமுமே வசியமாகும்
ஓமென்றஉத்திரமும் துவாதசிகன்னி
உலகமெல்லாம் ஆகிருஷ்ணம்செய்யும்பாரு
தாமென்றஅஸ்தமு[illegible]திதிகையுங்கூட்டி
தனிப்பிறந்ததுலாமு[illegible]ம்பாரே. 17

384. இதுவுமது

பாரப்பாசோதியுடன் அஷ்டமியும்விருச்சிகம்
பகர்கின்றஸ்தம்பனமே யாகும்பாரு
நேரப்பாசித்திரையும் திரயோதசி
நினைவானதனுசதுவு வித்வேஷணமாகும்
ஆமப்பாவிசாகமுடன் சதுர்த்திதானும்
அழகானமகாமுமே பேதனமும்பாரு
கூரப்பா அனுடமே நவமிகும்பம்
குடிகெடுத்தஉட்சாடணம் ஆகும்பாரே. 18

385. இதுவுமது

ஆகுமேகேட்டையுடன் சதுர்த்தசிமீனம்
அழிந்துவிடும்மாரணமு மாகும்பாரு
ஏகுமேமூலமுடன் பஞ்சமியும்வேஷம்
என்னசொல்வேன்வசியமடா எதிரிதோர்வை
போகுமேபூராடம் தசமியோடு
புகழ்பெரியஇடபமுமே ஆகிருஷ்ணம்ஆகும்
வேகுமேஉத்திராடம் அமாவாசை
விதனமுள்ளமிதுனமுமே மோகனமும்செய்யும். 19

386. இதுவுமது

செய்யுமடா திருவோணம் பிரதமையும்சேர்ந்தால்
சேர்க்கையுள்ளகற்கடகம் ஸ்தம்பனமுமாகும்
மையுமடாஅஷ்டமுடன் சஷ்டியோடும்
மனதுறுதியானசிங்கம் வித்வேஷணமும்செய்யும்
கொய்யுமடாஉத்திரட்டாதி ஏகாதசி
குலாவியதோர்கன்னியுடன் பேதனமுமாகும்
நொய்யுமடாசதையமுடன் துதிகைதானும்
ஸ்ரேஷமுள்ளதுலாமதுவும் உட்சாடணமேபாரே. 20

387. புதவாரம் திதிநட்சத்திர இராசி பலாபலன்

பாரப்பாபூரட்டாதி சத்தமியும்சேர்ந்தால்
பரிவானவிருச்சிகமும் மாரணமும்ஆகும்
ஆரப்பாரேவதியும் துவாதசிதனுசு
அப்பனேவசியமடா அன்பாய்ச்சொன்னேன்
ஏரப்பாபுதனுடனே அசுபதியும்திரிதிகையும்
என்மகனேமகரம் ஆகிருஷ்ணமுமாகும்

சாரப்பாபரணியுடன் அஷ்டமியும்நலம்
சார்வானகும்பமுமே மோகனமுமாமே. 21

388. இதுவுமது

மோகனமுள்ளகார்த்திகையும் திரையோதசி
முனையானமீனமுடன் ஸ்தம்பனமுமாகும்
தாகமுள்ளரோகணியும் சதுர்த்திமேடம்
தப்பாமல்வித் வேஷணமும்செய்யும்பாரு
ஆகமுள்ளமிருகசீரிடம் நவமியோடு
அன்பானஇடபமுமே பேதனமுமாகும்
வாகமுள்ளதிருவாதிரையும் சதுர்த்தசிமிதுனம்
வழியானஉட்சாடனமும் ஆகும்பாரே. 22

389. இதுவுமது

ஆகுமேபுனர்பூசம் பஞ்சமியுஞ்சேர்ந்தால்
அப்பனேகற்கடகம் மாரணமுமாகும்
ஏகுமேபூசமுடன் தசமியோடு
என்னசொல்வேன் சிங்கமடாவசியம்ஆகும்
சாகுமேஆயிலியம் அமாவாசி
தண்மையுள்ளகன்னியுமே ஆகிருஷ்ணம்ஆகும்
போகுமேமகமுடனே பிரதமையும்நல்ல
புகழ்பெரியதுலாத்துக்கு மோகனமும்பாரே. 23

390. இதுவுமது

பாரேதான்பூரமுடன் சஷ்டிகூட்டி
பரிவானவிருச்சிகமுடன் ஸ்தம்பனமுமாகும்
சாரேநீஉத்திரமும் ஏகாதசி
கலந்ததொருதனுசதுவும் வித்வேஷணமுமாகும்
தேரேநீஅஸ்தமுடன் துதிகைதானும்
திறமானமகரமுமே பேதனமும்பாரு
கோரேநீசோதியென்ற சத்தமியுங்கூட்டி
கும்பமுடன்உட்சாடணம் ஆகும்பாரே. 24

391. இதுவுமது

ஆகுமப்பாசித்திரை துவாதசிமீனம்
அதுநடத்துமரணந்தான் ஆகும்பாரு
போகாதப்பாவிசாகமுடன் திரிதிகைதானும்
புகழ்பெரியமேடமுமே வசியமாகும்

வாகுமப்பாஅனுடமுடன் அஷ்டமியுங்கூடில்
வலியானஇடபமுமே ஆகிருஷ்ணம்ஆகும்
ஏகுமப்பாகேட்டையுமே திரயோதசி
என்னசொல்வேன்மிதுனமா மோகனமாமே. 25

392. இதுவுமது

ஆமென்றமூலமுடன் சதுர்த்தியொடு
அப்பனேகற்கடகம் ன் தம்பனமுமாகும்
வேமென்றபூராடம் நவமிஅப்பா
மேதினியில்சிங்கமுமே வித்வேஷமுமாகும்
காமென்றஉத்திராடம் சதுர்த்தசிகன்னி
கனிவானபேதனமே செய்யும்பாரு
நாமென்றதிருவோணம் பஞ்சமியுங்கூடில்
நலமானதுலாம்அதுவும் உட்சாடணமும்ஆமே. 26

393. இதுவுமது

ஆமென்றஅவிட்டமுடன் தசமிகூடில்
அழகானவிருச்சிகம் அங்கேமாரணமுமாகும்
போமென்றஉத்திரட்டாதி அமாவாசிதனுசு
புகழ்பெரியவசியமப்பா என்னசொல்வேன்
தேமென்றசதயமும் பிரதமையுமகரம்
செம்மையுள்ளஆகிருஷ்ணம் செய்துபாரு
நாமென்றபூரட்டாதி சஷ்டிகூட்டி
நலமானகும்பமே மோகனமுமாமே. 27

394. குருவாரம் திதிநட்சத்திரம் இராசிபலாபலன்

மோகனந்தான்ரேவதியும் ஏகாதசி
உண்மையுள்ளமீனம்அப்பா ஸ்தம்பனமுமாகும்
வாகனந்தான்யாழன் அங்கே அசுபதியுந்துதிகை
மக்களேமேடம்அப்பா வித்வேஷணமுமாகும்
கோகனமேபரணியுடன் சத்தமியும்சேர்ந்தால்
குலாவியதோர்இடபமுமே பேதனமுமாகும்
சோகந்தான்கார்த்திகையும் துவாதசிமிதுனம்
சொன்னேனடாஉற்சாடணமே செய்யும்பாரே. 28

395. இதுவுமது

செய்யுமேரோகணியும் திரிதிகையுங்கூடில்
திடமானகற்கடகம் மாரணமுமாகும்

கையுமேமிருகசீரிடம் அட்டமியுஞ்சேர்ந்தால்
நளினமுள்ளசிங்கம் அங்கேவசியமாகும்
கொய்யுமேதிருவாதிரையுந் திரையோதசி
குணமானகன்னியுடன் ஆகிருஷ்ணம்பாரு
வையுமேபுனர்பூசம் சதுர்த்திதுலாமென்று
வணங்குமடாமோசனந்தான் மார்க்கம்பாரே. 29

396. இதுவுமது

மார்க்கமுள்ளபூசமுடன் நவமிசோலை
மக்களேஸ்தம்பனமும் மகிழ்ந்துகாணும்
ஏர்க்கையுள்ளஆயிலியம் சதுர்த்திதனுசு
என்மகனேவித்வேஷண மாகும்பாரு
சேர்க்கையுள்ளமகமுடனே பஞ்சமியுஞ்சேர்ந்தால்
திடமானமகரமுமே பேதனமுமேசெய்யும்
ஆக்கையுள்ளபூரமுடன் தசமியோடு
அப்பனேகும்பமும் உட்சாடணமும்ஆமே. 30

397. இதுவுமது

ஆமப்பாஉத்திரமும அமாவாசை
அப்பனேமீனமுமே மாரணமும்ஆகும்
நாமப்பாஅஸ்தமுடன் பிரதமையும்சேர்ந்தால்
நலமானமேடமுமே வசியம்ஆகும்
காமப்பாசோதியென்ற சஷ்டிகாலை
களைக்குமேஆகிருஷ்ணங் கண்டுபாரு
போமப்பாசித்திரையும் யேகாதசி
புனிதமுடன்மிதுனமுமே மோகனமாம்பாரே. 31

398. இதுவுமது

பாரென்றவிசாகமுடன் துதிகைதானும்
பார்மகனேகற்கடகம் தம்பனமும்ஆகும்
சீரென்றஅனுடமடா சத்தமியுங்கூட்டி
சிறப்பானசிங்கமுமே வித்வேஷணங்கள்செய்யும்
காரென்றகேட்டையடா துவாதசிகன்னி
கனமானபேதனமே யாகும்பாரு
வாரென்றமூலமுடன் திருதிகைதுலாந்தான்
மக்களேஉட்சாடணமாய் மகிழ்ந்துபாரே. 32

399. இதுவுமது

மகிழ்ந்துபார்பூராடம் அஷ்டமியுங்தேளும்
மனதுபோல்மாரணமும் ஆகும்பாரு
நெகிழ்ந்துபார்உத்திராடம் திரையோதசி
நேரானதனுசதுவும் வசியம்அது ஆகும்
இருந்துபார்திருவோணம் சதுர்த்திசேர்ந்தால்
என்மகனேமகரமுமே ஆகிருஷ்ணம்ஆகும்
மகிழ்ந்துபார்அவிட்டமுடன் நவமிகும்பம்
தனதானமோகனமாம் தானேபாரே. 33

400. இதுவுமது

தானென்றஉத்திரட்டாதி சதுர்த்தசிமீனம்
தப்பாமல்ஸ்தம்பனமே செய்யும்பாரு
மானென்றசதயமுடன் பஞ்சமியும்மேடம்
மனம்போலவித்வே ஷணமேசெய்யும்
நாளென்றபூரட்டாதி தசமிகாளே
நலமானபேதனமே ஆகும்பாரு
தேனென்றரேவதியும் அமாவாசை
சிறந்ததொருமிதுனமுமே உட்சாடணமுமாமே. 34

401. சுக்கிரவாரம் திதி நட்சத்திரம் இராசி பலாபலன்

மானென்றவெள்ளியுடன் அசுபதியுங்கூடில்
மக்களேபிரதமையும் நண்டுமோரணமாம்
தேனென்றபரணியுடன் சஷ்டிசேர்ந்தால்
திடமானசிங்கம்அது வசியம்ஆகும்
வேனென்றகார்த்திகையும் ஏகாதசி
விதமானகன்னியுமே ஆகிருஷ்ணம்ஆகும்
கோனென்றரேவதியும் துதிகைதானும்
கொண்டுதுலாம் மோகனமேசெய்யும்பாரே. 35

402. இதுவுமது

செய்யுமடாசீரிடமும் சத்தமியுங்கூட்டி
ஜெயமானதேள்அதுவும் தம்பனமும்ஆகும்
ஐயுமடா திருவாதிரையும் துவாதசிதனுசு
அப்பனேவித்வேஷணம் செய்யும்பாரு
நையுமடாபுனர்பூசம் திரிதிகையுங்கூட்டி
நயமானமகரமுமே பேதனமேசெய்யும்

கொய்யுமடாபூசமுடன் அட்டமியுங்கும்பம்
குலவியஉட்சாடணமும் குறித்துச்செய்யே. 36

403. இதுவுமது

குறித்துநீசெய்துபார் ஆயிலியம்ஏகாதசி
குணமானமீனமுமே மாரணமும்ஆகும்
மறித்துப்பார்மகமுடனே சதுர்த்திமேடம்
மன்னர்எல்லாம்மனமகிழ்ந்து கேளும்வசியம்
செறித்துப்பார்பூரமுமே நவமிகாளை
க்ஷணத்திலேஆகிருஷ்ணம் செய்வார்பாரு
விறித்துப்பார்உத்திரமும் சதுர்த்தசியோடு
மிதுனமெல்லாம்மோகனமே ஆகும்பாரே. 37

404. இதுவுமது

ஆகுமேஅஸ்தமுடன் பஞ்சமிகற்கடகம்
அன்பானதம்பனமே அழகாய்ச்செய்யும்
ஏகுமேசோதியுடன் தசமிசிங்கம்
என்னசொல்வேன் வித்வேஷணந்தான்எதிரிஇல்லை
தேருமேசித்திரையும் அமாவாசியோடு
ஜெயமானகன்னியுமே பேதனமும்ஆகும்
போகுமேவிசாகமுடன் பிரதமையும்துலாமும்
பெரிதானஉட்சாடணமாய் பேசும்பாரே. 38

405. இதுவுமது

பேசுமடாஅனுடமுடன் சஷ்டிகேளும்
பேதகமாம்மாரணந்தான் செய்யும்பாரு
வீசுமடாகேட்டையுந்தான் யேகாதசி
விதமானதனுசதுவும் வசியமாகும்
ஏசுமடாமூலமுடன் துதிகைதானும்
என்னசொல்வேன்மகரமுமே ஆகிருஷ்ணமேசெய்யும்
வீசுமடாபூராடம் சத்தமியுங்கும்பம்
ஓடிவரும்மோகனந்தான் உனக்குத்தானே. 39

406. இதுவுமது

தானேதான்உத்திராடம் துவாதசிமீனம்
தன்மையுள்ளதம்பனமே சரிநின்றுடும்
கோனேதான்திருவோணந் திரிகையுங்கூடில்
குனமானமேடம்அங்கே வித்வேஷணமுஞ்செய்யும்

தேனே தான்சதயமுடன் திரயோதசி
செனித்ததொருமிதுனமங்கே உச்சாடமுமங்கே
மானேகேள்ரோமனுட வாக்கியந்தன்னை
மகிழ்ந்துபார்மனங்கொண்டு அஷ்டகன்மமாமே. 40

407. சனிவாரம் திதி நட்சத்திர இராசி பலாபலன்

மானென்றபூரட்டாதி சதுர்த்திகற்கடகம்
மன்னவனே மாரணந்தான் மனம்போல்செய்யும்
தேனென்றஉத்திரட்டாதி நவமிசிங்கம்
தெளிவானவசியமடா செம்மைஆகும்
வானென்றரேவதியும் சதுர்த்தசிகன்னி
வகையானஆகிருஷ்ணம் வலியுண்டாகும்
ஏனென்றசனியுடனே அசுபதிபஞ்சமியும்
என்மகனே துலாமிதுவும் மோகனமுமாமே. 41

408. இதுவுமது

ஆமப்பாபரணியுடன் தசமிகூடில்
அப்பனேவிருச்சிகமும் ஸ்தம்பனமுமாகும்
நாமப்பாகார்த்திகையும் அமாவாசை
நலமானதனுசுடனே வித்வேஷணமுமாகும்
ஓமப்பாரோகணியும் பிரதமையும்மகரம்
உத்தமனேபேதனமாய் முடியும்பாரு
காமப்பாமிருகசீரிடம் சஷ்டிகும்பம்
கனிவானஉச்சாடனமாய்க் காணும்பாரே. 42

409. இதுவுமது

காணுமேதிருவாதிரை யேகாதசி
கனிவானமீனமுமே மாரணமுமாகும்
வேணுமேபுனர்பூசம் துதிகைதானும்
மேலானமேடமுடன் வசியமாகும்
தோணுமேபூசமுடன் சத்தமியும்இடபம்
தொடுத்திடும்பார்ஆகிருஷ்ணம் சொல்லப்போகா
நாணுதேஆயிலியம் துவாதசிமிதுனம்
நலமானமோகனமே நயந்துகாணே. 43

410. இதுவுமது

நயந்துபார்மகமுடனே திரிதிகையும்சேர்ந்தால்
நலமானகற்கடகம் ஸ்தம்பனமுமாகும்

பயந்துபார்பூரணமே அஷ்டமியுஞ்சிங்கம்
பரிவானவேஷணந்தான் பதிவாய்க்காணும்
கயந்துபார்உத்திரமும் திரயோதசி
கன்னியுடன்பேதனமுங் கலந்துகாணும்
சயந்துபாரஸ்தமுடன் சதுர்த்திதுலாமும்
சாற்றினேம்உச்சாடனமாம் சாய்ந்துபாரே. 44

411. இதுவுமது

சாகுமடாநவமியுடன் சோதி * சோலை
சண்டாளமரணமாம் சார்ந்துபாரு
ஏருமடாசித்திரையும் சதுர்த்தசிதனுசு
என்னசொல்வேன்வசியமடா இசைந்துகாணும்
ஆறுமடாவிசாகமுடன் பஞ்சமியுந்தனுசு
அப்பனே ஆகிருஷ்ணம் அழகாய்ச்செய்யுந்
தேருமடாஅனுஷமது தசமிகும்பம்
செய்யுமப்பாமோகனமும் திறமாய்ப்பாரே. 45

412. இதுவுமது

திறமானகேட்டையுடன் அமாவாசை
சிறந்ததொருமீனமங்கே ஸ்தம்பனமுமாகும்
பரமானமூலமது பிரதமையும்மேடம்
பழையானவித்வேஷணங்கள் பதிவாய்க்காணும்
சரமானபூராடம் சஷ்டிகாளை
தப்பாமல்பேதனமே தனிவாய்க்காணும்
உரமானஉத்திராடம் ஏகாதேசி
உத்தமனேமிதுனமது உச்சாடனமுங்காணே. 56

413. இதுவுமது

காணப்பாதிருவோணம் துதிகைதானும்
கனிவானகற்கடகம் மாரணமுமாகும்
பூணப்பாஅவிட்டமுடன் சத்தமியுஞ்சேர்ந்தால்
புண்ணியனேசிங்கமது வசியமாகும்
தோணப்பாஉத்திரட்டாதி துவாதசிகன்னி
சொல்லொண்ணுஆகிருஷ்ணம் துடிசாய்ச்செய்யும்
வேணப்பாசதயமுடன் திரிதிகையுந்துலாமும்
வேணபடிமோகனமாம் விரும்பிச்செய்யே. 47

---

* சோலை என்பது - விருச்சிகம்.

414. இதுவுமது

விரும்பியேபூரட்டாதி அஷ்டமியுந்தேளும்
மேலானஸ்தம்பனமாம் வேணபடிஆகும்
கரும்பியேரேவதியுந் திரயோதசி
கனிவானதனுசதுவும் வித்வேஷணமுமாகும்
அரும்பியேயிந்தநாள் ஆகவேணும்
அப்பனேநட்சத்திரம் திதிராசிவேளைக்கண்டு
திரும்பியேஎவ்வகையும் பார்க்கும்போது
தொடுத்திடுவாய்இதிலொன்றுங் குறையாமற்றனே. 48

415. இதுவுமது

குறையாமல்செய்ததினல் பலிதமாகும்
குணங்குறிகள்பார்ப்பதற்கு இதுவேகாணும்
பறையாமல்போனதினல் வலிக்குமுன்னே
பஞ்சாங்கபலதிரட்டை அநுசரித்துக்கொள்ளு
மறையாமல்சொல்லிவைத்தேன் சாஸ்திரத்திலுள்ள
வகையெல்லாம்மாறுபத்து பக்ஷியாய்செய்தால்
நிறையாமல்அவ்வளவும் தப்போயில்லை
நிஜமடாபஞ்சபக்ஷி வித்தைதானே. 49

416. இதுவுமது

பட்சிவித்தைஒருபோதும் பழுதேயில்லை
பாராமல்போனதினல் பழுதேயாகும்
கொச்சிவித்தைபலிப்பதுதான் எதுனலே
குறிகுணங்கள்நேரமங்கே குறைவிதாலே
வச்சிவித்தைகருக்குவம் கண்டபேர்க்கு
வணங்குமடாபட்சிவித்தை மயக்கமில்லை
நச்சிவித்தையிதுக்கு நிகர்ஒன்றுமில்லை
நாட்டிலேபித்தொழிலைச் சொல்லொண்ணதே. 50

அஷ்டகன்மப்படலம் முற்றிற்று.

பீடை நிவாரணப் படலம்

417. ஊண்பட்சியில் பீடை வருங்கால நிவாரணம்

பாரடாயுலகிலுள்ள மாந்தர்க்கையா
படருகிறபீடையது தீரவிட்டால்

சாரடாமாரயிலே பீடைபற்றி
தள்ளுவதுபோல்சுருக்கும் தவித்துநோகும்
தேரடாபஞ்சபட்சி தொழிலைக்கண்டு
ஜெகமதிலேகாலநிலை அளவுங்கண்டு
ஏரடாதொடுத்ததொரு கண்மபீடை
என்மகனேதுடராமல் தீர்க்கலூனே. 1

418. இதுவுமது

ஊவென்றபட்சியிலே வரும்பீடைதீர்க்க
உத்தமனேகணபதியை வைத்துக்கொண்டு
வேனென்றவெள்ளைபுஷ்பம் சாத்திக்கொண்டு
விநாயகர்முன்உபசாரஞ் செய்துபோற்றி
தேனென்றமந்திரந்தான் சொல்லக்கேளு
திடமான அக்ஷரந்தான் ஓம்ஸ்ரீயும்அங்உங்என்று
தானென்றஎழுத்துடனே ஐயுங்கிலியுங்கணபதிசர்வசாபம்
நசிமசிஎன்றுசாற்றுவாய் ஆயிரத்தெட்டுஉருவாமே. 2

419. இதுவுமது

உருவானஅதின்பின்பு கும்பம்வைத்து
ஒருபடிநெல்தான்பரப்பி அறுகோணமிட்டு
திருவானகாரண பஞ்சாக்ஷரத்தைவைத்து
ஜெயமாகவேணுமென்று காரியபஞ்சாக்ஷரமும்வைத்து
மருவானசக்கரத்தில் சூலமிட்டு
மைந்தனேஅதில்நடுவில்ஓங் அங்சிவசிவாயென்றுபோடு
தருவானகும்பத்தில் சலத்தைவைத்து
தண்மையுள்ளமாங்குழையை யதின்மேல்வையே. 3

420. இதுவுமது

வைத்தபின்புஅதின்மேலே தேங்காய்வைத்து
வாகாகநூல்சாற்றி ஆடைசாற்றி
கைத்ததொருகும்பத்தின் முன்னேஅப்பா
கலந்துவைப்பாய்வஸ்துடனே சுத்திதானும்
நெய்த்ததொருவர்க்கவகை உபசாரஞ்செய்து
நேமகமாய்இருந்தொரு ஓம்ஐயுங்கிலியும்சவ்வும்என்று
வைத்தபின்புஇன்னமடா அங்உங்என்று
சாற்றுவாய்பீடையெல்லாம் நசிநசிஎன்றோதே. 4

421. இதுவுமது

ஓதடா ஆயிரத்தெட் டுருவுமானால்
உத்தமனே ஓமகுண்டம் ரெண்டும்போடு
வாதடா சமித்துவகை சொல்லக்கேளு
வன்னிமுன்னை அரசுருவி தெர்ப்பைநெற்பொரியும்
ஏதடா ஆவின்நெய்பால் ஆகுதிகள்செய்து
என்மகனே குண்டத்துக் குபசாரம்பண்ணி
கோதடா அக்ஷரத்தைசொல்லக்கேளுகுணமாகவேணுமென்று
ஓம்ஸ்ரீயும்அங்உங்சர்வபீடை நசிநசிஎன்றேதே. 5

422. இதுவுமது

ஓதியபின் உருஅங்கே ஐயாயிரமானால்
உத்தமனேபொங்கல்பெலி நைவேத்தியஞ்செய்து
கோதியொடுசாம்பலெல்லாங் கும்பத்திற்போட்டு
குடத்துநீர் அவன்சிரசில் விடும்போதப்போ
ஆதிசிவனைநினைத்து ஓம்சிவசிவாஎன்று
அப்பனே அபிஷேகம் செய்துபாரு
நீதியான் நாளதுதான் பதினொன்றானால்
நிலைக்குமோபீடையெல்லாம் விலகும்பாரே. 6

423. இதுவுமது

விலகுமேமதிஎன்ற தகடுசெய்து
மேலான உச்சாடன அக்ஷரத்தைவைத்து
சகலருமேதேவியென்ற வாலைபூசை
கைப்பாகந்தப்பாமல் வைத்துக்கொண்டு
நீங்குமேஅதின்முன்பு தகடுவைத்து
நீஓதுஉச்சாடனம் ஆயிரத்தெட்டானால்
விலகுமேபீடைஎன்ற தோஷமெல்லாம்போச்சு
நில்லாதுகன்னிக்கு உபசாரஞ்செய்யே. 7

424. நடைப்பக்ஷியில் பீடைவந்தால் விலக்க

செய்துபார் நடைதனிலே பீடைவந்தால்
தீர்ப்பதற்குவிநாயகனை வைத்துக்கொண்டு
கொய்துபார் கும்பம்வைத்து கும்பம்ரெண்டு
கூறுவேன் சமித்துவகை சொல்லக்கேளு
நைதுபார் அரசுவன்னி உருவிதெர்ப்பை
நல்லவிழாமாசுப்பி கருங்காலித்தூளும்

நெய்துபார்நெற்பொரியும் கடலைமொச்சை
நேராகக்கலந்துகொண்டு கும்பம்போடே. 8

425. இதுவுமது

போடவேஆவிநெய்யும் இலுப்பைநெய்யும்
புண்ணியனே இரண்டுமொன்றாய் கலந்துகொண்டு
நாடவேயெக்கியத்தில் ஆகுதிகள்செய்து
நல்லதொருஅக்ஷரத்தை சொல்லக்கேளு
தேடவேஓம்ரீயும்அவ்வும்கிலியும் அங்உங்பீடைநசிநசிஎன்று
செலுத்துவாய்உருவையங்கே பதினாயிரமேதானும்
வாடவேவேண்டாங்காண் பொங்கல்பெலியுடனே
மைந்தனேசோடச உபசாரஞ்செய்யே. 9

426. இதுவுமது

செய்துகொண்டுகும்பத்து சாம்பல்எல்லாம்
திரணமதுபோகாமல் கும்பத்தில்போடு
ஐதுகொண்டுஆதியென்ற சிவனைபோற்றி
அப்பனேசிவசிவா என்றுபூசி
கொய்துகொண்டுவாலையுட தியானஞ்செய்தால்
குமரியவள்முன்புவந்து நிற்பாள்அப்போ
வைத்துகொண்டுபோகுமடா நடையின்பீடை
மக்களேநான்பதினென்று செய்துபாரே. 10

427. அரசுபக்ஷியில் பீடைவந்தால் விலக்க

செய்வாரேஅரசுதனில் பீடைவந்தால்
திடமானகணபதியை வைத்துப்போற்றி
நெய்வாயேகும்பம்குடம் முன்னேவைத்து
நேமகமாய்வாலையுட பூசைசெய்து
கொய்வாயேகும்பமதுரெண்டுபோடு
கொளுத்துகிறசமித்தினுட விபரங்கேளு
மைவாயேஅரசு சந்தனமும்ஆகும்
மக்களேநெய்கொண்டு ஓமஞ்செய்யே. 11

428. இதுவுமது

செப்பவேநேமகமாய் உருவங்கேதான்
திறமாகஐயாயிரமும் செய்துபாரு
தொய்யாதேபெலியுடனே் தூபதீபங்காட்டி
தோணவேசாம்பலெல்லாம் குடத்திற்போடு

கையாலேகுடமெடுக்கும் போதெல்லாந்தான்
கருணையுடன்சிவனை நின்கருத்தில்வைக்க
மெய்பாகவினைதெரித்துப் போகும்பாரு
மேலானசேடனத்தால் தகடுபோடே. 12

429. இதுவுமது

தகடதிலேவசியெழுத்தை வரைந்துகொண்டு
தப்பாமல்நாளேழு பூசைசெய்து
விகடதிலேஇல்லாமல் போகும்போது
மேலானபீடையெல்லாம் விலகிப்போகும்
சகடதிலேகிருபைமெத்த சிவன் தான்உண்டு
தரணிதனில்கண்டவர்கள் வணங்கிப்பூசி
அகடதிலேஉலகுதனில் வாழ்வார்பாரு
அப்பால்பீடையது விலகும்பாரே. 13

430. உறக்கப்பக்ஷியில் பீடைவந்தால் விலக்க

பாரடாஉறக்கத்தில் வரும்பீடைதன்னை
பதியைவிட்டுவிலகுதற்கு பண்புகேளு
நேரடாகணபதியை வைத்துக்கொண்டு
நேமகமாய்வாலையுட கும்பம்வைத்து
ஓதடாஓமகுண்டம் நாலுபோடு
உத்தமனேசமித்துவகை சொல்லக்கேளு
கோரடாஆலரசு அத்திஇத்தி
குலாவியதோர்வன்னிமுன்னை உருவியெள்ளே. 14

431. இதுவுமது

எள்ளுடனேநவதானியம் நெற்பொறியும்சேர்த்து
என்மகனே ஆவிநெய்யும் இலுப்பைநெய்யும்
தெள்ளுடனேதேங்காய்நெய் கலந்துகொண்டு
தெர்ப்பையினுல்சொரிந்துவிடு உருவேறுமட்டும்
அள்ளுடனே ஓம்ரீயும் கிலியும்ஐயும்சவ்வும்என்று
அப்பனே ஹீயும் நசிநசிஎன்று
தள்ளடாதற்புத்தி ஒருநினைவாய்க்கொண்டு
சரியாகபதினையிரம் உருவைப்போடே. 15

433. இதுவுமது

போடடாகும்பமொன்றில் தம்பனமேபோடு
புகழானபேதனமும் போட்டுதீரு

கேளடாதுவேஷணமும் ஆகும்பாரு
கொடியானமோகனமும் கெட்டியாய்ச்செய்து
நாளடாபெலியுடனே தூபதீபம்காட்டி
நலமாகவேணுமென்று சாம்பல்வாரி
கேளடாகுடந்தனிலே கலந்துகொண்டு
குமரனடிசிவனைநினைந் தபிஷேகம்செய்யே. 16

433. இதுவுமது

செய்தபின்புரவிமதியும் சேர்த்துக்கொண்டு
திரமானதகடித்து உச்சாடனமேசெய்ய
நொய்துகொண்டபிணியாளன் மேலேபோடு
ஓடிவிடும்பீடைஎன்ற தோஷம்தானும்
தொய்துகொண்டகன்னிக்கு உபசாரஞ்செய்து
சொற்பெரியசிவனுக்கு அபிஷேகம்பண்ணி
வயதுகொண்டுபோகுமடா பீடைஎன்றதோஷம்
மக்களேமண்டலந்தான் அரையுஞ்செய்யே. 17

434. மரணபக்ஷியில் பீடைவந்தால் விலக்க

செய்யப்பாமரணத்தில் பீடைவருமாகில்
திரும்புவதுவெகுவருத்தம் சிவன்செயலும்வேணும்
தொய்யப்பாகணபதியை வைத்துக்கொண்டு
தொடுத்திடுவாய்வாலையுட கும்பம்வைத்து
நொய்யப்பாஓமகுண்டம் எட்டுபோடு
நோக்குகிறசமித்துவகை சொல்லக்கேளு
தையப்பாஅரசுவன்னி நாயுருவிஅத்தி
தனதானகருங்காலி ஆலின்கொம்பே. 18

435. இதுவுமது

கொம்புடனேமாசுப்பி அறுகுவோடு
கோர்வையாய்நவதானியம் நெற்பொரியுங்கூட்டி
அன்புடனேமேதநெய்யும் செம்மறியின்நெய்யும்
அப்பனேஇலுப்பைநெய்யும் தேங்காநெய்யும்
தெம்புடனேபுங்கெண்ணை புன்னைஎண்ணை
தெளிவானவேப்பெண்ணை பண்டுநெய்யும்
விம்புடனேகேசரியின் நெய்யுங்கூட்டி
விரவியேஎக்கியத்தில் விடுவாய்பாரே. 19

436. இதுவுமது

பாரேநீகும்பம்எட்டில் அஷ்டகன்மம்எட்டும்
பாங்காகசெய்து உருபதினுபிரமேயானுல்
வேறேநீநினையாதே பொங்கல்பெலிதூபம்
வேணபடிசெய்துகொண்டு சாம்பல்குடத்திற்போடு
நேரேநீநின்றுகொண்டு சிவனைப்போற்றி
நீர்விடுவாய்அவன்சிரசில் அபிஷேகம்செய்தால்
தூரேநீஇவ்வகைதான் மண்டலந்தான்ஒன்று
தொடுத்துவிடுபீடையது விலகும்பாரே. 20

437. இதுவுமது

விலகுமேஎவ்விதத்தால் வந்தபீடை
மேலானபிரபுவுக்குவந்த தோஷம்எல்லாம்
அசக்குமேசெய்துகொண்டால் பீடைஇல்லை
அப்பனே தள்ளிவிடும் சுகமாகவாழ்வார்
இலகுமேஎன்னசெய்யப் போகுதென்று
எளிதாகநினைந்துகொண்டால் பீடைகொல்லும்
அலகுமேபிரமலபி உள்ளமட்டும்
அலைச்சல்மிகும்பீடைகுணம் தோணும்பாரே. 21

பீடை நிவாரணப் படலம் முற்றிற்று.

அக்ஷரமாரல் படலம்

438.

தோணுமேஉலகிலுள்ள அக்ஷரத்துக்கெல்லாம்
தோணுதபஞ்சபட்சி சூட்சந்தானும்
காணுமேகருக்குருவும் காணுதுபாரு
கடினமடாஆசானும் காட்டவேணும்
பேணுமேமனதுருகி யாகவேணும்
பிசகினல்பக்ஷிவித்தை பிசகிப்போகும்
ஆணுமோஅக்ஷரங்கள் அறியவேணும்
அறிவதுதான்வெகுநினைவாய் செலுத்துவாயே. 1

439. அக்ஷரமாரலறிய

செலுத்துவாய்பூருவத்தின் பகலுக்கப்பா
திடமான ஆகிருஷ்ணம் வசியம்ரெண்டும்
வழுத்துவாய்பூருவத்தின் இரவுதன்னில்
வளமானமோகனமும் தம்பனமும்ஆகும்
பழுத்துவாய்அமரத்தின் பகலுக்கப்பா
பகையானஉச்சாடனமும் வித்வேஷணமும்ஆகும்
கொழுத்துவாய்அமரத்தின் இரவுதன்னில்
குடிகெடுத்தமாரணமும் பேதனமும்ஆமே. 2

440. இதுவுமது

ஆகுமேபூருவத்தின் பகலுக்கப்பா
அநுசரிநீகடைநிலைபை பிடித்துமாறு
ஏகுமேபூருவத்தின் இரவுதன்னில்
பொல்லாதநாலெழுத்தின் மாரலைநீஓது
ஏகுமேஅமரத்தின் பகலுக்கையா
என்னசொல்வேன் ரெண்டெழுத்துமாரலிலேநில்லு
வேகுமேஅமரத்தின் இரவுதன்னில்
வெட்டவெளியாக்கிவிடும் நடுத்தலையைமாரே. 3

441. திக்குகளின் அஷ்டகன்மம் அறிக

மாரிவிடுபேதமும் மாரணமும்தெற்கு
வகையானவித்வேஷணமும் உச்சாடனமுமேற்கு
கோரியிடும்தம்பனமும் மோகனமும்வடக்கு
குலவுகின்றவசியமும் ஆகிருஷ்ணமும்கிழக்கு
வாரிவிடும்தொழிலை அங்கே தனித்திருந்துபாரு
வணங்குவார்உலகத்தோர் மனதறிந்துசொல்லு
நீரிவிடும்பாவத்துக் காளாகாதே
நிமிஷத்தில்எதிரிவுடல் நீரிப்போமே. 4

442. இதுவுமது

போகுமேஅஷ்டகன்மம் இதற்கீடல்ல
பொல்லாதகருத்தொழிலும் இதற்கீடல்ல
ஆகுமேசல்லியங்கள் ஒட்டியங்கள்
அஞ்சாதுதொட்டியத்தில் அவர்க்கெல்லாந்தான்
சாகுமேமந்திரியம் கெணங்கள்பூதந்தான்
சண்டாளப்பிசாசுமுதல் ஐயன் துர்க்கை

வேகுமேபட்சிவித்தை கண்டபோதே
    மேலானவித்தையென்று மெச்சினரே. 5

443. இதுவுமது

மெச்சினர்பதினெண்பேர் சித்தரெல்லாம்
    வெகுகோடிரிஷிகளெல்லாம் மெச்சினர்கள்
கொச்சினர்உலகத்தில் அனந்தங்கோடி
    கூர்மையுள்ளமனமுள்ளோர் காணவேணும்
பட்சிஎன்றதொழிலைத்தான் பார்த்தபேர்க்கு
    பகையில்லைஒருநாளும் பகைத்தோர்இல்லை
வக்ஷிஎன்றஆயுதம் மனதடக்கஞ்செய்தால்
    மற்றவித்தைநிமிஷத்தில் வரும்பார்நவிலுவேனே. 6

444. பிரமன் பிதுருவின் வீட்டில் அக்ஷரம்

நவிலுவேன்உருவையிங்கே வகுத்துக்கொண்டு
    நாட்டடாபிருதுவியில் நாற்கோணவீடு
தவிலுவேன்நான்முகன்றன் பீசம்வைத்து
    தப்பாமல்அங்கென்றும் நங்கென்றுந்தான்
மவிலுவேன்ரெண்டெழுத்து கோசம்பீசம்
    வைத்துமேரெண்டெழுத்து கொண்டுவோது
அவிலுவேன்கருவையங்கே தொட்டுக்கொண்டு
    அப்பனேவோதிப்பார் பலிக்கும்பாரே. 7

445. மால் அப்பு வீட்டின் அக்ஷரம்

பலிக்குமடாஅப்பினிட வீடுமக்காள்
    பாரானபிறைபோலே மாவினிடவீடு
கெலிக்குமடாமாவினிட பீசம்வைத்து
    கேள்மகனேஇங்கென்றும் அங்கென்றுந்தான்
நலிக்குமடாஅதினுடைய கோசபீசம்
    நாட்டியேகருத்தொட்டு நேரம்பார்த்து
வலிக்குமடாவோர்மனது கொண்டுவோத
    வாரிவிடும்செய்தொழிலின் வரிசைபாரே. 8

446. ருத்திரன் தேயுவினுடைய வீட்டின் அக்ஷரம

வரிசையாய்தேயுவினுட வீடுமக்காள்
    வளமானமுக்கோணம் சிவனுடையவீடு
பரிசையாய்சிவனுடைய பீசம்வைத்து
    பார்மகனே இங்கென்றும் சிங்கென்றுந்தான்

கரிசையாபதினுடைய கோசபீசம்
கலந்துவைத்துகருவையங்கே தொட்டுவைப்பாய்
உரிசையாய்நின் றுசெபம் செய்யும்போது
உத்தமனேமுக்கோணம் பொல்லாதுபாரே. 9

447. மயேஸ்வரன் வாயுவினுடைய வீட்டின் அக்ஷரம்

பொல்லாதவாயுவென்ற வீடுமக்காள்
பெரியமஹாசுவாதிஷ்டானத்தின் வீடுஅறுகோண
நில்லாதமயேஸ்பரத்தின் பீசம்வைத்து
நின்றுடும்எங்கென்றும் வாங்கென்றுந்தான்
சொல்லாதகோசமென்ற பீசம்வைத்து
தொட்டிடுவாய்கருவையங்கே நேரம்பார்த்து
வல்லாதவாயுவென்ற பிரகண்டவீடு
வாரிவிடும்வெளிதனிலே மதிக்கொண்ணுதே. 10

448. சதாசிவம் ஆகாசம் வீட்டின் அக்ஷரம்

மதிக்கவேபோகாது ஆகாசவீட்டில்
மதிரவியும்பூண்டிருந்த ஈசனுடவட்டம்
கதிக்கவேஈசனுட பீசம்வைத்து
கணிவான ஒங்கென்று எங்கென்றுந்தான்
விதிக்கவேரெண்டெழுத்தின் கோசபீசம்
மேவியேசத்திவரப் பதிந்துகொண்டு
சதிக்கவுமேகருத்தொட்டு நேரம்பார்த்து
கருவியொடுஏகவெளியில் வாரிவிடும்பாரே. 11

449. பஞ்சபூதம் பேர்தலின் பலன்

வாரிவிடும்ஆகாசம் வாய்வும்சேர்ந்தால்
மக்களேஒருவருமே மதிக்கப்போகா
நீரிவிடும்பிரசண்ட வாய்வுசேர்ந்து
நிலைக்கவேஒட்டாது நிலைகொள்ளாது
மாரிவிடும்தொழில்கூர்மை வெளியில்காத்து
மாட்டுவதுபோலவே மனதிலெண்ணி
ஆறிவிடும்அஷ்டகன்ம வித்தையப்பா
அறிவுள்ளோர்அறிவார்கள் அறிந்துபாரே. 12

450. இதுவுமது

அறிந்துபார்ஆகாச வெளியுங்காத்து
அப்பனே அக்கினியும் சேர்ந்துகொண்டால்

எரிந்துபோம்கண்ணுக்கு நிமைதோணுது
என்மகனே அக்கினியும் வாய்வுஞ்சேர்ந்தால்
பிரிந்துபோம்ஏகவெளி கூடிக்கொண்டால்
பேசுவதுஒன்றுமில்லை பெண்ணுசையில்லை
சரிந்துபோங்கைவல்யம் வாய்வுந்தீயும்
தானறிந்தான் அவனைவெல்வார் இல்லைத்தானே. 13

451. இதுவுமது

இல்லையே அக்கினியுந் தண்ணீர்சேர்ந்தால்
என்மகனே தண்ணீரும் அக்கினியைவெல்லும்
தொல்லையாய்வாழ்வங்கே கூடும்போது
தொடுத்ததொழில்நாட்செல்லுஞ் சுருக்கோயில்லை
கல்லையே அப்பதுவை சேர்க்கொண்ணுது
கனிவானமண்ணதுவுந் தண்ணீர்சேர்ந்தால்
இல்லையேகாணுமல் தண்ணீர்வற்றி
இரங்கிவிடும்மண்ணதுவும் உண்ணும்பாரே. 14

452. சத்தி சிவக்கூறு

உண்ணுமே அஞ்செழுத்தில் ரெண்டுபெழுதில்லை
என்றுமேபேசுவது எளிதோசொல்லு
மண்ணுமே தண்ணீருங் கூடிஅல்லோ
மனுவென்றசீவசெந்தை வளர்த்துஉறவாடி
எண்ணுமேயுலகமென்ற வாழ்க்கையெல்லாம்
இரண்டினுல்உண்டாச்சு இசைந்துபாரு
கண்ணுமேஉயிரதுவை வளர்த்ததுபோலப்பா
கனிவானமண் தண்ணீர் அறிவதுதான்பெரிதே. 15

453. இதுவுமது

பெரிதானமண்ணல்லோ சத்திசத்தி
பேசவுமேகூடாது சிவன்தான் தண்ணீர்
நெரிதானசத்திசிவம் கண்டபேர்கள்
நீடூழிகாலமெல்லாம் நிமையாதோறும்
சரியானஉலகத்தில் சிறுமைபெற்று
தான்திரிவார்அவரைஒருவர் அறியமாட்டார்
அரிதானசத்துருவித்தை எவர்சொல்வார்கள்
அப்பனேஇவர்மனதை யறியார்பாரே. 16

454. இதுவுமது

அறியாரேஅவர்மனதை நோகச்செய்தார்
அருகிவிடும்அவர்குடியும் அழிந்துபோகும்
தெரியாரேஅவற்கு உபகாரம்செய்தோர்
சிறுமைவிட்டுபெருமையிலே தேரிவாழ்வார்
சரியானநற்பதவி அவற்கேகிட்டும்
சண்டாளஜென்மமென்றால் தரிகொள்ளாது
நெறியாறேஉலகத்தோ டொத்துவாழ்வார்
நேரறிந்துஅவர்குணத்தில் நின்றுதேரே. 17

455. இதுவுமது

தேருவதுயெளிதல்ல வெகுநாட்செல்லும்
ஜெகத்திலேகோடியிலே ஒருவன்உண்டு
ஆறுவதுகோடியிலே அணுகாதுபாரு
அப்பனேபெண்ணாசை அற்றுப்போச்சு
கோறுவதுபொருளாசை மண்ணின்ஆசை
குடிகெடுத்தகாமவெறி குழலாளைத்தள்ளி
ஏறுவதுசத்திசிவம் பூசைவிட்டால்
இழந்திடுவாய்சத்தியமாய் எண்ணிக்கொள்ளே. 18

456. இதுவுமது

கொள்ளுவதுபட்சிவித்தை அறியவேணும்
கூடுதனில்வாழுமுயிர் தெரியவேணும்
துள்ளுவதுநிலையில்நின்று வாசிவிட்டால்
தூலமென்றகாயமது அழிந்துபோகும்
அள்ளுவதுபிரதிஷ்டைக்குள் ஆகிக்கொண்டு
அப்பனேபாசவினை யடுத்துக்கொள்ளும்
வெல்லுவதுசத்திசிவம் பூசைசெய்தால்
மேலானபட்சிவித்தை பலிக்கும்பாரே. 19

457. இதுவுமது

பாரப்பாபஞ்சபட்சி சுருக்கம்சொல்வேன்
பார்தனிலேஒருவருக்குஞ் சொல்லவேண்டாம்
நேரப்பாகலியுகத்தில் பழிக்கஞ்சார்கள்
நேர்மையுள்ளமனமுள்ளோர் தேடிப்பார்த்து
ஆரப்பாகோடியிலே ஒருவனுண்டு
அமர்ந்திருப்பார்ஞானநிலை அறிவுதங்கி

சிரப்பாஇருந்தோதா மனஞ்சோதித்து
தெள்ளுதமிழ்பட்சிவித்தை செப்புவாயே. 20

458. இதுவுமது

செப்புவாய்வருஷமது பனிரண்டுஆனால்
திடமானமனதொன்று அறிந்துக்கொண்டு
ஒப்புவாய்சூக்ஷாதி சூக்ஷமெல்லாம்
ஒழித்துவைத்துமைத்த தெல்லாம்சொல்வாய்
தப்புவாய்சகலகரு மானமெல்லாம்
தானடக்கஞ்செய்துகொண்டு அறிவில்நில்லு
அப்புவாய்பெரியோரை கற்புடையபேரை
அகந்தையாய்ச்சொல்வரவர் அழிந்திடுவார்தானே. 21

459. இதுவுமது

அழிந்திடுவார்பட்சியைநீ பார்த்துக்கொண்டு
அப்பனேஉடலினுட சக்கரத்தைவைத்து
நெளிக்கவேபிரிதிவியில் நாற்கோணமிட்டு
நேர்மையுள்ள அங்கென்றும் நங்கென்றுந்தான்
குளிக்கவேநீங்கென்று கோசபீசம்வைத்து
கூட்டுவாய்அவன்பேரை சுற்றிவரபதித்து
களிக்கவேகருத்தொட்டு வோதுவதைகேளு
கனிவாகஅங்நங்ரீங்ஸ்ரீரீங் இன்னுன்நசிஎன்றோதே. 22

460. இதுவுமது

ஓதுகிறபோதல்லோ செய்வகையைநினைத்து
ஓர்வகையாய்நின்றுஜெபம் ஆயிரத்தெட்டுமானால்
ஏதுகிறவசியம் ஆகிருஷ்ணமேசெய்யும்
என்மகனேநாலெழுத்தில் தம்பனமோகனமாம்
ஓதுகிறரெண்டெழுத்தில் பேதனம்உச்சாடனமும்
மக்களேநடுத்தலையைப் பிடித்துமாற
கூறுகிறமாரணமும் வித்வேஷணமும்செய்யும்
குறியான அறுபத்துநாலும் ஆடும்பாரே. 23

461. இதுவுமது

ஆடுமேதொழிலறிந்து பூசைசெய்தால்
அப்பனே அணுவளவுந் தப்பாதப்பா
போடுமேவோர்மனதாய் செய்யும்போது
புண்ணியனேஎக்கியமாய் முடிந்துதானால்

சாடுமேதேவிக்கு பொங்கல்பலியுடனே
தனதானருத்திரசெபம் தாக்கும்போது
வாடுமேகுறித்தபட்சி மாண்டுபோகும்
மக்களேநாள்மூன்றில் அழிந்துபோமே. 24

462. இதுவுமது

அழிந்துபோம்செய்வகையை நினைந்துக்கொண்டு
அப்பனேதொடுத்திடுவாய் எழுத்தறிந்துமாறு
தெளிந்துபோம்தொழிலுக்கு வர்க்கவகைகண்டு
திடமாகநீயிருந்து வோதும்போது
கழிந்துபோம்குறித்தபட்சி உடல்சிதறிப்போகும்
கண்மணியேகன்மம் அதுதோஷம்தோஷம்
நெளிந்துபோம்பட்சிஅது பொல்லாதப்பா
நேரறிந்துகுறிப்பறிந்து நீசெய்வாயே. 25

463. இதுவுமது

செய்வதுதான்யாருக்குச் செய்யவேணுஞ்
ஜெகத்திலேஎனத்துரோகி குருத்துரோகிக்கும்
கொய்துதான்பெரியோரை தூஷிப்போர்க்கும்
கொடுமையுள்ளவஞ்சகர்க்கும் கற்பழித்தபேர்க்கும்
நெய்வதுதான்பொய்சூது கற்றபேர்க்கும்
நேர்மையுள்ளபிராமணரை பழித்தபேர்க்கும்
நைவதுதான்சிவாலயங்கள் அழித்தபேர்க்கும்
நலமில்லாமனத்தோர்க்கு செய்வாய்பாரே. 26

அப்புவின் வீட்டின் அட்சரம்

464. இதுவுமது

பாரப்பாஅப்புவிற்குப் பிறையாம்வீடு
பணிந்துநல்லஇங்கென்றும் மங்கென்றுந்தான்
கோரட்டாஸ்ரீரிங்கென்றும் கோசபீசம்வைத்து
கூட்டுவாய்அவன்பேரை சுற்றிவைத்து
காரடாகருவையங்கே தொட்டுக்கொண்டு
கனிவாகவோதும்வகை இங்மங்கென்று
தோரடாவிஷங்கட்கு கங்கொன்றுசொல்லி
தேடியேயின்ஞனசிநசியென்று சுற்றிவையே. 27

465. தேயுவின் வீட்டின் அட்சரம்

சுத்திவைத்துமுன்போல செய்துபாரு
துடியானஅஷ்டகன்மம் ஆகும்பாரு

குத்திவைத்துதேயுவினுட வீட்டைக்கேளு
குறியானமுக்கோணம் சிவனுடையஆட்டம்
கத்திவைத்துஉங்கென்றும் சிங்கென்றுந்தான்
கருதுவாய்டீங்கென்று கோசபீஜம்வைத்து
முத்திவைத்துவோதுவது உங்சிங்கென்று
மொழியடாடீங்கென்று ரங்லங்நசியென்றோதே. 28

466. இதுவுமது

என்றல்லோஎதிரியுட பேரைச்சுற்றி
எழுதுவாய்கருவைஅங்கே தொட்டுவைத்து
நன்றல்லோசுத்தியுடன் வஸ்துவைத்து
நலமாகமுன்சொன்ன படியேயோது
மன்றல்லோஅஷ்டகன்மம் அறுபத்தினாலும்
வகையுடனேசெய்வதுதான பலிக்கும்பாரு
குன்றல்லோவெடிமருந்து இதற்கொவ்வாது
குடிகெடுத்தபட்சிவித்தை கூறொண்ணாதே. 29

467. வாயுவு வீட்டின் அக்ஷரம்

கூறவொண்ணவாயுவினுட வீட்டைக்கேளு
குமாருருசக்கரந்தான் அறுகோணம்அப்பா
மற்றவொண்ண எங்மங்கென்றுபோடு
மறையாதேவீங்கென்றும் கோசபீசம்வைத்து
தேறவொண்ணசிவத்துக்கு எழுத்தைக்கேளு
திறமானஎங்வீங்கங்ரங் இன்னமேநசிநசிஎன்றோது
நேரொண்ணகருத்தொட்டு வோதும்போது
நீறிவிடும்பிரசண்ட வாயுதானே. 30

468. ஆகாயத்தின் வீட்டின் அக்ஷரம்

தானென்ற ஆகாயவட்டவீடு
சதாசிவனார்வாழும்அந்த வீட்டில்அப்பா
தேனென்றஓங்யங் என்றுபோடு
திரமாகடீங்ரீங்காரம் கோசபீஜம்வைத்து
மானென்றதேவியைத்தான் வருந்திக்கொண்டு
வளமாகஓதும்வகை நன்றாய்க்கேளு
பானென்றஓங்யங்டிரிங்கங்சங் இன்னமேநசிநசி
பரமபதம்வழிநோக்கி பதைத்துச்செய்யே. 31

469. பிருதிவிக்கு கடைத்தலையாகப் பிடித்துமாரல்

பகையாதுகடைத்தலையைப் பிடித்துமார
பகைத்தபேர்எல்லாரும் உன்பதமேசேர்வார்
நகையாதுநசியைவிட்டு வசியென்றுவோது
நலமானதொழில்எல்லாம் நசியைநினையாதே
வகையாதேமற்றஅஞ்சு தொழில்கட்கப்பா
வகையாகநசியைவிட்டால் பலியாதுபாரு
துகையாதுதொழில்அறிந்து வோதவேணும்
துடியானபகைபோச்சு உறவும்ஆச்சே. 32

470. சுபகாரியத்துக்கு செபம்செய்யும் ஸ்தலம்

உறவானதொழில்கள்எல்லாம் மித்துருவைச்சேர்ந்து
ஓதுவாய்ஒருமனதாய் இருந்துக்கொண்டு
பறவானநல்லதோர் காரியங்கள்
பலிக்குமடாவில்வமரம் பதியிலிருந்தோனு
மறவானசிவாலயங்கள் கெங்கையோரம்
வளர்ந்தநல்லவனத்திலே இருந்துசெய்தால்
திரமானமூன்றுவகை தொழிலுமாகும்
தின்மைஎன்றதொழில்செய்யும் தலத்தைக்கேளே. 33

471. அசுபகாரியத்துக்கு செபம்செய்யும் ஸ்தலம்

தலமதுதான்பாழ்வீடு மெத்தநன்று
தன்மையுள்ளமுகசந்தி பாதைஆகும்
குலமதுதான்காளியுட கோவில்ஆகும்
குலாவுகின்றபொதுவான அம்பலமும்ஆகும்
செலமதுதான்மாட்டையுந் தொழுவம்ஆகும்
தீயெறியுங்காடாகும் சுடுகாடுஆகும்
வயவதுதான்இத்தலத்தில் தொழிலைச்செய்யே
மக்களேஅஞ்சுவகை தொழிலும்ஆமே. 34

472. இதுவுமது

தொழிலாகும்வகையேது சொல்லக்கேளு
துடருமுன்னேபக்ஷியைநீ கண்டபோதே
குளியாகும்அந்திடத்தை சுத்திபண்ணு
குணமாகமந்திரந்தான் சிவசிவாவென்றுசொல்லு
தழவாகும்பச்சிலைக்கி சாபம்நீக்கி
தண்மையுடன்சாப்பிட்டு சிலைபோல்வருந்திபாரு

நெளிவாகும்சக்கரத்தில் அக்ஷரத்தைவைத்து
நேர்மையுள்ளசக்கரத்தால் கருத்தொட்டுபூசைசெய்யே.

473. இதுவுமது

பூசைசெய்யநிர்வாணத் தோடேநின்று
பிடுங்குவாய்கிழக்குமுக மாகநின்று
பாசைசெய்துவேர்வாங்கி தேவிமுன்பு
பண்பாகவைத்துநீ தூபபெலியுடனே
வேசைசெய்துவேரெடுத்து வைக்குந்தலைமைகண்டு
விழியானபெலிகொடுத்து புதைக்கும்போது
காசைசெய்துபோகுமடா தொழில்பொல்லாது
நாடாதேவெகுபாவங் கொடுமையாமே. 36

474. இதுவுமது

கொடுமையுள்ளவஞ்சகர்க்கு செய்யவேணும்
கொலையானபேர்களுக்குச் செய்யவேணும்
அடுமையென்றுவந்தவர்க்கு அறிவித்தாக்கால்
அப்பனே அவன்செய்யும் பலனிற்பாதி
வடுமையென்றுமனமறியச் சொன்னையானால்
வந்திடுமேவெகுபாவம் வந்துசூழும்
கடுமையுள்ளபித்தர்கள்தான் வந்துஎய்ப்பார்
தள்ளிவிடுஅதினாலே பலன்உண்டாமே. 37

475. இதுவுமது

பலனுண்டுஇத்தொழிலை வெளியிடாதே
பழிக்கஞ்சாகலியுகத்தில் பழியோபாவம்
பெலனுண்டுஉலகத்திம் பகையோயில்லை
பெருமைஎன்றபெரியோர்கள் வார்த்தைசொல்வார்
கலனுண்டுஎன்றுசொல்லி சற்றுநினையாதே
கலங்காதேமனமுறுதி கழியவேணும்
சிலருண்டுவருங்காலம் தங்குங்காலம்
செடமறிவதற்கல்லோ தெளிந்துபாரே. 38

476. இதுவுமது

தெளிவைத்தான்வெகுவினையம் வைத்துப்பாரு
செடமுழுதும்சத்துருவை மித்துருவைக்கண்டு
அழிவதுதான்உண்டானால் தொழில்செய்யும்போது
அப்பனேபட்சிக்கு பகையைக்கூட்டு

நெளிவதுதான்பட்சிபகை இருந்திடத்தில்
நேரானகருத்தொட்டு வைக்கவேணும்
கழிவதுதான் தலைகீழாய் மாறும்போது
சண்ணுமடாகருக்குருவும் சண்ணும்பாரே. 39

477. இதுவுமது

சண்ணுமடாருத்திரசெபம் முடிந்ததானால்
தானினைந்தபடிமுடியும் தப்பாதுஅப்பா
எண்ணுமடாமுன்போலே தொழிலைச்செய்து
எடுத்திடுவாய்கொள்ளிபொடு அதனில்வைத்து
கண்ணுமடாருத்திரனை நினைந்துகொண்டு
கனிவானவஸ்துடனே சுத்திவைத்து
பண்ணுமடாவோர்மனதா இருந்துசெபம்செய்தால்
பழிகாரருத்திரனும் முடிப்பான்பாரே. 40

478. இதுவுமது

முடிப்பாரேஅவனுடைய கருவிருப்பதாலே
மோசமதுசெய்திடுவான் பழிகொலைக்குஅஞ்சான்
அடுப்பானேஅவனுடைய எமதண்டினாலே
அவனடிக்கஆர்விலக்கப் போறார்அப்பா
குடிப்பானேஉதிரம்என்ற பானந்தானும்
கொல்லுவான்அவனுடைய ஈரலைத்தான்கவ்வி
கடிப்பானேமூளையைத்தான் தின்றுஐயா
கலங்காமல்நீயிருந்து பூசைமுடிப்பாயே. 41

479. இதுவுமது

முடிப்பாயேஉன்மனது போலேமக்காள்
முடிவதுதான்எதாலே கருங்குருவினாலே
கெடிப்பானேஎதிரியுடல் பெலங்குறைந்ததாலே
சிவனுடையருத்திரகளை கோபத்தாலே
வடிப்பானகாலன்என்ற துகைமுடிந்ததாலே
வந்துதடாஇந்தவினை மறிக்கப்போகா
குடிப்பானருத்திரனும் உதிரத்தைத்தானும்
கோபமதைஒருவரால் திருப்பொண்ணாதே. 42

480. இதுவுமது

திருப்பவதுகருவறிந்த பேரேஅல்லால்
ஜெகத்திலுள்ளபேர்களோ திருப்பப்போறார்

கருப்புவதுருத்திரனுட மந்திரந்தானப்பாகருவதுஒம்ஸ்ரீயும்
கிரீம்அங்உங்மதுமாங்கிஷ ருத்திரமூர்த்திவாவாயென்று
வருப்புவதுஉருவங்கே நூற்றிருபத்தெட்டு
வருந்திஞல்ருத்திரனும் மனதில்தோணும்
முருப்புவதுமுன்சொன்ன எழுத்தைக்கூட்டி
முடிக்கிஞல்எதிரிஇல்லை முடிந்துபோச்சே. 43

481. இதுவுமது

போச்சுதடாமுன்சொன்ன படிதப்பாது
பொல்லாதபட்சிவித்தை பொருள்சொல்லாதே
தாட்சியொன்றும்வாராது மனதடக்கம்வேணும்
தண்மையல்லோபுத்தியல்லோ தணியவேணும்
வாச்சுதென்றுஉயிர்வதை செய்யநினையாதே
வந்திடும்பார்கன்மவினை தொலைக்கொண்ணுது
பாச்சுதுபார்குருபதத்தை பணிந்தோர்அப்பா
பதினெண்பேர்சாபம்இல்லை பலிக்கும்பாரே. 44

482. இதுவுமது

பலிக்குமடாகுருபதத்தை மறக்கொண்ணுது
பரமபதபொருளெனவே எண்ணுவாய்நீ
சொலிக்குமடாசரஸ்வதியாள் கிருபைதானும்
தொடுத்திடுமேஞானவிதி அமைக்கும்பாரு
கெலிக்குமடாஉன்னுவில் சொன்னதெல்லாம்
கெணிதமுடன்உனைப்பகைத்தோர் வாழ்வதில்லை
வலிக்குமடாதன்னுயிர்போல் மன்னுயிரைஎண்ணி
வாழ்வதுதான்உலகத்தோ டொத்துவாழே. 45

483. இதுவுமது

ஒத்துநின்றவாழ்வதுதான் அறிந்துமக்காள்
உலகத்தில்பேய்க்கூத்தாய் ஆடும்பாரு
சத்துநிறைபொருள்அறியார் சண்டிமாண்பர்
சன்னியாசிரிஷிகளைப்போல் வேடம்பூண்டு
கத்திநின்றபெரியோரை வணக்கஞ்செய்து
கலந்ததிஞல்மறைப்பு அதுவெளியாய்த்தோன்றும்
புத்திவரும்அறிவுதங்கும் சிவயோகம்பெற்று
பூதலத்தில்நீயும்ஒரு சித்தாவாயே. 46

484. இதுவுமது

சித்தனென்றபெயர்பெறவும் வெகுநாட்செல்லும்
செடம்இருந்தால் அதிசயங்கள்காணலாகும்
பத்தனென்றகன்மவலைக் குள்ளேசிக்கி
பாழ்நரகில்வீழாதே பலன்ஏதுண்டு
கத்தனென்றசிவனுடைய கடாக்ஷத்தாலே
கலந்தேறமனதுறுதி யாகவேணும்
வத்தனென்றுஉலகத்தில் கோடிக்கொன்று
வாழுவான்இல்லறத்தில் பெரிதாம்பாரே. 47

அக்ஷரமாரல் படலம் முற்றிற்று

மூலிகைப் படலம்

485. இதுவுமது

பெரிதானசாஸ்திரந்தான் பட்சிசாஸ்திரம்
பேருலகில்மானிடர்கள் அறியாவிட்டால்
அரிதானநேரம்அங்கே அறிந்துசெய்தால்
அப்பனேசெய்தொழிலும் பங்கம்ஆமோ
குறியானதேசமென்ற பீஜந்தானும்
குணமாகசொல்லிவைத்தேன் கிரீங்ஸ்ரீரீங்என்றுபோடு
வரிதானமுனிசொன்ன அக்ஷரத்தில்சேர்ந்ததானல்
மகிமையுண்டுஅவ்வெழுத்து எழுந்தாடும்பாரே. 1

486. இதுவுமது

ஆடுமேகாரிய பஞ்சாட்சரமும்அப்பா
அதினுடனேகாரணமும் சேர்ந்ததானல்
கூடுமேகோசமென்ற பீஜம்சேர்ந்தால்
கூடிவிளையாடுமடா உடல்உயிராய்நின்று
வாடுமேஇதுமூன்றும் சேராவிட்டால்
மரப்பாவைபோலிருக்கும் ஆடாதுபாரு
தேடுமேகருக்குருவும் சேர்ந்தகாலம்
செகத்திலேஅவனைவெல்ல தரிதாம்பாரே. 2

487. பூர்வபட்சத்து பட்சிகளின் பச்சிலை

அரிதானநேரமங்கே அறியவேணும்
அப்பனேமூலிகையும் தெரியவேணும்

சரியானசத்துருவும் மித்துருவும்நின்ற
தன்மைஅங்கேதெளிவாகக் காணவேணும்
பரிவானகைப்பாகம் செய்பாகங்கள்
பழக்கத்தால்ஆசானும் காட்டவேணும்
குறியானதொழில்செய்தால் பலியாதேபோமோ
குருத்தொட்டுக்காட்டவுமே முத்தியாமே. 3

488. இதுவுமது

முத்தியாய்ரோமரிஷி சொன்னவாக்கியம்
முன்பின்னுய்வாராது பழுதொன்றில்லை
பத்தியாய்ஓர்மனது கொண்டுநின்றால்
பார்க்கலாம்அதிசயங்கள் உலகத்துள்ளே
வெற்றியாய்வருவதற்கு உறுதிவேணும்
மேதினியில்சாஸ்திரத்தை வெளிவிடாதே
சத்தியமாய்நீநினைந்து வந்தாயானல்
சகலமுமேசித்திமுத்தி யாவாய்நில்லே. 4

489. இதுவுமது

நில்லென்றவல்லூறுக் கரைக்கீரையாகும்
நிட்சயமாய்சொல்லிவைத்தேன் ஆந்தைசிறுகீரை
வெல்லென்றகாக்கைக்கு சாரணைவேர்ஆகும்
வெகுகொடுமைகோழிக்கு தகரைவேரும்
சொல்லென்றமயிலுக்கு நங்கிலிவேர்என்று
கூறினர்முனிவர்எல்லாம் குறைசொல்லாமல்
அல்லென்றஅப்புஉப்பு நாழிஎன்று
அறிந்தவர்கள்பக்ஷிவித்தை அறிவார்பாரே. 5

490. மூலிகை சாப நிவர்த்தி

பாரேநீமூலிகைமுன் இருந்துகொண்டு
பகருவாய்ஓம்மூலி என்றுகொண்டு
சேரேநீசர்வமூலி சாபம்நசிநசிஎன்று
செலுத்துவாய்பதினாறு உருவும்ஓதி
கோரேநீகன்னிநூல் காப்புக்கட்டி
கொடுத்திடுவாய்வஸ்துசத்தி தூபதீபங்காட்டி
வேரேநீபிடுங்குமுன்னே அட்சரத்தைஓதி
வேளைகண்டுகருத்தொட்டு பிடுங்குவாயே. 6

491. மூலிகை பிடுங்கும் வகை

பிடுங்குகிறபோதல்லோ நிர்வாணங்கொண்டு
பெரிதானருத்திரனை மனதில்வைத்து
நடுங்குவதுவாசியைநீ உள்ளேவாங்கி
மைந்தனேநினைத்ததுபோல் எண்ணிக்கொண்டு
ஒடுங்குவது திண்ணமென்று எதிரிமுகம்நெஞ்சுமூலம்
ஊண் அடாநடைஉறக்கம் சாவைவைத்து
அடங்குமேகுறித்திடத்தில் சாவெழுத்தையோது
அள்ளிவிடுகாலடிமண் கருவைத்தொட்டே. 7

492. பீடை சம்பவித்தல்

தொட்டல்லோவேர்மண்ணும் ரெண்டும்ஒன்றாய்
சுருக்கிடவேஅவ்வெழுத்தை பிடித்துமாறு
விட்டல்லோஐம்புலனும் சிதறிப்போகும்
மேலானவேரைத்தான் தியானஞ்சென்று
சுட்டல்லோபோடாதே வெகுகொடுமைவந்து
சூழும்அடாஉனதுகுலம் கடைத்தேருவதில்லை
கொட்டியதேள்அதுபோல் விஷந்தானேறும்
கூடாதுஒருவரால் திருப்பும்வகைபாரே. 8

493. பீடை நிவர்த்தி

திருப்புவதுநீயல்லால் வேறொருவர்இல்லை
செகத்திலேமுத்தர்களும் திருப்புவதுஅரிது
கருப்புவதுபிடுங்கினவேர் வித்துவிரைஇட்டு
காலைசந்தியிருநேரங் கண்டுஅரசோது
முறிப்பதுவும்நடைமூலம் உறக்கமூலம்
உத்தமனேமரணவேர் பிடுங்கொண்ணாது
அறிப்பதுவும்ஊண் அரசுவேர் பிடுங்கிவைக்க
அப்பனேஉன்னைவெல்வ தரிதாகும்பாரே. 9

494. தன்னை வெல்லக் கூடாதென்பது

பாரடா ஆகிருஷ்ணம் வசியம்ரெண்டும்
பண்பான அரசிலே யெடுத்துஓது
தோரடாமோகனமும் தம்பனமும்ரெண்டும்
திடமானஊணதிலே ஓதிப்பாரு
வாரடாவேஷணமும் உச்சாடனமும்ரெண்டும்
மக்களேநடையெழுத்தைப் பிடித்துமாற

கூடாபேதனத்தை எரக்கத்தில்மாறி
குடிகெடுத்தமாறத்தை சாவெழுத்தால்மாறே. 10

495. இதுவுமது

மாறிவிடும்தொழிலிலும் வகையாய்ச்செய்து
மக்களேவேரைவைக்குந் தலைமைஅதுகண்டு
கோறிவிடும்போதடைக்கும் அக்ஷரத்தைஓதி
கொண்டுபோஇணைவெல்ல திவ்வுலகில்இல்லை
வாறிவிடும்அஷ்டகன்மம் மனதுறுதிகொண்டு
ம்க்களேபிறர்உயிரை வதைசெய்யாதே
நீறிவிடும்தன்னுயிர்போல் மன்னுயிரைஎண்ணி
நிஜமென்றேஉணராது நிமிஷம்அதுபாரே. 11

496. அமரபக்ஷம் பக்ஷிகளின் பச்சிலை

பாரேறிஅமரத்தில் கொடுமைநினையாதே
பழிகாரபச்சிலையை சொல்லொண்ணாது
மாரேநீமயிலுக் குதவேளை ஆகும்
மருளாதகோழிக்கு குப்புமேனி
வாரேநீவல்லூற்கு நாய்க்கடுகுஆகும்
வந்ததொருஆந்தைக்கு அரைக்கரையப்பா
காரேகேள்வலியனுக்கு அவுரிஅதுசேரும்
கனமானபச்சிலையை வெளிவிடாதே. 12

497. வேர்பிடுங்குவதில் உண்டாகும் பலன்

வெளிவிட்டால்நடைமூலம் பிடுங்கினுக்கால்
வெற்றிஎன்றதம்பனமும் மோகனமும்செய்யும்
தெளிவுடனே அரசினுட வேர்பிடுக்கிக்கொண்டால்
ஜெகத்திலேமெச்சும் ஆகிருஷ்ணவசியம்ஆகும்
பழியுடனேஊண்வேரை பிடுங்கினுக்கால்
பழிக்குமடாவேஷணந்தான் கண்கொள்ளாது
களிவுடனேஉறக்கம்வேர் பிடுங்கும்போது
கனமானஉச்சாடனம் பேதனம்செய்யுமே. 13

498. இதுவுமது

செய்யுமடாமரணவேர் பிடுங்கும்போது
திரும்பாதுஎதிரிஉடல் சிதறிப்போகும்
ஐயமடாஎவ்வகையும் நினைக்கும்போது
அவ்வெழுத்தைநீபிடித்து மாறிக்கொள்ளு

பொய்யடாமுன்சொன்ன படிதப்பாது
பொல்லாதஅமரத்தில் தொழில்செய்யாதே
வையகத்தில்பாவியென்று பேரெடுத்தமக்கள்
மனோன்மணியாள்கிருபை யில்லைவரிசைபாரே. 14

499. தன்னைத்தானறிதல்

பாரேநீஉன்னுடைய ஆத்துமாவை
பகர்ந்தறிவதற்கல்லா சொன்னேன்சூக்ஷம்
பாரேநீஎங்கெந்த வேளைகண்டு
பருகிடுவாய்அக்ஷரத்தை பிடித்துமாறு
தேரேநீஉலகத்தில் பழிசெய்யாதே
செடமிருந்தால் அதிசயங்கள்காணல்ஆகும்
வேரேகேள்கொலைகள் வரும்பாவத்துக்கும்
விரும்பாதேரிஷியினுட சாபந்தானே. 15

500. பட்சிநிலை அறிதல்

சாபமெ ாறல்மனோன்மணியாள் கிருபைவேணும்
சண்டாளஅக்ஷரத்தை மாறவேணும்
கோபமென்றகொடுமையைநீ அகற்றவேணும்
குறித்தவன்தன்பட்சியுடத் தருவும்வேணும்
பாவைஎன்றகன்னிநூல் காணவேணும்
பழிகாரநேரம்அங்கே பதியவேணும்
விவேகமென்றமனதறிவால் கைபாகங்கள்
விரும்பினமேசெய்பாகம் பலிக்கும்பாரே. 16

501. பழிநிவர்த்தி செய்துக்கொள்ளல்

பலிக்குமடாதேவியுட பூசைசெய்தால்
பாவங்கள்செய்தாலும் பழிநிவர்த்திசெய்து
கெலிக்குமடாஉயிர்வதை செய்யநினையாதே
கேசரியாள்மனம்நோக நடத்தைநடவாதே
சொலிக்குமடாஉன்னுவில் ஈஸ்வரியாள்கிருபை
சோபநிலைஅறிவித்து பரகெதியைச்சேர்ப்பாள்
வலிக்குமடாஉன்மனது நோகநடந்தோர்க்கு
மயக்கம்இல்லைபீடைவரும் மனதறிந்துபாரே. 17

502. இதுவுமது

பாரப்பாஉலகத்தில் உள்ளபேர்கள்
பணிந்திடுவார்தனங்கோடி ஈந்தாலுந்தான்

சேரப்பாபக்ஷியுட சுருக்கஞ்சொல்வேன்
திண்மைஎன்றதீவினைக்கு உள்ஆகாதே
நேரப்பாஉன்னுடைய மனதுதெளிவாக
நின்றநிலைகாணவல்லோ சொன்னேன்சூக்ஷம்
ஆரப்பாதன்அறிவைத்தான் அடக்கிக்கொண்டு
மகத்தானசிவயோகத் திருந்திடாயே. 18

503. புத்தி கூறல்

இருந்திடவேகாயசித்தி செய்துகொண்டு
என்மகனேகற்பம்அது உண்டுதேறு
அறிந்திடவேகூடழியா வாழ்க்கைதேட
அப்பனேமனோன்மணியாள் கிருபைசெய்வாள்
தெரிந்திடவேசித்தர்எல்லாம் உன்னிடத்தில்வந்து
தேவைஎன்றகாரியங்கள் சொல்லிவைப்பார்பாரு
சொரிந்திடவேஅஷ்ட லட்சுமியும்வந்து
சொரூபானுசொரூபநிலை சொல்வாள்பாரே. 19

504. ஊண்வேளையில் வேர்பிடுங்கும் பலன்

பாரடாஊண்வேறு பிடுங்கினுக்கால்
படருகிறகாரியங்கள் ஆகும்பாரு
ஆரடாசத்துரு மித்துருவும்ஆவான்
அப்பனேசோபன காரியங்கள்நன்மை
தூரடாபீடையது விலகும்பாரு
தப்பாதுபொருள்வராது தனஞ்செயனும்ஆவாய்
ஓரடாவேர்பிடுங்கிகுலிசம் அது ஆட
ஓகோகோஇதின்பெருமை உரைக்கொண்ணாதே. 20

505. நடைவேளையில் வேர்பிடுங்கும் பலன்

ஒண்ணானநடைவேர் பிடுங்கினுக்கால்
உத்தமனேமுடைப்படுத்தி வருத்தம்கொள்ளும்
எண்ணாதுஎண்ணமனம் இடைஞ்சல்கொள்ளும்
எவ்வளவேணும்சுகமில்லை பிரமலபிமட்டும்
தன்னாலேவிதி அமைப்புள்ளமட்டும்
தான்அனுபவிக்கவுமே அல்லாதில்லை
விண்ணானசித்தர்களும் திரும்பும்வகையறியார்
மேதினியில்உள்ளவரோ திருப்புவதுபாரே. 21

506. அரசுவேளையில் வேர்பிடுங்கும் பலன்

பாரேநீஅரசனிட வேர்பிடுங்கிவைக்க
பசுமைஉள்ளதகடதனில் பொதிந்துகொண்டால்
காரேநீஉஞ்சிரசில் கட்டிஇடும்போது
சகலமுமேவசியமடா உன்னைவெல்வதாகும்
கோரேநீஇவ்வுலகில் சத்துருவும்இல்லை
கொங்கணவர்இவ்வேரை மெச்சிக்கொண்டார்
காரேநீஎரும்புகடையானை தலைஎல்லாம்
கைவசமேஆகுமென்று முனிவர்சொன்னார்பாரே. 22

507. தூக்கம்வேளையில் வேர்பிடுங்கும் பலன்

பாரப்பாஉறக்கத்தில்வேர் பிடுங்கிக்கொண்டால்
பகையானஎதிரியுமே வெல்வதும்இல்லை
நேரப்பாஎதிர்த்தவனை ஜெயம்செய்யல்ஆகும்
நேமித்தகாரியங்கள் நிமிஷத்தில்வெல்லும்
கூரப்பாஇவ்வேளை கொடுமைநினையாதே
கூற்றிவந்தான்வேறில்லை கொலைகள்வரும்தோஷம்
சாரப்பாமனுவுகள்மேல் வெகுதயவுசெய்து
தண்மையுள்ளதொழில் செய்யவேளைஅதுபாரே. 23

508. மரணவேளையில் வேர்பிடுங்கும் பலன்

வேலைஎன்னமரணம்வேர் பிடுங்கவென்றால்
வெல்லுவதுஎதிரியுமோ வெல்லுவதும்இல்லை
காளைஎன்றசத்துருவும் இல்லைஇல்லை
சண்டாளநேரமது செயிப்பதுவும்இல்லை
பாளைஎன்றஉறவுபொருள் உயிர்ச்சேதம்ஆகும்
பண்பானதுயரமது வெகுகொடுமைஆகும்
காளைஎன்றஎதிரின்மேல் ஏறும்ஈசன்
கடாக்ஷம்வைத்துப்பார்த்தாலும் திருப்பரிதுபாரே. 24

509. பட்சிகளின் வலு அறிதல்

அறிதாகுஉலகுதனில் சத்துருவும்இல்லை
அப்பனேபஞ்சபட்சி அறிந்தவர்கள்முன்னே
குறியானசிங்கத்தின் முன்னேநின்று
கூத்தாடுமோநரியும் குலாவுமோசொல்லு
தெறியானஅஷ்டகன்ம சாஸ்திரங்கள்எல்லாம்
வெறும்பாண்டம்பட்சியுட சாஸ்திரந்தான்அப்பா

சரியான தடியென்று பதினெண்பேரும்
சகலருமேமெச்சினரே பட்சிஅதுபாரே. 25

510. இதுவுமது

பட்சியென்றபஞ்சபட்சி வலுவைஎன்னல்
பகர்வதற்குஎன்னாலே முடியாதப்பா
கொச்சிஎன்றசத்துருநாள் வலுவோயில்லே
கொடுமையுள்ளநாள் அதிலே பட்சிபகைஆனல்
மெச்சிஎன்றசத்துருவை அழித்துப்போடும்
மேலானபட்சியெல்லாங் கூடிக்கொண்டு
அச்சிஎன்றமித்துருவும் இருந்தால்என்ன
அப்பனேபட்சிவலு இல்லைத்தானே. 26

511. படுபட்சி வலுஅறிதல்

தானென்றபடுபட்சி நாளையிலேஅப்பா
தனக்குவலுஅற்றுவிடும் மித்துருவும்இல்லை
தேனென்றசெய்காரியம் தவக்கம்ஆகும்
ஜெயமாகமாட்டாது ஒருநாளும்தான்
கோனென்றபட்சிஅது கொடும்பாம்பில்சூரியன்
கொதித்துமனம்புண்ணுகி வாடுவதுபோலே
நானென்றஆணுவங்கள் எதுவில்லாமல்
நடுங்குவார்சத்துருநாள் கொடுமைஆமே. 27

512. இதுவுமது

கொடுமையுடநாளையிலே பட்சியுடவலுவை
குறிப்பதுவும்வெகுசுளுவு வெகுளிதுபாரு
அடுமைஎன்றுவந்தவர்க்கு இந்தநாளில்
அநியாயங்கொடுமைகளை அநுசரிக்கவேண்டாம்
கெடுமதியும்கண்ணுக்குத் தோன்றுதுபாரு
கேடுவரும்போதுமதி கெட்டுவரும்முன்னே
கடுகளவும்பாவமது மனதாய்ச்செய்தால்
கண்கெட்டுகுலநாசம் அற்றுவிடும்பாரே. 28

513. சீஷனது சன்மார்க்கம் அறிதல்

அற்றுவிடும்பட்சிவித்தை சொன்னுலும்தோஷம்
அப்பனேமனதறிந்து சொல்லவேணும்
கத்திவிடுபனிரெண்டு வருஷம்காத்தால்
கைபாகம்செய்முறைகள் கருச்சொல்லாதே
கொத்திவிடும்அவனுடைய குணத்தைக்கண்டு
கூறுவாய்ஜாலத்தில் சொல்லிவைநீ

பற்றிவிடுமெனதைத்தான் அறியாவிட்டால்
பழிகாராயித்தொழிலைச் சொல்லொண்ணாதே. 29

514. இதுவுமது

ஒண்ணாதபட்சிவித்தை பொல்லாதப்பா
உத்தமனே அவன்செய்யுங் குணத்தைக்கண்டு
எண்ணாததொழில்செய்தால் பாவம்இல்லை
என்மகனே அவனுடைய குணத்தைப்பாரு
தண்ணாதேதொழிலை அங்கே சொல்லிவிடாதே
காட்டாதேகருக்குருவும் கருமிக்கப்பா
விண்ணாதேஇடிவிழுந்து தலைதெறித்துப்போகும்
மேதினியில்அவன்குணத்தை கண்டித்தேனே. 30

515. இதுவுமது

தேனென்றபஞ்சபட்சி முறையைத்தானும்
செய்யாதேஉலகிலுள்ள மாந்தர்க்கையா
கானென்றகசடுள்ள மனிதர்க்கையா
காட்டாதேஉன்னுடைய கபாலம்போகும்
மானென்றமனதறிந்து சொல்லவேணும்
மகத்தான பாவங்கள் வந்துசூழும்
ஆணென்றஆணுவத்தை அடக்கினோர்க்கு
அதினுடையசூக்ஷத்தை அறிவிப்பாயே. 31

516. எதிரியை மடக்கும் வகை

அறிவிப்பாய்கன்னியுட நூல்சொல்லாதே
அப்பனேகருவை அங்கே வெளிவிடாதே
நிருவித்தசக்கரத்தை வெளிவிள்ளாதே
நின்றாடும்அக்ஷரத்தை நினைவில்நினையாதே
மறுவித்தமூலிகையின் வகைக்காட்டாதே
வந்துநின்றசத்துரு மித்துருசொல்லாதே
கருவித்தகோரமது காட்டொண்ணாது
காட்டினால்பிழைஆவான் கண்டுபாரே. 32

517. இதுவுமது

பாரடாமூலிகைக்கு சாபம்நீக்கி
பண்பானகன்னிநூல் காப்புகட்டி
வாரடாசக்கரத்தை அதிலேவைத்து
வளமான அட்சரத்தை மாறிப்போடு
சேரடாகருவைஅங்கே அட்சரத்தில்வைத்தால்
செலுத்தும்பார்எதிரிஉயிர் தீரும்பாரு

ஆரடா அறிவார்கள் சூக்ஷந்தன்னை
அறிந்தவன் தான் சித்தனென்றேபேரும் ஆச்சே. 33

518. சித்தன்பெருமை

சித்தனென்றால்மன தடக்கம் மிக்கவேணும்
ஜெகஜாலக்கூத்தறிந்து தெளியவேணும்
பத்தனென்றால்வாசியிலே காணவேணும்
பழியான இத்தொழிலை செய்தாயானால்
கர்த்தனெனும்சிவனுடைய சாபம்நின்று
கருவருக்கும்இருபத்தோர் தலைமுறைக்கும்
வர்த்தனென்றால்தன்னுயிர்போல் மன்னுயிரைப்பார்த்து
வழுவாமல்குருபதத்தை மனதில்வையே. 34

519. தேவிபூசை

வையப்பாசத்துருநாள் அறிந்துகொண்டு
வகையாகதேவியுட பூசைசெய்து
நெய்யப்பாசுடலைசாம்பல் மேலேபூசி
ருத்திரன்போல்நிர்வாண ரூபங்கொண்டு
கொய்யப்பாகருவையிங்கே திலகம்போட்டு
குறித்தவன் தன்உடலிலே அட்சரத்தைவைத்து
செய்யப்பாகோடிவஸ்திரம் உடுத்திக்கொண்டு
திடப்படுத்துஉன்மனது தெளிவும்ஆச்சே. 35

520. ருத்திரர்கோபம்

ஆச்சப்பாஎதிரியுட பேரைச்சொல்லி
அப்பனேமூலிகைமுன் இருந்துகொண்டு
வாச்சப்பாவஸ்துடனே சுத்திவைத்து
வர்க்கவகைதூபங்கள் வளமாய்ச்செய்து
பாச்சப்பாஓர்மனமாய் இருந்துகொண்டு
பணிந்துதான்ருத்திரனை வணக்கம்செய்தால்
போச்சப்பாஎதிரியுட பேரும்போச்சு
பொல்லாதருத்திரர்கோபம் செலுத்துவாரே. 36

521. சோதித்தறிதல்

வாருமென்றுஉலகத்தில் உள்ளபேரை
மனஞ்சோதிநெடுநாள்மனம் அறியாமல்செய்தால்
பாருமென்றுபாவத்துக் குள்ளாகவேணும்
பழிகாரர்இவர்கள்செய் திடுவார்தோஷம்
ஆமென்றஅரவவிஷம் இதற்கொவ்வாது
ஆடலாம்அஷ்டகன்மம் அறுபத்தினாலும்

ஷரென்றபட்சியுட தொழிலைச்செய்தால்
ஒருவரால்திரும்பும்வகை அறியார்பாரே. 37

522. இதுவுமது

அறியாமல்சித்தரெல்லாம் கூடிக்கொண்டு
அடங்கினார்குகைதனிலே அதைநான்கண்டு
நெறியானகலியோர்க்கு வேணும்என்று
நின்றனடாவெகுகாலம் தவசில்நானும்
குறியானபட்சியுட சாஸ்திரத்தைவாங்கி
கொடுத்துவிட்டேன் கொங்கணவர்கொட்டினார்பார்
பரியாசமென்றுசொல்ல நினைப்போர்க்கெல்லாம்
பலியாதுபட்சிவித்தை பண்புள்ளோர்க்கே. 38

523. பலியாதவர் அடையுங்குணம்

பலியாதுமனஒருமை கொண்டோன் ஆகில்
பலிக்குமஅடாதகஷ்த்தில் மதியில்லாவிட்டால்
குலியாதுவினைஅறுத்த பெரியோர்தன்னை
குலமதிலேகுருவென்றும் பணியானுக்கும்
பழியாசைதன் னினம்போல்
மன்னுயிரைதன்னுயிர்போல் வணங்காதார்க்கும்
கலியானகலியுகத்தில் கொடுமையுள்ள
கசடருக்கும்பலியாது கணமும்பாரே. 39

524. பலிப்பவர்களின் பெருமை

கண்டுபார்பலிப்பதுவே ஆறுக்கானல்
கபடமதுதான்நீக்கி ஓர்மனதுகொண்டு
வண்டுபோல்குருபதத்தைப் பணிந்தோர்க்கையர்
மனதிலேஎள்ளளவேனும் கோபந்தன்னில்
தொண்டர்கள்உலகத்தில் வணக்கஞ்செய்து
துற்புத்திபொருளாசை தள்ளினோர்க்கும்
சண்டாளன்என்றபேர் ஆகாதப்பா
தண்மையுள்ளபுருஷருக்கு பலிக்கும்பாரே. 40

525. இதுவுமது

பாரடாரோமரிஷி சொன்னவாக்கும்
பழுதொருநாள்வாராது பற்றிப்பாரு
தேரடாசாஸ்திரத்தின் உண்மைகண்டு
தெளிவாகசொன்னதல்லால் மற்றோர்க்கில்லை
ஆரடாஅறிவார்கள் சூக்ஷந்தன்னை
அறிவதுதான்குருவாக்கால் அறியவேணும்

கோரடாவகையாகக் கொட்டினேன்பார்
கொடுத்துவிடாய்சாஸ்திரத்தை அவர்குணத்தைக்கேளே.

526. மாரணம்

கேளடாள திரியுமே நடந்தபின்பு
கீழ்நோக்கித்தான்எடுத்து தேவிமுன்பு
வாளடா அக்ஷரந்தான் ஆயிரத்தெட்டோது
வளமாகஅதைஎடுத்து பானஞ்சென்று
நாளடா தினமரணம் வேளைபார்த்து
நசியென்றதலைதெற்காய் நாரணியைஓது
பாழடாபோகாது அவனுயிரும்போகும்
பரமனுடகிருபையினாற் பலிக்கும்பாரே. 42

527. இதுவுமது

பலிக்குமென்றுஇத்தொழிலைச் செய்தால்பாவம்
புகைவந்தால்மனம்பொறுத்து கோபம்தள்ளி
வலிக்குமென்று தன்னுயிர்போல் மன்னுயிரைப்பார்த்து
மனம்புத்திஆங்காரம் மனதடக்கஞ்செய்து
கெலிக்குமென்றுஉன்மனது தள்ளாவிட்டால்
கேளடாநடைஉறக்கம் வேளைபார்த்து
சலிக்கவேஎ திரியைத்தான் படுக்கப்போடு
சண்டாளபிரமலபி வரைக்கும்பாரே. 43

528. இதுவுமது

பாரேநீபச்சிலைக்கு காப்புகட்டி
பண்பானகருத்தொட்டி அக்ஷரங்களோதி
நேரேநீநாள்பார்த்து வேளைகண்டு
ஜெயந்தரவேணுமென்று குருவைப்போற்றி
கோரேநீஓர்மனதால் உருவைப்பார்த்து
கொடுமையுள்ளசத்துருவால் வேரைவாங்கி
தேரேநீசுடலைஎன்ற சாம்பல்மேலே
செய்திடுவாய்கொள்ளிதனை அதின்மேல்வையே. 44

529. இதுவுமது

வைத்தபின்புஅதின்மேலே சாம்பல்போட்டு
வளமாகமூதேவிமுன்னே வைத்துப்போற்றி
நைந்திடுவான்அதைஎடுத்து காளிகோஷ்டம்
நன்றானஐயனுட ஆலயத்தில்வைக்க
மொய்த்திடுவாய்முச்சந்தி பாதைபார்த்து
முனையானநிசிவேளை நால்வேளையொன்றில்லை

வைத்திடுவாய்பிரமலபி உள்ளமட்டும்
வாட்டுமடாசாகாத பிணந்தான்பாரே. 45

530. தன்னையடையும் பீடை விலக்க

பாரடாஉன்னிடத்தில் கருமபீடை
படராமல்பக்ஷம்ஒன்று நீரில்ஒன்று
கோரடாதேவியைத்தான் தொழுதுபோற்றி
கொடுமைஎன்ற பாவங்கள் அணுகாதுபாரு
வாரடாமுகத்தோனை பணிந்துகொண்டு
வர்க்கவகைநைவேத்தியம் வளமாச்செய்து
தேரடாபிராமணருக்கு தானஞ்செய்து
சிறுபிள்ளைகன்னிக்கு உபசாரஞ்செய்யே. 46

531. இதுவுமது

செய்திடுவாய்உன்மனதில் பீடைஅணுகாது
திட்டமானபட்சி அக்ஷரத்தைஓது
நெய்திடும்பார்அவனுயிரும் நாள்குறையுமட்டும்
நன்றல்லவெகுபாவம் கொடுமைஅதுமெத்த
நொய்திடும்பார்இத்தொழிலை உலகத்தோர்க்கு
நோக்காதமனதறிந்து நுணுக்கம்செய்யாதே
வைதிடுவார்உலகத்தோர் குருத்துரோகிஎன்று
வழுத்தாமல்பிறஜனங்கள் நல்லவன்றுனென்றே. 47

532. நற்புத்தி

நன்றல்லோஉலகத்தார் சொல்லவேணும்
எளியவன்போல்நாட்டிலுள்ளோர் அறியவேணும்
நன்றல்லஇத்தொழிலை கண்டபேர்கள்
நடுங்குவார்பாவபுண்ணியம் என்றுசொல்லி
தொண்டுசெய்தசிஷனுக்கு சொல்லிடாதே
சொல்லுவதுசூக்ஷமாய் சொல்லிவைநீ
பண்டுதான்வெகுகாலம் காத்தபேர்க்கு
பழக்கத்தில்அவன்மனதை பார்த்துசொல்லே. 48

533. இதுவுமது

சொல்லுவதுமைத்ததெல்லாம் சொல்லிவைநீ
சொல்வதேகன்னியுட நூல்சொல்லாதே
வெல்லுவதுஅக்ஷரந்தான் வெளிவிடாதே
விரோதிஎன்றகருவைஅங்கே வெளிகாட்டாதே
கொல்லுவது சூட்சந்தான் அநேகமுண்டு
கொடுமையுள்ளநேரமது குணங்காட்டாதே

செல்லுவதுமற்றதெல்லாம் சொல்லிவைநீ
சண்டாளர்மன தறிந்து சூக்ஷம்சொல்லே. 49

534. இதுவுமது

சூக்ஷமென்றபஞ்சபட்சி தொழிலைத்தானும்
சொல்லாதேஉலகிலுள்ள மாந்தர்க்கையா
ஆட்சியென்றமனேன்மணியாள் சாபம்நின்று
அவன்குலத்தைஅழித்திடும்பார் சொன்னல்தோஷம்
காட்சிஎன்றஉலகத்தில் நடக்கும்காட்சி
கண்டுமனம்தெளிவதற்கு சொன்னேன்சூக்ஷம்
பட்சியென்றகன்மவினைக் காளாகாதே
பழிகாரமன தடங்கி அறிவில்நில்லே. 50

535. இதுவுமது

அறிதானசாஸ்திரத்தை உலகில்உள்ளோர்வந்
தடுத்தாலும்அவர்குணத்தை அறிந்துபார்த்து
குறியானகுணங்கள்எல்லாம் மறைத்துவைத்து
கூறுவாய்வெகுகாலம் குறிசொல்லாதே
பரையானஈஸ்வரியாள் சாபம்வந்து
பலிக்குமடாஒருவருந் தாக்கொண்ணது
நரிதானநாய்ஜெனன மெடுத்துஅலையாதே
நல்லோர்கள்மன தறிந்து கூறுவாயே. 51

536. இதுவுமது

கூறுவாய்கலியுகத்தில் பழிக்கஞ்சார்கள்
கொடுமையென்றதொழிலென்று நினைத்திடார்கள்
சாருவார்அவர்வயிறு பிழைக்கவேண்டி
சண்டாளதத்துவங்கள் பேசிக்கொண்டு
மீருவார்கற்றோரை பணிந்துகேட்பான்
வெகுளியால்நூன்முறையை சொல்லிடாதே
ஆறுவார்அவர்குணத்தை அறிந்துநீயும்
அப்பவல்லோபட்சியுட சுருக்கம்சொல்லே. 52

537. மரணமூல கன்னிநூல்

சுருக்கமென்றமூலிகைமுன் னிருந்துகொண்டு
சொல்லிவிடும்சாபத்தை நிவர்த்திசெய்து
வருக்கமென்றதலைச்சனுட நூலைவாங்கி
வருவாமல்மித்துருவின் முகத்தைநோக்கி
நெருக்கமென்றசத்துருவை விரல்படாமல்
நினைவாகக்காப்பிட்டு வஸ்துசுத்திரூபம்காட்டி

உருவினுடசக்கரத்தை முன்புவைத்து
முனையாகக்குறித்தபட்சி எழுத்தைவிட்டுஓதே. 53

538.

ஓதியேகுறித்தயிடம் பார்த்துக்கொண்டு
ஓதுவாய்பட்சியுட கருவைத்தொட்டு
சோதியாய்நின்றதொரு வாலைபூசை
சூட்டியேகுறித்திடத்தில் முள்கொண்டுகுத்து
போதவர்கள்வாதனைதான் மெத்தஉண்டுமகனே
புகலக்கேள்வருத்தமிக்க வேணுமென்றால்
மோதியேகுறித்திடத்தை பிளந்துபோடு
மோசம்வரும்அந்திடத்தில் மோசந்தானே. 54

539. இதுவுமது

மோசமடாவெகுமோசம் மரணமூலி
மூலிகைமுன்னிருந்துகொண்டு தூபம்தாக்கி
பாசமடாகன்னிநூல் காப்புக்கட்டி
பகையானபட்சியுட சக்கரத்தைவைத்து
தோஷமடாஅக்ஷரத்தை மேல்நோக்கிஓது
சொல்லொண்ணக்கருத்தொட்டு நேரம்பார்த்து
நேசமடாமித்துருவை சேர்த்துக்கொண்டு
நிர்வாணரூபமதாய்நின்று வேரைவாங்கே. 55

540. இதுவுமது

வாங்கியேஎதிரியுமே கடந்தால்நன்று
மக்களேஇல்லாவிட்டால் வலதுகால்மண்ணை
ஓங்கியவேர்மண்ணுங் கூடச்சேர்த்து
உத்தமனேமயானத்தில் வைத்துக்கொண்டு
தாங்கியதோர்தேவிக்கு பூசைசெய்து
சனியென்றபச்சிலையை சுட்டாயானல்
பாங்கியேசுட்டதொரு ஜாமந்தன்னில்
பழுதாகும்எதிரிஉடல் பாவம்ஆச்சே. 56

541. இரக்கம் கொள்ளல்

பாவம்என்றுஉன்மனது நினைந்தாலுல்
படுக்கவேபோடுகொஞ்சம் நாளைக்கப்பா
கோபமென்றகொடுமையைத்தான் நினைக்கொண்ணாது
கொல்லுவதுவெகுபாவம் கொடுமைஆமே
சாவதுதான் திண்ணமென்று உயிர்வதைசெய்யே
சண்டாளர்தன்னுயிர்போல் மன்னுயிரைப்பாருதே

போவதுதான்பச்சிலையைப் புதைத்துப்போட்டால்
போகுமேஉயிர்குறைந்து போகும்பாரே. 57

542. இதுவுமது

போகுமேஉயிரைவதை செய்தாயானால்
பொல்லாதகன்மவினை சூழும்சூழும்
வேகும்டாஉன்சடலம் வெள்இடிதான்வீழும்
வீணனபேர்களுக்கு தொழில்சொல்லாதே
ஆகுமடாமனோன்மணியாள் சாபந்தானும்
அப்பனேபட்சியுட தொழிலைப்பார்த்து
ஏகுமடாமன தடக்கம் செய்துகொண்டு
என்மகனேரோமனுட நூல்பலிக்கும்பாரே. 58

543. இதுவுமது

பலிக்குமடாசித்தருட சாபம்நின்று
பகையாதேஉமையாள்மேல் ஆணைஆணை
கெலிக்கும்அப்பாபட்சிவித்தைக் கருக்குருவும்கண்டால்
சேகரத்தில்பரக்கும்வித்தை இதற்கொவ்வாது
வலிக்கும்அப்பாபுண்ணதிலே காகம்குதித்த
வருத்தம்ரொம்பஅதுபோல பக்ஷிவித்தைஅப்பா
சலிக்கும்அப்பாசீஷருட மனதறிந்துசொல்லு
சண்டாளன்என்றக்கால் சொல்லொண்ணாதே. 59

544. இதுவுமது

சொல்லாதேபக்ஷியுட சூக்ஷம்தன்னை
சொல்லிவிட்டால்வெகுகொடுமை பாவம்ரொம்ப
வல்லாண்மைஉள்ளவர்கள் உலகில்உண்டு
வந்தடுத்துஉன்மனதை மயக்கம்செய்வார்
பொல்லாதகருமிகளை மனம்சோதித்து
புத்தியுள்ளசீஷர்மனம் அறிந்தாலையா
கொல்லாதேஎன்றுசொல்லி பரவசங்கள்வாங்கி
கூறுவாய்பட்சியுட சூக்ஷந்தானே. 60

மூலிகைப் படலம் முற்றிற்று.

ஞானச் சுருக்கப் படலம்

545.

தானென்றகன்னிநூல் தலைச்சன் ஆகும்
சண்டாளகருவல்லோ இனங்கள் ஆகும்
தேனென்றசக்கரங்கள் உடலதாகும்
திறமானஅக்ஷரமும் காரணமாய்முடியும்

வாளென்றமூலிகையை பிடுங்கொண்ணாது
மக்களேமற்றதெல்லாம் செய்துபாராய்
ஏனென்றுபேசுமடாமித்துருஉன்செயலால் என்மகனேநேரம்
அங்கேசேர்ந்துபோனால் பக்ஷிவித்தைபலியாதே. 1

546. பக்ஷிவித்தை பலிப்பவர்களின் குணம்

பட்சிவித்தைபலிப்பவர்தன் குணத்தைக்கேளு
பார்தனிலேபொய்சொல்லான் குருவார்த்தைமறவான்
கொச்சியென்றகோபகுணம் மனதில்லையான்
கொடுமைஉள்ளசினமில்லான் வஞ்சகங்கள்பேசான்
மெச்சிஎன்றஎவ்வுயிர்க்கும் இரங்குவானும்
மேதினியில்வெகுஜனங்கள் நல்லோனென்பார்
பக்ஷிவித்தைபலியாமல் போறதில்லை
பாருலகில்அரிதான வித்தைதானே. 2

547. இதுவுமது

வித்தையிலேஅதிகவித்தை பட்சிவித்தை
மேலானசித்தர்களும் மறைத்துவைத்தார்
கொத்தாகநான்வெளியாய்ப் புலம்பிவைத்தேன்
குருபதத்தைப்பணிந்தோர்க்கு பலிக்கும்பாரு
சத்தானஎரும்புகடை யானைத்தலைமுழுதும்
தானவனாய்நின்றபட்சி வித்தைஅப்பா
மற்றதெல்லாம்பால்போலே ஆகும்சாஸ்திரம்
மணியென்றபஞ்சபட்சி நெய்யும்ஆச்சே. 3

548. இதுவுமது

நெய்யென்றசாஸ்திரத்தை ரோமன்நன்றாய்
நிச்சயமாய்குருபதத்தை பணிந்துபோற்றி
நெய்யென்றவாசிநிலை அறியச்சொன்னேன்
மேலானதொழில்களுக்கு இதுவேவேணும்
பொய்யென்றுநினைத்தவர்க்கு பலிதம்ஆகா
புத்தியில்லாப்பாவிகள் இதைப்பாராவிட்டால்
கையென்றகையதுவும் ஆத்துமாவை
கடாட்சித்தகதைஅதுபோல் ஆகுந்தானே. 4

549. இதுவுமது

ஆகுமேபட்சியுட சாஸ்திரத்தைப்பார்த்து
அப்பனேபெரியோரைப் பணிந்துபோற்றி

கோறுமேஅவர்குணம்போல்: நடத்திருக்கால்
கொண்டுசெல்லும்வெகுகாலம் வாழலாம்பார்
காருமேவேறேயொரு சாஸ்திரத்தைப்பார்த்து
கலங்குவதுமெய்அலது தெளிவதுவும்இல்லை
பாருமேபட்சியுட சாஸ்திரந்தான்
பண்பானதடியென்று பணிந்துபாரே. 5

550. இதுவுமது

பணிந்துபார்மைத்தொரு சாஸ்திரம்எல்லாம்வெறும்
பாண்டமேஅல்லாமல் வழியோஇல்லை
துணிந்துபார்பட்சியிலே எவ்வளவேனும்
சொல்குறைச்சல் வாராதுபழுதொன்றில்லை
கணிந்துபார்அதினுடைய சூக்ஷந்தன்னை
கண்டவர்கள்மனிதரென்று சொல்லொண்ணாது
தணிந்துபார்அவர்பதத்தை பணிந்துபோற்றி
தன்மையுள்ளபொருள்எல்லாம் அறிந்துகொள்ளே. 6

551. இதுவுமது

அறிந்துகொண்டுஉலகமதில் தணிந்துபேசி
அப்பனேகற்றோரை தொண்டுபண்ணி
தெரிந்துகொண்டுபூமிதன்னில் நடக்கும்காட்சி
சீஷரைப்போல்வெகுவணக்கம் செய்துபோற்றி
சொரிந்துகொண்டபாயதுபோல் உலகவாழ்க்கை
துன்பமதில்அணுகாமல் திருநீற்றுகழிச்சிபோலே
வரிந்துகொண்டு ஞானத்தின்வன்மைகண்டு
மக்களேகாயசித்தி வழக்கஞ்செய்யே. 7

552. இதுவுமது

செய்திடுவாய்ஞானசித்தி யோகசித்தி
சொல்லுவதுசிவயோகி பரமயோகி
வைதிடும்பார்உலகத்தில் வாழ்க்கைபோக்கி
மக்களேமனுக்கள்எல்லாம் வணங்கல்ஆச்சு
செய்திடும்பார்உலகத்தில் உலகவாழ்க்கை
திசையாளும்மன்னர்எல்லாம் உன்தெரிசனத்தைக்காண
பொய்திடும்பார் அவர்களிடஉறவுண்ணாதே
மொய்குழலாள் வாலையுடஉறவுநன்றே. 8

553. இதுவுமது

நானென்றபட்சியுட சாஸ்திரத்தையப்பா
நாட்டிலேஉலகத்தில் வணக்கஞ்செய்தால்

உண்டென்றதொழிலை அங்கேபிரிவிப்பார்கள்
உத்தமனேமனதறிந்து உரைக்கவேணும்
கண்டார்யென்றபேர்க்கெல்லாம் உரைத்தாயானால்
கழுதையென்றஜெனன மதுபிறக்கல்ஆகும்
வண்டென்றவாலைமேல் ஆணை ஆணை
மக்களேசாஸ்திரத்தின் வகைசொல்லாதே. 9

554. இதுவுமது

சொல்லாதேஉலகிலுள்ள மாந்தர்க்கையா
திறமானகாயசித்தி செய்துகொண்டால்
பொல்லாதபவயோகி ஞானயோகி
புகழ்பெற்றஜடத்தை அறியாயோகி
நில்லாதவாசியைத்தான் நிறுத்தும்யோகி
நிலையானகற்பமுண்டு தேரும்யோகி
கொள்ளாமல்உடலுயிரை நிறுத்தினோர்க்கு
கூறுவாய்பாவிகளே குறித்துத்தள்ளே. 10

555. இதுவுமது

தள்ளுவதுசிஷருட மனதைக்கண்டு
தயங்காமல்ஓர்மனதாய் நிற்பானாகில்
உள்ளபொருள்உள்ளதெல்லாம் உனக்கோஈவேன்
உரைத்திட்டேன்உமைஆணை உண்மைஉண்மை
தெள்ளுமணிபஞ்சபட்சி வித்தைஅப்பா
ஜெகத்திலேஒருவருக்கும் சொல்லவேண்டாம்
தள்ளிவிடுவாலையுட சாபந்தான்வந்து
தலைதெரித்துபோகும்என்று மனதில்எண்ணே. 11

556. இதுவுமது

மனதில்எண்ணிசத்தியமாய் இருந்தாயானால்
வாக்கினால்சொன்னதெல்லாம் பலிக்கும்பாரு
கனிவுகொண்டுசாஸ்திரத்தில் வினையம்வைத்து
கைப்பாகம்செய்பாகம் குருவாக்கால்அறிந்து
தனமென்றபொருள்தேடி ஈந்தாலுந்தான்
மக்களேஆக்கினையாம் தோஷம்தோஷம்
தணிவுகொண்டுஉலகத்தில் வணக்கஞ்செய்து
தனித்திருந்துஅறிவதுதான் பெரிதாம்பாரே. 12

557. இதுவுமது

பெரிதானபஞ்சபட்சி சாஸ்திரத்தை
பேருலகில்சொன்னதனால் வருவதேது

அரிதானசாஸ்திரத்தை வெளிவிடாதே
அப்பனேபதினெண்பேர் சாபந்தானும்
குறியாகவந்துவிடும் சொன்னேன் அப்பா
குருவானசாஸ்திரத்தைக் கொடுக்கொண்ணது
தெரியாதுஇதனுடைய சாஸ்திரந்தானும்
செய்யவில்லையான்வெளியாய் செப்பினேனே. 13

558. இதுவுமது

செப்பினதோர்சாஸ்திரத்தை உலகமீதில்
ஜெடமறியாமாந்தருக்கு சொன்னயானல்
தப்பில்லைபதினெண்பேர் சாபந்தானும்
தன்குலத்தைநாசமது செய்யும்பாரு
கொப்புதனில்குறித்துவிளை யாடும்ஜென்மம்
குரங்கதுபோல்ஆகுமப்பா சொன்னேன்யானும்
இப்புவியில்வாலையுட சாபம்அப்பா
ஈடாவதொருபோதும் இல்லைத்தானே. 14

559. இதுவுமது

இல்லைஎன்றுசொல்லவும் உண்மைஉண்மை
என்மகனேசாஸ்திரத்தை கொடுக்கொண்ணது
தொல்லைவருஉமையாள்மேல் ஆணை ஆணை
சொன்னதொருவார்த்தைதனை தட்டவேண்டாம்
சள்ளையென்றதாய்தந்தைமேல் ஆணைஆணை
தனக்குவந்தபெண்பிள்ளை தன்மேல்ஆணை
வெல்லுவதுஉன்குலத்தை காக்கும்தெய்வம்
மேலாணைசொல்லாதே தொழில்பொல்லாதே. 15

560. இதுவுமது

தொழில்செய்யும்ஜோசியங்கள் சொல்லும்போதும்
தொடுத்திடுவாய்விநாயகரைப் பூசைபண்ணி
கழிவுசொல்லிதள்ளாத பாவம்பாவம்
கண்டபடிகுறிகுணங்கள் நன்றாய்ச்சொல்லு
வழிசொல்லிநீஉறுதி யாகக்கொண்டால்
வந்ததோர்பீடையெல்லாம் விலகிப்போகும்
தெளிவுசொல்நன்மைதின்மை திறமாய்ச்சொல்லி
செய்திடுவாய்வாலையுட பூசைதானே. 16

561. இதுவுமது

பூசைதனைமறவாதே ஞானமறவாதே
பொல்லாதபஞ்சகர்த்தாள் அஞ்சுபேரை

நேசம்வைத்துமனதுருகி யாகக்கொண்டு
நிலைத்தவொருசத்திசிவம் பூசைபண்ணி
பாசம்வைத்துஉன்னுயிர்க்கு பழிதேடாதே
பழிகாரசிவயோகம் பாதைகாணும்
ஆசைவைத்துபெண்மேலே மோகங்கொண்ட
அன்புஅதுபோலிருந்தால் பலிக்கும்பாரே. 17

562. இதுவுமது

பலிக்குமடாபட்சியிலே தொழிலைச்செய்தால்
பழிசெய்யத்தானிருந்தால் நிவர்த்திகேளு
கெலிக்குமடாஎக்கியங்கள் செய்யவேணும்
கேள்மகனேபச்சிலையும் தழையவேணும்
சொலிக்குமடாவாலையுட பூசைவேணும்
சொர்னமதுவஸ்திரங்கள் தானம்வேணும்
அளிக்குமடாமனமகிழ கொடுக்கவேணும்
அப்போவல்லோகன்மம்அங்கே தொலையும்பாரே. 18

563. இதுவுமது

தொலையுமேசிலவுசெய் மனதுநொக்தால்
தொலைத்திடுமேகன்மம்அது தொலைக்கொண்ணாது
அலையுமேஉன்சடலம் அழிந்துபோகும்
அப்பனே ஆராலே திரும்பக்கூடும்
வலையிலேஅகப்பட்ட மானைப்போலே
வளர்ந்திடுமேகன்மமென்ற பீடைதானும்
சிலையதுபோல்இருக்காமல் செலவுசெய்து
திருப்புவதுஅரிதான வித்தைதானே. 19

564. இதுவுமது

அரிதாகும்திருப்புதற்கு வெளியாய்ச்சொன்னேன்
அப்பனே திருப்பினவன் அவனேசித்தன்
குறியானதேவியுட பூசைமறவாதே
கொடுமையுள்ளபச்சிலையும் தழையும்வேணும்
வழியானதருமமது செய்யவேணும்
மக்களேவினையம்வைத்து பார்க்கவேணும்
நெறியானநிலையறிந்து ஞானமார்க்கம்
நிலைக்குமடாபட்சியுட கருத்தோணும்பாரே. 20

565. இதுவுமது

தோணுமேஉலகிலுள்ள மாந்தர்க்கையா
தோணுவதுகோடியிலே ஒருவன்உண்டு

காணுமேகருக்குருவும் காணுதுபாரு
கடினமடாஅவன்மனது கலக்கும்போது
பேணுமோசாஸ்திரத்தைப் பேணர்பாரு
புல்லறிவுகொண்ட சென்மப்பேயர்மெத்த
நாணுமேவீணுகப் புலம்பிச்சொன்னேன்
நலமானசாஸ்திரந்தான் சொலிக்கும்பாரே. 21

566. இதுவுமது

வெளிக்குவிடாய்சொன்னதொரு சாபமெல்லாம்
வீணுகப்போகாது அனுபவிக்கவேணும்
துளிக்குமடாஉன்குலமோ அழிந்துபோகும்
சொல்லாதபீடையது தொலையும்பாரே
வழியானமனதுடனே கண்டுசொல்லு
வகையாகப்பாழ்நரகில் வீழாதேசொன்னேன்
களிவிடாய்தள்ளிவரு சித்திமுத்திஉண்டு
கற்போலேநீயிருந்து சாதிப்பாயே. 22

567. இதுவுமது

சாதிப்பாய்அதினலே மோக்ஷமுண்டு
தள்ளிவிடுகன்மிகளை சேர்க்கவேண்டாம்
சோதிப்பாய்அவன்மனதை நெடுநாட்கொண்டு
சொல்லாதசூக்ஷமெல்லாம் மறைத்துவைத்து
போதிப்பாய்ஞானமெல்லாம் பூண்டபின்பு
போல்லாதபக்ஷிவித்தை சொல்லிவைநீ
ஆதிப்பாய்கருக்குருவும் வெளியாய்ச்சொன்னேன்
அறிவதுதான்வெகுநினைவாய் பட்சிஅறவதுவே. 23

ஞானச்சுருக்கப்படலம் முற்றிற்று.

கருமானச்சுருக்கப் படலம்

568.

அறிவதுதான்முதல்விளக்கம் கன்னிநூலாம்
அப்பனேஅண்டமொடு புளியுங்கூட்டி
தெரிவதுதான் தயிலம்அது கருவும்ஆகும்
நிசமாகச்சொல்லிவைத்தேன் பாஷாணமைந்தும்
எரிவதுதான்ஐங்காதம் இதுவேயாகும்
என்னசொல்வேன்வெகுசுருக்கு இதுக்கொவ்வாது

முடிவதுதானொன்றுமில்லை எதிரிபேரைச்சொல்லி
முடிக்கினால்அக்ஷரத்தை எதிரிஉயிர்முடியும்பாரே. 1

569. இதுவுமது

முரிவதுவேபச்சிலைக்கு சாபம்நீக்கி
முனையான திரியொன்று நினைத்துக்கொண்டு
சடுதியிலேசக்கரத்தை இதிலேதாக்கி
சண்டாளஅக்ஷரத்தை அதிலேமாறி
சுருதியென்றகன்னிநூலை காப்புக்கட்டி
சொல்லாதஐங்காயக் கருவும்தொட்டு
பருதியென்றநேரமது அறிந்துமக்காள்
பழிகாரசத்துருவை விலக்கிவேரைவாங்கே. 2

570. இதுவுமது

வாங்குவதுநிருவாண ரூபங்கொண்டு
மக்களேவேர்அதுவை சுட்டிடாதே
ஏங்குவதுவேரைநீ புதைத்துப்போடு
என்மகனேபிரமலபி தட்டும்பாரு
ஓங்குவதுவேர்அதுவை பிடுங்கொண்ணாது
உத்தமனேநினைத்திடத்தில் கருவைத்தொட்டு
பாங்குபெறமுள்கொண்டு குத்தும்போது
பழுதாகும்அந்திடத்தில் பழுதாம்பாரே. 3

571. இதுவுமது

பழுதாகும்குறித்திடத்தைப் பிளந்துபோடு
பதைத்தஉயிர்பழுதாகும் உயிரும்போச்சு
நழுகாதேஎதிரியுமே இல்லைஇல்லை
நாடாதேவெகுகொடுமை பாவம்மிக்க
அழுதாலும்தீராது ஒருவர்அசைக்கொண்ணா
அப்பனேபச்சிலையை அறியவேணும்
தொழுதாலும்ஒருத்தரால் திருப்பொண்ணாது
தொடுகுறிபோல்சூக்ஷ்ம்அது சொன்னேன்பாரே. 4

572. இதுவுமது

சொன்னாரேசூரனை சம்மாரம்பண்ணி
சுப்பிரமண்ணியர்க்கல்லோ சிவன்உபதேசிப்பார்
விண்ணானசூரனை சம்மாரஞ்செய்து
வெகுகாலம்சென்றபின்பு குருமுனிக்குபதேசிப்பார்
கண்ணானகும்பமுனி பதினெண்பேர்க்கும்
கலந்துஉறவாகியல்லோ உபதேசித்தார்

நண்ணுகநான்வெளியாய்ப் பட்சிவித்தை
நாட்டினேன்உலகத்தில் நன்றாய்த்தானே. 5

573. இதுவுமது

நன்றென்றுஉலகமதில் சொன்னேன்சூக்ஷம்
நழுகாதேசத்தியமாய் எண்ணிக்கொண்டு
குன்றென்றகோபத்தை கொடுமைநினையாதே
குலநாசம்பிறப்பதரிது குலைக்கும்சென்மம்
வண்டென்றபட்சியல்லோ மதுவையுண்டு
வகையதுபோல்இதினுடைய சூக்ஷங்கண்டு
தொண்டென்றதொண்டர்கள்போல் உலகமீதில்
தோணுமல்வெகுநினைவாய் வாழ்வார்பாரே. 6

574. இதுவுமது

வாழ்வதுதான்போமது இருக்கொண்ணாது
மனதிலேவஞ்சகங்கள் பேசொண்ணாது
கோளதுவேஉலகமீதில் சொல்லொண்ணாது
கொடுமையுள்ளவஞ்சரிடம் சேரொண்ணாது
மீளாவதொழில்கொடுமை செய்யொண்ணாது
வெகுஜனங்கள்பாவியென்று நினைக்கொண்ணாது
ஆளுமேசத்தியமாய் இருந்துக்கொண்டால்
அப்பவல்லோபட்சிவித்தை பலிக்கும்பாரே. 7

575. இதுவுமது

பலிக்குமோகருக்குருவும் காணவேணும்
பழிகாரஅக்ஷரமும் பதியவேணும்
சொலிக்குமேஆசான்சொல் உறுதிவேணும்
சொன்னசொல்அணுவளவும் மறவாதிருக்கவேணும்
கெலிக்குமேஎத்தொழிலும் நினைத்ததெல்லாம்
கெடிகாரசீட்டுமுதல் இதற்கொவ்வாது
வலிக்குமேபட்சிவித்தை பொல்லாதப்பா
மகத்தானபாவிகட்கு சொல்லொண்ணாதே. 8

576. இதுவுமது

சொல்லொண்ணாவாழ் உண்டுவசியம்உண்டு
துயரமேஎவ்வளவேணும் தோணாதுபாரு
அள்ளொண்ணாஞானவிதி அமைக்கும்பாரு
ஆகைஎன்றபாவமது விலகிப்போகும்
துள்ளொண்ணாஉலகத்தில் கொடுத்ததெல்லாம்
சொற்குறைச்சல்வாராது பலிக்கும்பாரு

கள்ளொண்ணுதகபடமது அகத்தில்வைத்து
கற்றோர்க்குதொண்டுசெய்து கலந்துநில்லே. 9

577. இதுவுமது

நில்லென்றுசொல்லதுவே சத்தியம்சத்தியம்
நிலைக்குமடாநினைத்ததெல்லாம் சத்தியம்ஆகும்
சொல்லென்றசொல்பழுதே ஆகும்காலம்
தோணுதுபட்சிவித்தை பலிதம்இல்லை
கல்லென்றமனமுள்ளோர் காணும்வித்தை
கலந்துஉறவாடுவது வெகுளிபோலே
சொல்லென்றசொல்லதுவும் ஆகாதுபாரு
தண்மையுள்ளபுருஷரைப்போல் சார்ந்துபேசே. 10

578. இதுவுமது

பேசினதால்வருவதென்ன குறைவதென்ன
பெருமைபெற்றபட்சியுட தொழில்சொல்லாதே
காசினியில்வாழ்வதுதான் பிறர்தனகோஷ்டி
கலந்துஉறவாடாதே கலக்கந்தள்ளு
நேசம்வைத்துபேசிவிடு நிலைசொல்லாதே
நீபேசும்வார்த்தையது நிசமென்றெண்ணி
தோஷிகளும்போய்விடுவார் நடத்தில்நில்லு
சொன்னதினால்பாபம்வந்து சூழுமதானே. 11

579. இதுவுமது

சூழுமேஇருபத்தோர் தலைமுறைக்கும்
சூழுவதுஒருவரால் திருப்பொண்ணுது
மாளுமேஅவன்குலமும் அற்றுப்போகும்
மக்களேசிவசிந்தை மறக்கொண்ணுது
நாளுமேபக்ஷிகளின் கருவறிந்து
கலந்ததும்அவரவர்தன் பேரும்கண்டு
வாளுமேஅக்ஷரம்சொல்வேன் பிரித்துத்தானே
மக்களேஜெகத்தோர்க்கு காட்டொண்ணுதே. 12

580. இதுவுமது

காட்டாதேஉலகிலுள்ள மாந்தர்க்கப்பா
காட்டினல்சாபமது வந்துசேரும்
பூட்டாதேஉன்குலமும் அழிந்துபோகும்
புதுமையுள்ளபட்சிவித்தை பொல்லாதப்பா
நீட்டினல்பஞ்சத்திலே நெருப்புப்போலே
நீறிவிடும்உலகமெல்லாம் நிமிஷத்திற்றான்

சூட்டினுர்அரன் திருமால் அயன்கணேசன்
துணைவரென்றவேலவர்க்குச் சொல்லத்தானே. 13

581. பிருதிவியின் தொழில்

தானென்றபிருதிவிக்குத் தொழிலைச்செய்தால்
தயவானஅப்பெழுத்தைப் பிறித்துமாறு
தானென்றஅப்பதுவை மண்ணுஉண்ணும்
தள்ளாதமற்றெழுத்தை சேர்க்கொண்ணுது
வானென்றஆகாச எழுத்தைக்கூட்டி
மாறிவிடுசூக்ஷமவை வழிசொல்லாதே
கோனென்றசிவன்மேலே ஆணை ஆணை
கொடுமைஅப்பாதொடுகுறியை கூறெண்ணுதே. 14

582. அப்புவின் தொழில்

கூறவொண்ணுஅப்புக்குத் தொழிலைச்செய்தால்
சூலைத்துவிடும்வாய்வெழுத்தைப் பிடித்துமாறு
நேரஒண்ணுஅக்கினியைச் சேர்த்துக்கொண்டு
நிலைக்குமேதண்ணீரும் நிமிஷம்அற்று
மாறவொண்ணுமற்றெழுத்தை மறந்துவிடுமப்பா
மகத்தானகூடழிந்து மறித்துப்போகும்
சேரவொண்ணுதேவியின்மேல் ஆணை ஆணை
ஜெகத்தோர்க்குசூக்ஷம்அது தெரியொண்ணுதே. 15

583. தேயுவின் தொழில்

தெரியாததேயுவுக்குத் தொழிலைச்செய்தால்
சீரானஅப்பெழுத்தை திறமாய்ஓது
குறியானஆகாச எழுத்தைச்சேர்த்து
கூட்டியேரெண்டும்ஒன்ருய் மாறும்போது
வரியானஅக்கினியும் அமர்ந்துபோகும்
மக்களேஅப்பதுவும் உண்டுபோகும்
செரியானதேவியின்மேல் ஆணை ஆணை
ஜெகத்திலுள்ளமாந்தருக்கு செப்பொண்ணுதே. 16

584. வாயுவின் தொழில்

செப்பொண்ணுவாயுவுக்குத் தொழிலைச்செய்தால்
திடமானபிருதிவியைப் பிடித்துமாறு
அப்பவோஅவ்வெழுத்தை கூடச்சேர்த்து
அநுசரித்தால்வாயுவதும் அடங்கிப்போகும்
இப்புவியில்செப்பாதே மற்றெழுத்தைச்சேராது
இதமானஇத்தொழிலை வெளிக்காட்டாதே

தப்பில்லாஅரிசிவன்மேல் ஆணை ஆணை
தரணிதனில்சூக்ஷமதை தான்விள்ளாதே. 17

585. ஆகாசத்தின் தொழில்

விள்ளாதேஆகாச வெளிக்குச்செய்தால்
விதமானபிருதிவியும் அப்புங்கூட்டி
தள்ளாதேஅக்கினியும் வாய்வும்சேர்த்து
தப்பாமல்நாலெழுத்தும் பிடித்துஓதி
நில்லாதஆகாச வெளியில்தாக்கு
நிலைக்குமடாஇத்தொழிலும் நிலைத்துப்போச்சு
பொல்லாதசிவன்உமைமேல் ஆணை ஆணை
பூதலத்தில்செப்பாதே புகழ்ந்துபாரே. 18

586. வசியம்

புகழ்ந்துபார்வசியமது செய்வீர் ஆகில்
புண்ணியனே ஆகாசம் வாய்வும்சேர்த்து
நிகழ்ந்துபார்அக்கினியும் சேர்த்துக்கொண்டு
நீசெய்யும்தொழிலை அங்கேநிலைத்துஓது
மகிழ்ந்துபோம்சகலமுமே வசியம்ஆகும்
மன்னர்முதல்தேவதையும் ணைங்குவார்கள்
இகழ்ந்துபார்இத்தொழிலை வெளிவிடாதே
என்னதான்சொன்னாலும் இயம்பொண்ணாதே. 19

587. இதுவுமது

இயம்புவாய்அவ்வெழுத்தை வசியம்பண்ண
என்மகனே அக்கினியை கூடச்சேரு
மயம்புவதுஅக்கினியை வசியம்பண்ண
மக்களேவாயுவெழுத்தை பிடித்துமாறு
தயம்புவதுஅப்பெழுத்தை வசியம்பண்ண
தண்மையுள்ளபிரதியைப் பிடித்துஓது
தயம்புவதுபிருதிவியை வசியம்பண்ண
சுத்தமுள்ளஅக்கினியை ஓதிப்பாரே. 20

588. இதுவுமது

ஓதுவதுபெரிதல்ல மனமொன்றாக
உண்மைகொண்டுஐம்புலனை நிறுத்திக்கொண்டு
தேறுவதுசெய்தொழிலும் மனம்போல்ஆகும்
திடமானபட்சிவித்தை வழிஇதப்பா
கூறுவதுஉலகிலுள்ள மாந்தர்க்கப்பா
குணங்குறியும்சத்துருமித்துரு காணவிட்டால்

மீறிவிடும்ஒருவரால் அடக்கொண்ணுது
மேலானமுனிவர்சொன்ன வாக்குத்தானே. 21

589. இதுவுமது

வாக்குமனம்ஒன்ருக நிறுத்தவேணும்
வழியானகுருவாக்கால் அறியவேணும்
ஏர்க்குமதுசத்தியமாய் நினைக்கவேணும்
என்மகனே சூக்ஷமதை அறியவேணும்
பாக்கியமாம்பழிபாவம் காணவேணும்
பண்பானபட்சிவித்தை பதியவேணும்
நோக்குவதுசிவன்பாதம் நோக்கவேணும்
நுண்மைஉள்ளசுருக்கத்தை சொன்னேன்பாரே. 22

590. இதுவுமது

சொன்னேனேபாவபுண்ணியம் அறியவேணும்
சூட்டாதக்கருமறைப்பை வெளியாய்ச்சொன்னேன்
கண்ணேகேள்கண்மணியே உலகம்பேயாம்
கருதாதஉலகத்தோர் பழிக்கஞ்சார்கள்
விண்ஞானசாஸ்திரத்தைப் பதினெண்பேரும்
விளம்பாமல்உலகத்தில் மறைத்துவைத்தார்
தன்னுலேஎளியோர்க்கு வேணும்என்று
தண்மையாய்ச்சொல்லிவைத்தேன் அடக்கம்பண்ணே. 23

591. இதுவுமது

அடக்கமதுசெய்துகொண்டு அறிவாய்பாரு
அப்பனேதேவியுட சாபம்பொல்லாது
வெடக்கெடுத்தநாய்போலே உலகமீதில்
வீணருடன்பேசினுல் வருவதென்ன
மடக்கொடியாள் ஆசையினுல்மனம்வேருகி
வஞ்சனைபொய்சூது கோபத்தைத்தள்ளு
தொடக்குறிகள் அறிவாலேஅறிந்துபாரு
சொன்னதினுல்பாவம்வந்து சூழுந்தானே. 24

592. இதுவுமது

சூழுமேபாவபுண்ணியம் அறிந்துகொண்டு
சூக்ஷமென்றகருவையெல்லாம் அடக்கஞ்செய்து

வாழுமேஉலகத்தோ டொத்துவாழ்ந்து
வளமானமனங்கொண்டு பழக்கஞ்செய்து
கோளுமேஅக்கினியில் மனதைப்பூட்டி
கொண்டாடிஅடிபணிந்து தாயைப்போற்று
நாளுமேதுதிசெய்து அக்கினியைப்போற்று
நலம்பெருவாய்உலகத்தின் துயரம்போச்சே. 25

593. சுப்பிரமணியர் தியானம்

போச்சென்றுசுப்பிரமணியர் தியானங்கேளு
புகழாகஹ்றீங் கென்றுசொல்லு
காச்சென்றுகங்கங் ககனறுஞ்சொல்லு
கனமானமரிங்கென்று நிங்ரிங்கென்று
வாச்சென்றுபாலசுப்பிரமணியதேவா நமாவென்று
வாகாகநாலுநாள் லட்சமோது
நற்சுண்டல்வடை தோசையப்பமோடு
நலமானதேனுடனேபால் பழமும்வையே. 26

594. இதுவுமது

வையப்பாபுஷ்பமொடு புனுகுகெந்தம்
வளமானகஸ்தூரி பச்சைபூரம்வைநீ
கையப்பாமண்டலந்தா னுபசாரஞ்செய்
கனமானகுகன்அலரும் வசியமாவார்
மெய்யப்பாசுப்பிரமணியர் தியானம்வேணும்
மேலானவைகனுட தியானம்வேணும்
ஐயப்பாஇவைவிட்டால் பக்ஷியேது
அன்பானயோகம்விட்டால் வீணும்பாரே. 27

595. இதுவுமது

வீணப்பாவீணுகப் புலம்புவார்கள்
வினையரியார்பொருளறியார் பட்டிமாடு
ஆணப்பா ஆணுவத்தால் அழிந்துபோவார்
அப்பனே அதின்சூக்ஷம் கண்டுகேளு
மாணப்பாபக்ஷிகள்தன் வலுவோமெத்த
மகத்தானபக்ஷிகளின் காலங்கண்டு
தானப்பாஒவ்வொன்றை தனித்துநோக்கி
தன்மையாயுரைத்திடுவாய் கொல்லத்தானே. 28

596. எதிரியை வெல்வது

கொள்ளவேஎதிரிக்கி சத்துருவைக்கூட்டி
குணமாகச்செய்கிறவன் மித்துருவைச்சேர்ந்து
அள்ளவேசத்துருவின் முகத்தைநோக்கி
அப்பனேசெய்தொழிலை முன்னேவைத்து
விள்ளவேநிருவாண ரூபங்கொண்டு
வீற்றிருந்துமந்திரத்தை ஓதும்போது
துள்ளவேயெடுத்துவிடும் யெதிரியில்லை
துருசாகஅணுவளவும் நிசூயமாய்ச்செய்யே. 29

597. பேத வியல்பு

நிட்சயமாய்வூணுக்குக் குள்ளனுவான்
நிலைத்ததோர் அரசுக்கு நெடியனுவான்
பட்சமுள்ளகடைதனக்கு சமானமாவான்
பகாறியநித்திரைக்கு மிகவும்குள்ளன்
அட்சமாமரணத்துக் கூனனென்று
அறிவதனல்பட்சிகளின் தொழிலைக்கண்டு
எச்சமயப்பேர்களுமே தெளிவாய்க்காண
இயம்பினேன் அறுநூற்றில் இயல்பாய்வூணே. 30

598. இதுவுமது

ஆமடாஇந்நூலை பதனம்பண்ணு
அன்பானநல்லோர்கள் பதனஞ்செய்வார்
வாமடாஇன்னூலைப் பெற்றுக்கொண்டு
வளமாகபூசைசெய்து பதனம்செய்து
காமடாமுக்காலைச் சொல்லும்தோணும்
கனமானஇந்நூலை கைவிடாதே
நாமடாகருத்துன்னித் தெளிந்துபாரு
நலமானகருமானச் சுருக்கம்முற்றே. 31

599. வியாதி அறியும்படி

வூணுக்குசிற்சிலநோயாம் உரக்கத்தில்தலைகழுத்து
பேணியஅரசுநெஞ்சில் பிணியுண்டாம்நடக்கக்காவில்
காணுமேசாவுதன்னில் அரையினில்காகங்காணும்
ஆணுவங்கொள்ளாநீதான் அறிந்திடும்உண்மைதானே 32

600. பேதப்பட்சி வெண்பா

வல்லூருகாணவந்தான் வளர்ஆந்தைபொய்யுரைப்பான்
செல்லாருங்காகம்திருடவந்தான் - பொல்லாத
கோழியேபோர்க்குவந்தான் கோலமயில்கலகம்
ஆழியாய்பேதம்அறி. 33

601. மச்சம் அறியும்படி

வல்லூறறைமுதுகுவளர் ஆந்தைஉச்சிகைக்கீழ்
பொல்லாதகாகம்புயமார் - நல்லாய்கேள்
கோழிமுகங்கண்டம்கோதை தொடைமுழங்கால்
பாழிலாமச்சமெனப்பார். 34

602. இதுவுமது

வாழ்வதுதான்ரோமரிஷி சொன்னவாக்கியம்
மறவாதஒருநாளும் மனதுறுதிகொண்டு
ஆள்வதுதான்சத்தியமாய் எண்ணிக்கொண்டு
அப்பனேசாஸ்திரத்தைப் பழக்கம்பண்ணி
தாழ்வதுதான்வாருது சகலமுமேசித்தி
தன்மையென்றதேவியுமே அக்கினியாகும்
பாழ்வதுதான்போகாது பட்சிவித்தைஅப்பா
பஞ்சபட்சிஅறுநூறும் பலிக்குமுற்றே. 35

கருமானச்சுருக்கப் படலம் முற்றிற்று

ரோமரிஷியார் அருளிச்செய்த
விநாடி பஞ்சபட்சி
ஆக பாடல் - 93 முற்றுப்பெற்றது.

கடவுள் துணை

பஞ்சபட்சி பலதிரட்டு

முகவுரை

உன்னிஒருவன்உரைத்த முதல்எழுத்தைப்
பன்னிப்பறவையாய்ப் பாவித்து - முன்னி
உதய திசைப்பட்சிஉண்மை உரைக்கக்
கதைதகாவியப்பொருளை காப்பு. 1

நூல் முதலிய பொருள்

பூமேவுநான்முகத்துப் புங்கவன்சிருஷ்டிப்பெவையும்
மாமேவுபட்சிஐந்தாய்வாழுமே - சீர்மேவும்
வல்லூருபேர்ஆந்தை வன்காகம்கோழிமயில்
எல்லாப்பிறப்பும் இது. 2

ஒன்று திசைக்குருவி ஒன்றுவரும்ஓர்து த
நின்றநிலை ஆருடத்தின் சேரும் - நன்றி
வழுவாதுவந்தாய்ந்து வல்லவர்கள்சொன்ன
முழுவாகடத்தின் முறை. 3

மொழிக்குமுதல்எழுத்தே முன்உதிக்கும்ஆங்கே
பழிக்கும்அவன்தன் நிலையும் பார்த்து - வழிப்பெறவே
பேரால்வருவனவும் பேதம்அறிந்துணரவும்
ஆராய்ந்து சொல்வதறி. 4

பூர்வபட்சத்தின் அட்சரப்பட்சி

அம்முதல்நான்கும் வல்லூரும்முதல்இரண்டாந்தை
உம்முதல்இரண்டுகாகம் ஒன்கோழி - எம்முதல்ரெண்
டுற்றமயில்ஒம்முதல்ரெண்டும் குறில்ஆண்பெண்கொடிதாம்
ஒற்றுய்தம்பேடென்றுணர். 5

அமரபட்சத்தின் அட்சரப்பட்சி

இம்முதல்இரண்டும் வல்லூறும்முதல்இரண்டாந்தை
ஒம்முதல்ரெண்டும் உயர்காகம் - அம்முதல்நாள்
காகும்இவைகோழி ஆனமயில்எம்முதல்ரெண்
டாகும்அமர பட்சமே. 6

ஈண்டு வெண்பா முதலிய செய்யுட்களில் பிரித்திருப்பது செய்
சொல்லாகவே யன்றிச் சீரும்தளையுமாகப் பிரித்ததன்று.

பூர்வபட்சம் பகல்வாரம் 7-ற்கும் ஊண்பட்சி

செவ்வாய்அருக்கன்வல்லூறாண் சிறந்ததிங்கள்புதன்ஆந்தை
கவ்வார்வியாழங்காரண்டம்கருதும் வெள்ளிகோழி - அதாம்
மவ்வார்சனியின்மயில்உண்ணும்மானே பூர்வப்பகல்அதனில்
இவ்வாறின்னூல்குறுமுனிவர் இயம்பலுற்றார்உலகுக்கே. 7

அமரபட்சம் பகல்வாரம் 7-ற்கும் ஊண்பட்சி

திங்கள்சனிமயில்ஆம்செய் அருக்கன்கோழிஅதாம்
பொங்குபுதன்காகம் போஜனம்ஆம் - மங்கையே
அந்தணனுக்காந்தை அணிபுகாக்குவல்லூறு
சந்ததமும்புற்பகற்கே சாற்று. 8

பூர்வபட்சம் இரவுவாரம் 7-ற்கும் ஊண்பட்சி

ஞாயிறுசெவ்வாய்காரண்டம் நல்லபுந்திமதிகோழி
மாயப்பொன்னேமயில்ஆகும் வளரும்வெள்ளிவல்லூறும்
ஓயாஆந்தைசனிஉண்ணும்உபரம் கங்குல்உணர்க்கென்ன
ஆயும்வேதக்குருமுனிவர்அருளால் அறைந்தஅரும்பொருளே. 9

அமரபட்சம் இரவுவாரம் 7-ற்கும் ஊண்பட்சி

மந்தன்சோமன்கோழியின்ஊண் மானேவெள்ளிமயில்உண்
புந்திஆந்தைபோஜனம்ஆம் ரெண்டினிற்காகம்இரை அருந்தும்
சிந்தைமகிழ்ந்தசேய்இரவிதினத்தில் வல்லூறமுதுசெயும்
அந்தித்தோன்றும்பிற்பக்கத் தடைவுசொன்னோம்அறிநன்றே. 10

பூர்வபட்சவாரம் 7-ற்கும் படுபட்சி

அருக்கன்வெள்ளிமுனிமரணம் அணிசேர்செம்பொன்காரியுடன்
நெருக்கும்வல்லூறேமரணம் நெறியாய்காகம்மதிமரணம்
செருக்குஞ்செவ்வாய்கோழிஅதாம் சேர்ந்தபுத்திமயில்மரணம்
கருக்கும்குழலாய்முற்பக்கம் கடிகைஅறுப்பான்சாவாமே. 11

அமரபட்சம் 7-ற்கும் படுபட்சி

கூறிடும்திங்கள்ஆந்தை குலவுசெயல்வல்லூறும்
மீறியஅருக்கன்காகம் வெள்ளியும்புதனும்மஞ்ஞை
ஏறியசனிவியாழம் கோழிஆம்இயம்புங்காலை
ஆறுபத்தாகும்கன்னல் அளவுசாமம்அமரபட்சம். 12

பூர்வபட்சம் பகல்இரவு 2-ற்கும் பட்சி ஒன்றன் தொழில்முறை.

உண்டுநடந்துஉல்காண்டு நித்திரைஆயத்
தாண்டம்உறமுற்பகலில் சாவாகும்உண்டே
அரசாய்இறந்துவழி அன்னேவம்போய்
இரவாய்உறங்கும்இடை. 13

அமரபட்சம் பகல் இரவு 2-ற்கும் பட்சி ஒன்றின் தொழில்முறை.

உண்டுடனேசெத்து முறங்கிஅரசாண்டு
மண்டிவழிநடக்கும் மாமயிலே - அன்றிரவில்
உண்டும்உறங்கி உடனேநடந்திரந்து
கண்டரசன் ஆகும் எனக்காண். 14

பட்சம் 2-ற்கும் கடைநிலைப் பட்சிகள்

அறிவானபூருவத்தில் மரணம்உண்ணும்
அப்பனேஅவ்விரவில் தூக்கம்உண்ணும்
கரியானஅமரத்தில் நடைதான்உண்ணும்
கண்டுசொன்னேம்பின்இரவில் அரசன்உண்ணும்
வரியானஅட்சரங்கள் பிரித்துப்பார்த்தோர்
வகைஅறிவார்மற்றோர்கள் அறியமாட்டார்
நெறியாகச்சொன்னோர்கள் பெரியோர்ஐயா
நிட்சயமாய்க்கும்பமுனி நிகழ்த்தினரே. 15

பூர்வபட்சம் பகல்ஜாமம் 5-ற்கும் பட்சிகளின் 5-தொழில்முறை

வலிஉண்ண ஆந்தைவழி நடக்கக்காகம்
உலகாளும்கோழிஉறக்கம் - கலாபமயில்
செற்றுப்போம்என்றேசெயல் உறைத்தால்பூர்வத்தின்
உற்றபலன் ஆம்என்றுணர். 16

நினைவின்மயில்உண்ண நேர்நடக்கவல்லூர்
றினிதாங்தையேஅரசன் ஆகத் - தனியனுய்
கறுத்தகொடிதூங்கிவிழக் காசினியிற்கோழி
இறக்கம்முற்பக்கப் பகல். 17

அறிவானகோழி அமுதுண்ணத்தோகை
விரிவாய்நடக்கவலி வேந்தாய் - செறிஆந்தை
நித்திரை ஆம்காகம் நெடிதிறக்கும்பூர்வத்தில்
நித்தபலன் ஆகும் நினை. 18

பூர்வத்தின்பகலிற் காகம்பொசிக்க
ஊர்நடக்கக்கோழி உலகாளத் - தோர்மயில்தான்
வல்லூறுறங்கமடிந்துவிடும் ஆந்தையது
நல்லாய்நவில்வ தறி. 19

உண்ணப்படின் ஆந்தை ஊர்நடக்ககாக்கையது
மண் ஆளக்கோழி மயில்தூங்கப் - பெண்ணே
தவியாதவல்லூறு தான்இறக்கும்கண்டாய்
இவைபூர்வப்பகல் ஆம்எண். 20

பூர்வபட்சம் இரவு ஜாமம் 5-ற்கும் பட்சிகள் 5-ன் தொழில்முறை

அமுதுசெய்யக்காக்கை அடாஆந்தைசெல்ல
சமர்இடும்வல்லூறரசன் ஆகத் - திமிரம்உற்றுத்
தூங்கிவிழத்தோகையது துஞ்சிவிழுமேகோழி
ஈங்குமுற்பக்கத்திரவினில். 21

தோகைஉண்ணக்கோழித் தொடர்ந்தூர்ப்பயணமுறக்
காகம்அரசாளமுனிக் கண்டுயிலச் - சாகுமே
வல்லூருமுற்பக்கமா இரவில்ஆம்என்றூர்
சொல்லும்ஊறும்முன்னோர் துணிந்து. 22

ஆந்தைஉண்ணவல்லூரது நடக்கத்தோகைமயில்
வேந்தனும்கோழிவிழி துயிலும் - மாய்ந்துவிடும்
காகம்அதுபக்கத்திரவில் இவைதான்
ஆகும்என்றூர்முன்னோர் அறிந்து. 23

கோழிஉண்ணக்காகம் குலாவிவழிநடக்க
எழுலகும்ஆந்தை யினிதாளத் - தாழ்வில்லா
வல்லூறுதூக்கம் மயில்முடியும்முன் இரவில்
வல்லோர் உரைத்தவழி. 24

வல்லூருதான்உண்ண வர்னனமயில்நடக்க
பல்என்றகோழிபதிஆள - நல்லாய்கேள்
ஆகல்உறும்பாகம் அனந்தல்செய் ஆந்தைசாமம்
எதில்முற்பக்க இரவில். 25

அமரபட்சம் பகல்சாமம் 5-ற்கும் பட்சிகள் 5-ன் தொழில்முறை.

மயில்உண்ணக்கோழிஅது மண்ஆளக்காகம்
உயிர்அழியஆந்தைதான் ஓடச் - சயனம்
சிகரம்உறும்வல்லூறு தான்செயவேசெய்யும்
பகரும்அமர பகலத்தின். 26

ஆந்தைஉண்ணவல்லூறரசுசெய மாமயில்தான்
மாய்ந்துவிடக்கோழி வழிநடக்க - நேர்ந்தசொரு
காகமேநித்திரையாம் காணும்அமரபட்சத்
தாகும்பகலில் அறி. 27

அமுதுசெயக்கோழி அரசாளக்காகம்
மமதைஉறும்ஆந்தை மடியத் - திமிரமுடன்
எற்புறும்வல்லூறேக மாமயில்உறங்கிவிடும்
பிற்பகலில்ஈங்கி விதனைப்பேசு. 28

உணர்வுள்ளவல்லூ றுலகாளமஞ்சை
பிணம்ஆகக்கோழி பெறிதும் - துணைஇன்றிக்
காக்கைநடந்து செலக்கண்டாந்தை கண்டுயிலும்
போக்கும்பகலில் புகல். 29

கொடிவுண்ண ஆந்தை குவலயம்தான் ஆள
மடிவாகவல்லூறுமஞ்சை - நடைஅதுவாய்
ஒப்பரியகோழிஉறங்குமே பிற்பக்கத்
தப்பகலில்ஆம் என்றறி. 30

அமரபட்சம் இரவுஜாமம் 5-ற்கும் பட்சிகள் 5-ன்
தொழில்முறை.

உண்டுஉண்ணமஞ்ஞைஉலந்தாள வல்லூறு
மண்டலத்தில்ஆந்தைமடியவே - கண்டுகொடி
ஊர்க்குசெலக்கோழி உறங்கிவிடும்மேதினியில்
ஏர்க்கும்ஒருபின் இரவினில். 31

பொசிக்கவலியன் புவிஆளஆந்தை
நசிக்கஊற்காகம்நடக்கத் - துசிக்கோழி
தோகைதுஞ்சும்பின் இரவில் தோகாய்மலயம்உறு
வாகைசேர் மாமுனிவன்வாக்கு. 32

முனிஉண்ணக்காகம் முயன்றுளச்சேவல்
இனிசாகத்தோகைமயில் - ஏகத்தனியான
வலியனேகண்ணுறங்கும் மாதேஉலகிற்
பெலஊனப்பின் இரவினில். 33

காகம்உண்ணக்கோழிஅது காசினியைஆளமயில்
சாகவல்லூறுதான் நடக்க - யோகம்உள்ள
நித்திரையாம்பின்னிரவில் நிர்மலசுமுத்தில்ஆம்
பத்திரையாம் சொன்னநெறி. 34

போசனம்ஆகக்கோழி பூவுலகாலத்தொகை
நாசம்உறும்வல்லூறு நல்ஆந்தை - யோசனையாய்
தான்செல்லும்காகம் சயனம்அதாம்பின்னிரவில்
மான்செயலும் கண்ணும்மதி. 35

பூர்வபட்சம் பகல் தொழில்முறை 5-ற்கும் நாழிகை

ஊண்பட்சிக்கொன்றரை ஆம் ஒன்றேகால்தான்நடைக்காகம்
ஏணில்அரசுக்கிரண்டாகும் - வாணுதலாம்
தூங்கும்அதற்கோர் முக்கால்உஞ்சும்அதற்கோஅரையாம்
பாங்குடைய முதற்பகலினில். 36

பூர்வபட்சம் இரவு தொழில்முறை 5-ற்கும் நாழிகை

உண்பானுக்கொன்றேகால் ஒன்றேகால்தான்நடைக்கும்
குண்ணல்அரசுக்கொன்றும்மால் - பெண்பாவான்
நித்திரைக்கொன்றரையே நின்றதுபோற்பொன்றும்
அதற்கித்தலத்தின் முன்இரவினில். 37

அமரபட்சம் பகல் தொழில்முறை 5-ற்கும் நாழிகை

ஊண்கடிகைரெண்டாகும் ஒத்தநடைஒன்றரையாம்
ஆணின்அரசுமுக்கால் ஆனதோ - வீணின்
உறக்கம்அரைநாழி உயிர்போக்கொன்றேகால்
பாற்கும்பிற் பக்கப்பகல். 38

அமரபட்சம் இரவு தொழில்முறை 5-ற்கும் நாழிகை

ஊண்எழுக்கால்போக்கெழுகால் ஊராள்வதோர்முக்கால்
மானின்றுரங்கும் அறுமுக்கால் - சேனின்று
சாகும்அதுநாற்கால் ஆம்சற்றும்
ஏகும்பிற்பக்க இரவில். 39

பூர்வபட்சத்தின் திதிப்பட்சி

பன்னொன்றுரோன்றுவலி பன்னிரண்டேழ்ரெண்டாந்தை
பன்மூன்றுமூன்றெட்டு காகம்அதாம் - பன்னான்கு
நான்கொன்பதுகோழிப் பதினைந்தொருபத்
தானமயில் பூர்வத்தில்ஆம். 40

அமரபட்சத்தின் திதிப்பட்சி

பதினைந்துபத்தைந்து வல்லூறுநான்கென்
பதுபதினொன்காந்தைமூன்றெட்டும் - பதின்மூன்று
வாயசம்இரண்டேழ் பனிரெண்டுகோழிமயில்
தேய்வுபதி னொன்றுருமே. 41

பூர்வபட்சம் அமரபட்சம் 2-ற்கும் நட்சேத்திரப்பட்சி

ஐந்தாறைந்தைந்தால் அசுவினிநேர்ஆறைந்
தைந்தாறைந்தாக இரேவதிநேர் - முந்திய
பட்சமும்பின்பட்சம் முறையேபகருவர்காண்
பட்சிஐந்தும் உள்ளபடி. 42

பூர்வபட்சம் இராசிப்பட்சி

அறிவுடையாய்ஆடரித்தேன் வல்லூறுஞெண்டே
டுறும்மிதுனம்கன்னிமறையோன் - பிறைசிலைமீன்

---

* தனை பிரிக்குமிடத்து சொற்சொல்லாகப் பிரித்தலினாலே பிரிவுபட்ட மெய்யையும் உயிரையும் ஒன்றுபடுத்தி உயிர்மெய்யிலும் தோன்றின மெய்யைக் கெடுத்தும் பிரித்துக்கொள்க.

காகம்எருது துலேகோழி மகரகும்பத்
தோகைமுதற்பக்கம் இதாமசொல். 43

அமரபட்சம் இராசிப்பட்சி

எருது துலேமீன்வல்லூரியாழ் சிலேசால்ஆந்தை
அரிஅரியைமான் காகம்ஆகும்-மறியுடன்தேள்
வாரணம்ஆம்ஞெண்டுமயில் பிற்பக்கத்
தாரண நூல் சொன்னதறிவு. 44

பூர்வபட்சம் திசைப்பட்சி

சொல்லூறும்பூர்வபக்கத்தில் தொல்கிழக்கு
வல்லூறுதெற்காந்தை லாயகம்மேற்-கல்லூறும்
கூந்தல்நல்லாய்வடக்குகோழி ஆம்மத்திஅது
வாமந்தமயில் ஆகமதி. 45

அமரபட்சம் திசைப்பட்சி

அமரபக்கம்தன்னில் கிழக்காம்
எமன்தன் திசை அதுதான்கோழி-குமாரறுஊறும்
வாரனமேமேற்காகம் வடக்காந்தைமத்திவலி
ஆகும்எனச்சொன்ஞர் அறிந்து. 46

உவாக்கால் திசைப்பட்சி

மத்திமத்தில்வல்லூறுவாழ் ஆந்தைதெற்காகும்
ஒத்ததொருகிழக்காகம் ஒண்காகம்-இத்திசையில்
தெற்சாகம்கோழி சிறந்தமயில்மேற்காகம்
எக்காலும் சாற்றும்இயல். 47

பூர்வபட்சம் அங்கப்பட்சி

மிதம்ஆகும்கூந்தல்விரல் உடன்தோள்மார்பு
துதிசோகப் பட்டைகுய்யம்தோகை-சதுர்ஆனீ
நெற்றிதோண்மார்பின்கீழ் நீள்பிடரிஊருவை
உற்றதொரு கோழிஎனஓது. 48

ஓதரியகாசிவிழி முழங்கைஉந்திமுதி
கேதில்முழுங்கால்காகம் என்பவரே-போதுருவாய்
நல்லமுன்கைபின்புபக்கம் நாட்டும்நடுமுதுகு
வல்லகெண்டை ஆந்தைஅதுஆம். 49

ஆமேகழுத்து மணிகட்டுகீழாம்கை
நாமேவலதுபக்கம் நல்மருங்கு-பூங்குழலாய்
வல்லூறுமுற்பக்கம்ஆம் அங்கப்பட்சிஅது
சொல்வாய்முழுதும் துணிந்து. 50

அமரபட்சத்தின் அங்கப்பட்சி

துணிந்துரைப்பாம்கண்டம் மணிகட்டுந்திதோளும்
மணந்தஇடைபூங்கணக்கால் வல்லூ-றுணர்ந்தபடி

நற்கைவயிறுநடுமுதுகு கெண்டைக்கால்
அற்குழமாய் ஆந்தைஎனல்ஆம். 51

குழல்ஆர்ந்தநல்லாய்கேள் மார்பின்கீழ்தொண்டை
எழில்ஆர்ந்த முன்கையேதோளே-முழங்கையோ
டான்றவிறலுடனேகைகீழ் வலப்பக்கம்
என்றஎழில் முதுகோட்டங்கு. 52

ஈங்குரும்நாசி விரிவாய்இடப்பக்கம்
ஓங்கும்முழங்கால்காதம் ஓதுவார்-தீங்கில்நெற்றி
கைப்பட்டமார்புபிடறி துடைகார்குழலாய்
செப்பும்உறும் கோழிஎனச்செப்பு. 53

செப்பும்தலைதோள் சிறந்தகைகீழ்கூந்தலுடன்
மெய்ப்புடையகுய்யன் வியன்மயிலில்ஆம்-பிற்பக்கம்
தன்னில்தொடுகுறியால் சாத்தும்அங்கப்பட்சிஇவை
அன்னநடை மாதேஅறி. 54

அங்கப்பட்சியில் இன்னம் ஒரு அடைவு அகாரசப்தம்
உடையான் அங்கப்பட்சி

காணும்அகாரப் பேரானஉடையகண்டம்முதல்
காணும்சிரகாந்தை கைக்காகம்-பேணுங்
கோழிஉடம்புமயில் முன்பின் ஆகும்வலியன்
தாழ்வில் இருசரணந்தான்.

இகாரசப்தம் உடையான் அங்கப்பட்சி

தானும்இகாரப் பேரான்உடையகண்டமுவல்
காணுர்தலைக்காகம் கைக்கோழி-மானே
உடலேமயில்முன்பின் வல்லூறுகால்தான்
அடல்ஆந்தை அண்டும்எனல்ஆம்.

உகாரசப்தம் உடையான் அங்கப்பட்சி

அண்டும்உகாரப்பேரான் உடையசென்னிமுதல்
கண்டம்வரைக்கோழி ஆம்கைமயிலாம்-உண்டான
வல்லூறுடல் முன்பின்வாழுமே ஆந்தைஅது
நல்லகால்காகம்என நாட்டு.

எகாரசப்தம் உடையான் அங்கப்பட்சி

நாட்டும்எகாரப் பேரான்உடையசென்னிமுதல்
ஊட்டும்கைவல்லாறுடல் ஆந்தை-காட்டிடும்முன்
பின்ஆகும்காகம் பெருத்ததோர்கோழிகால்
நன்னுதலாய் கண்டுநவில்.

ஒகாரசப்தம் உடையான் அங்கப்பட்சி

நவிலும்ஒகாரத்தின் சென்னிவலியன்
தவரும்கைஆந்தை உடல்காகம்-புவியதனில்

தேனே முன் பின்கோழி தேவர்க்கெல்லாம் அடுக்கும்
மானே மயில்கால்மதி. 59

பூர்வபட்சத்தின் பட்சிநிறம்

வல்லூறுபொன்நிறம் ஆம் வாழ்ஆந்தைவெள்ளை அதாம்
செல்லாரும்காகம் சிவப்பாகும் - நல்லாய்கேள்
கோழிநிறம்பச்சை குளிர்த்தோகையேகறுப்பு
நாழிமணக்க நவில். 60

அமரபட்சத்தின் பட்சிநிறம்

ஆந்தைசிவப்பாம் அணிகாகம்பொன்நிறம் ஆம்
வாய்ந்தபச்சை வானமயில்ஆகும் - ஏந்திழையீர்
வெள்ளை ஆம்கோழி விளங்கும்வெகுகறுப்பு
வல்லூறு கண்டுமதி. 61

பூர்வபட்சத்தின் பட்சிக்குணம்

வல்லூறுபார்ப்பான் வளர்ஆந்தைதான்வணிகன்
செல்லாரும்காகம் ஜெகத்தரசன் - நல்லாய்கேள்
கோழியாம்வேளாளன் கூறும்மயில்சண்டாளன்
ஆழியான் சொன்னதறி. 62

அமரபட்சத்தின் பட்சிக்குணம்

பொன்மறையோன் ஆம் வலியன்போர்வேந்தன் ஆந்தைஆம்
துன்னும்எழில்காகம் துணைவணிகன் - மன்னும்
உழுகுலத்தோன்கோழியே ஓதும்கால்பச்சை
இழிகுலத்தோன் என்றேஇறை. 63

பூர்வபட்சத்தின் பட்சிபூதம்

அரியபுவிவல்லூ றப்பாகும்ஆந்தை
கரியதொருகாகம் கனல்ஆம் - பெரியகால்
தேனேநிகர்மொழியாய் சென்கூட்டின்வாரணந்தான்
வான் ஆகும் தோகைமயில். 64

அமரபட்சத்தின் பட்சிபூதம்

வல்லூறுதேயுவாம் வல்ஆந்தைவாயுவாம்
பொல்லாக்கருங்காகம் பூமிஆம் - நல்லாய்கேள்
நீர்ஆகும்கோழிதான் நீலமயில்காகம்ஆம்
கார்ஆர் குழலாய்கனி. 65

பட்சம் 2-ற்கும் பட்சி முக்கால்

ஆந்தைமயில்முற்காலம் ஆனதொருவாரணந்தான்
சேர்ந்தநிகழ்காலம் செப்பிடுமே - வாய்ந்ததொரு
வல்லூறுகாகம் வரும்காலம்காட்டுமே
வல்லோர் உரைத்தவழி. 66

பட்சம் 2-ற்கும் பட்சிதாது மூலசீவன்கள்

வல்லூறுமூலம் வளர்ஆந்தைசீவனும்
சல்லாபமாம்காகம் தாதுவாம் - நல்லாய்கேள்
கோழிமூலத்தாது கோலமயில்சீவதா
தாழியான் சொன்னதறி. 67

பட்சம் 2-ற்கும் பட்சிவடிவு

வல்லூறுநீள்வட்டம் மால்ஆந்தைஐங்கோணம்
அல்ஆகும்காகம் அறுகோணம் - மெல்லியமாய்
கோழிஅதுநாற்கோணம் கோலமயில்முக்கோணம்
ஆழியான் சொன்னதறி. 68

பட்சம் 2-ற்கும் பட்சிகால்

வல்லூறிருகாலாம் வன்காகம்நீர்க்காலாம்
நல்லதிரல்ஆந்தைஅது நாற்காலாம் - சொல்லில்
குறும்கோழிகொம்பாம் குலவும்மயில்பட்சிப்
பெரும்காலாம் என்றிதனைப்பேசு. 69

பட்சம் 2-ற்கும் பட்சிநிலம்

வல்லூறுபாலைவளர் ஆந்தைவண்குறிஞ்சி
நல்லாய்கேள்காகம் அதுநல்மருதம் - சொல்அரிய
வாரணமேமுல்லை வளரும்மயில்நெய்தல்
ஆரணநூல் சொன்னதறி. 70

பட்சம் 2-ற்கும் பட்சிலோகம்

வல்லூறுபொன்னும்வளர் ஆந்தைவெள்ளிஅதாம்
செல்ஆரும்காகம்அது செம்பாகும் - நல்லாய்கேள்
கோழியேவெண்கலம்ஆம் கோலமயில்இரும்பாம்
ஆழியான் சொன்னதறி. 71

பட்சம் 2-ற்கும் பட்சி ஆண்பெண்

வல்லூருகாகம்மயில் மூன்றும்ஆண் ஆகும்
நல்லதிறவுகோல்நாம் சொன்னோம் - நல்லாய்கேள்
ஆந்தைபொற்கோழி பெண் ஆகும்இதேதோழி
தோத்தறிந்து சொல்லும்திறம். 72

பட்சம் 2-ற்கும் சுவை

தித்திக்கும்ஆந்தை சிறுபுளிப்புகோழிஅதாம்
ஒத்தும்ஒருகாகம் இனிதுவர்ப்பாம் - சத்திசெய்யும்
வல்லூறுகாறும் மயில்கைக்கும்என்பரே
அல்லார்குழலாய் அறி. 73

பட்சம் 2-ற்கும் ஆள்வரத்து

வல்லூறுநிற்கின்றான் மாமறையோன்தான்மீண்டான்
வல்லகரும்காகம் வருகின்றான் - மெல்லியலாய்

கோழிதான்ஊர்க்குள்வந்தான் கோவலமாமஞ்ஞைஅரை
நாழிகையிலே வருவான்நாடு. 74

பட்சம் 2-ற்கும் வரவுகால அளவு

கோழிக்குநான்குநாள் குவலயத்திலேமிக்க
வாழும்மடவல்லூறுக் கைந்தேநாள்-கோழிகேள்
காகம்நாள்மூன்றுகும் கார்ஆந்தைநாள்இரண்டு
தோகைமயில் நாள்ஒன்றும்சொல். 75

பட்சம் 2-ற்கும் பட்சிபருவம்

உண்ணும்அதுபலாபலன் உயர்நடைதானேகுமால்
பண்பாம்அரசதுவே பார்வேந்தன்-நண்புடைய
முற்றும்துயில்கிழவன் மோனம்முடிந்தோன்சாவு
பற்றும்பருவப் பயன். 76

பூர்வபட்சத்தின் பட்சிசத்துரு

வலிசத்துருவாயசமும் கோழியாம்கோழி
கலாபமும்தான் ஆந்தை சத்துருஆகும்-கலாபம்வலி
வாயாசம்அதற்குவல்லூறுந்தை கோழிக்காந்தை
வாயாசமும் மஞ்ஞைசத்ருஆம். 77

அமரபட்சத்தின் பட்சிசத்துரு

கோழிமுனிவல்லூறுக் காந்தைக்குமஞ்ஞைவலி
கோழிமஞ்ஞையும் காகத்துறவாம்-கோழிக்குக்
காகமுடன்வல்லூறும் பிற்பகலில்தோகைக்குக்
காகமுடன் ஆந்தைஎனக் காண். 78

பூர்வபட்சம் ஊணின்பலாபலன்

போஜனம்ஆகில்பதிவாழும் போனூர்மீள்வர்போம்கவலை
காசினிவாழுமழைபொழியும் களவும்இல்லைக்கதிர்விளையும்
பேசில்கன்னிப்பேறுகும் பிணியும்தீரும்பெண்பெறுவள்
மாசில்செழும்பொன்வாணிபம்ஆம் மன்னரைவெல்வாய்மாங்குயிலே

பூர்வபட்சம் நடையின்பலாபலன்

யாத்திரைஆகில்நிலைகுலையும் ஒண்ணார்வெல்வர்இருநிதிபோம்
காத்திரம்இல்லாக்கதிர்விளையும் கன்னியர்வாழ்க்கைநன்றுக
மாத்திரள்செல்லும்பொருள்கூடா வேட்கைதவிர்க்துமண்கூடா
சூத்திரம்சொன்னபடியாயே சொன்னூர்பெரியோர்சுரிகுழலே. 80

பூர்வபட்சம் அரசின்பலாபலன்

அரசேசெய்யிற்புவிப்பேறும் அரசராலேபலன்எய்தும்
முரசும்அதிரும்வரிசையுடன் மூடகருமம்தான்விலகும்
பரிசும்பெரியோர்திரள்இடுவர் பழையபிணிபோம்பயம்இல்லை
புரைபோம்களவுந்தான்காணும் போக்கும்இல்லைபொற்கொடியே.

பூர்வபட்சம் நித்திரையின் பலாபலன்

தூங்கில் ஆகும்நோய்மாரா தூரம்போனார் தாம்மீளார்
ஆங்கேகருமம்நன்றாக அரிவைவாழ்க்கைத்தாழ்வாகும்
தீங்கே அல்லால்மழைபொழியாச் செங்நெல்விளையாக்கருகி
ஓங்குமணமும் தாராதே உண்மையாகஉரைத்தோமே. 82

பூர்வபட்சம் மரணத்தின் பலாபலன்

துஞ்சும் ஆகில்சாவுசொல்லும் தொலையாப்பிணியும்தான்எய்தும்
நெஞ்சில்நினைத்தபொருள்கூட நிதியும்காணார்நிலைகுலைவார்
வஞ்சர்நோயும்மிகவுண்டாம் மனையாள்வெறுப்பள்உறவாகாள்
கஞ்சமலர்ஆர்குழலாளே கருத்தால்வுரைத்தெடுத்துரையே. 83

அமரபட்சம் ஊணின்பலாபலன்

கெடுதியும்உடனேகாணார் கிளையுடன்வாழ்வுபேறும்
கடுதியபிணியும்தீரும் கலக்கமோசற்றும்இல்லை
அடைமழைபெருகஉண்டாம் அக்கமும்விவாகம்கண்டாய்
முடுகியபயணம்இல்லை மொழியும்பிற்பக்கஊணே. 84

அமரபட்சம் நடையின்பலாபலன்

வெற்றியும்சுகமும்உண்டாம் வியாதியும்மாறும்பின்பு
பற்றியகருமம்கூடும் பயம்இல்லைஅக்கமும்தாழா
உற்றதோர்கெடுதிகாணும் உறும்மழைஉண்டுதூரத்
துற்றவர்வரவுகூடச்செல்லும்பின் நடக்கத்தோன்றில். 85

அமரபட்சம் அரசின்பலாபலன்

செயமொடுசுகமும்கண்டு சிறந்ததோர்பயணந்தன்னில்
புயல்இடும்மழையும்அற்பம் புவிதனிற்கலக்கம்இல்லை
இயல்பினாற்பெறலாம்வெற்றி இலாபமும்நீள்வதாகும்
பயம்விளையாதுதேய்வின் அரசதாம்பறவை ஆகில். 86

அமரபட்சம் நித்திரையின் பலாபலன்

வன்னியபிணிஅலால் மற்றொருபிணி அதிகம்ஆகும்
மன்னியமழையேயில்லை வைத்தனகெடுதிஆகும்
துன்னியநெஞ்சில்தோஷம் தோன்றிடும்கருமம்செய்யும்
பன்னியபிற்பக்கத்தில் உறங்கும்அப்பறவை ஆகில். 87

அமரபட்சம் மரணத்தின் பலாபலன்

சாவினில்லயமும்உண்டு சலகம்ஆம்கருமம்எல்லாம்
தீவினைப்படும்மற்றன்றிச் செய்யும்நல்வினைகள்ஆகாச்
சாவினில்விழுந்தபட்சித் தாழ்பக்கத்துதிப்பதாலே
பூவினிற்சிறந்தமாதே புகன்றனர்புள்ளின்நூலே. 88

பஞ்சபட்சி பலதிரட்டு மூலம்

முற்றிற்று.